மங்களா
சுபமங்களா
புஷ்பா
தங்கதுரை

மின்நூல் ஆக்கம்: தமிழ் நேசன்

மின்நூல் கூடம்

2017

மங்கலா,
சுப மங்கலா !

புஷ்பா தங்கதுரை

பூம்புகார் பிரசுரம்
15, மன்னார்சாமி கோவில் தெரு,
சென்னை—600 013.

விலை ரூ [redacted]

பூம்புகார் வெளியீடு எண் : 121

முதல் பதிப்பு : டிசம்பர், 1979.
உரிமை : ஆசிரியருக்கே

அச்சிட்டவர்கள் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை-600 014

பதிப்புரை

வளர்ந்து வரும் நாவல், கதை இலக்கிய வளர்ச்சியில் புதிய திருப்பங்களை ஏற்படுத்திய புதுமை எழுத்தாளர்களில் புஷ்பா தங்கதுரை ஒரு முன்னோடியாவார்.

இனியதொரு துள்ளல் நடை, புத்தம் புதிய பாணி, கற்பனை வளம் செறிந்த கதை இவையே புஷ்பா தங்கதுரை அவர்களின் பாணியாகும்.

வாழ்க்கைப் போராட்டத்தில் பகலெல்லாம் அலைந்து திரிந்து, சோர்ந்துபோய் வீட்டுக்கு வந்து ஓய்வாகப் படிப்பவர்களுக்கு ஓர் அமைதியையும், இன்பக் கிளுகிளுப்பையும் அளிப்பன இவரது கதைகளும், நாவல்களும் ஆகும்.

'ஆபாசம், ஆபாசம்' என்று கூச்சலிடுபவர்களுக்கு 'எது ஆபாசம்' என்றதொரு வினா, வெடிகுண்டை வீசுகிறார் புஷ்பா தங்கதுரை.

அவரவர் மனப்பாங்கைப் பொறுத்துதான் ஆபாசமும் — ஆபாசமில்லாததும். கோவில்களிலும், தேர்களிலும் மிதுன சிற்பங்களை ஏன் நம் முன்னோர்கள் செதுக்கி வைத்தனர். ஆண் பெண் உறவை ஆபாசமென்று கருதினால்— புனிதமான கோவில் கோபுரங்களிலும், தேர்களிலும் செதுக்கி வைப்பார்களா? ஆண் பெண் உறவே ஆபாசம் என்றாகிவிட்டால்—நீங்களும் நானும் பிறந்திருக்கவே மாட்டோமே!

சிறைச்சாலைக் கைதிகளைப் பேட்டி கண்டு, அவர்கள் என்ன குற்றம் செய்து சிறைத் தண்டனை அனுபவிக்கிறார்கள் என்பதை எழுதினாரே அது ஆபாசமா?

சிறைக் கைதிகளில் பாதிப்பேர் சொத்து சம்பந்தமாகவும், கொஞ்சம்பேர் பெண் விவகாரங்களிலும், மற்றும் சிலர் திருடு, கொலை, கொள்ளை ஆகியவற்றிற்குமாக சிறைக்கு வந்தவர்கள். அவர்கள் தன் வரலாற்றைக் கூறும்போது அவர்களின் மனப்போக்கு, ஆசாபாசங்கள் அனைத்தும் தெள்ளெனத் தெரிகிறது. தன் மனைவி கள்ளநாயகனோடு உறவு கொள்வதைக் கண்ட கணவன், கோபாவேசத்தால்—மனைவி தன் கண் முன்னாலேயே துரோகம் செய்வதைப் பொறுக்க முடியாமல் கொலை செய்து விடுகிறான். சிறைக்கு வருகிறான். பேட்டி காணும்போது தன் அவல நிலையைக் கூறி கண்ணீர் வடிக்கிறான். அந்த உண்மை வரலாற்றை எழுதினால் அது ஆபாசக் களஞ்சியமா?

மனிதகுலம் தோன்றிய முதல் இது நாள் வரை விபச்சாரம் இருந்துதான் வருகிறது. சமூகத்தின் வடிகாலாக அது இருந்து வந்திருக்கிறது. நாம் பொற்காலம் என்று புகழ்ந்து கொள்ளுகிறோமே அந்த சங்க காலத்திலும் பரத்தையர்—வேசியர் இருந்திருக்கிறார்கள். பரத்தையர் வீட்டுக்கு இரவில் சென்று காலையில் தன் வீடு திரும்பிய கணவனுடன், ஊடல் செய்யும் மனைவியின் கோபத்தைத்தான் நம் புலவர்கள் இன்ப ரசம் சொட்டச் சொட்ட பாடல்களாகப் புனைந்திருக்கிறார்கள். இது ஆபாசமில்லையா? ஆபாசம் என்று எடுத்துக்

கொண்டால் நம் சங்க இலக்கியத்தில் பெரும் பகுதி ஆபாச இலக்கியங்களாகத்தான் தெரியும்

விபசாரத்தையே தொழிலாகக் கொண்ட பெண்களை ஆசிரியர் பேட்டி கண்டு, அவர்கள் இந்தத் தொழிலுக்கு ஏன் வந்தார்கள் என்பதை எழுதியிருக்கிறார்கள். அதிலே ஒரு சிலர் விரும்பியே வந்திருக்கிறார்கள். ஒரு சிலர் வறுமையின் காரணமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு சிலரே பலாத்காரமாக இந்தத் தொழிலுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் மூலகாரணம் பொருளாதாரமே என்பதனையும், மனித குலத்தின் மாறாத குணம்தான் என்பதையும் இந்த பேட்டிகளின் மூலம் புஷ்பா தங்கதுரை வாசகர்களுக்கு உணர்த்தியிருக்கிறார்.

இது ஆபாசமா? சமுதாயத்தில் உள்ள குற்றங் குறைகள்தானே அவை. அவற்றை சுட்டிக் காட்டினால் — உடனே அவற்றை 'ஆபாசம், ஆபாசம்' என்று கூக்குரல் போடுகிறோம்; மாஜி எழுத்தாளர்கள் மாநாடு போட்டுப் புலம்புகிறார்கள்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் தோன்றியது, நீதி நூல்களிலேயே முன்னணியில் நிற்கும் திருக்குறள். அத் திருக்குறளில் 'பிறர்மனை நயவாப் பேராண்மை'யைப் பற்றி எழுதியிருக்கிறார். 'இருட்டில் வேசியைத் தழுவுவது பிணத்தைத் தழுவுவதற்கு ஒப்பாகும்' என்கிறார். எனவே இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரும் வேசி வீடு சென்ற கணவனும், பிறன் மனைவியைச் சேர்ந்த கயவனும் இருந்திருக்கிறார்கள் என்பதைத் திருவள்ளுவர் நமக்கு உணர்த்துகிறார்.

எனவே, மனிதகுல சமுதாயம் என்றென்றும் தன் போக்கிலேதான் போகும். அதை எவராலும் திருத்த முடியாது. தெய்வப் புலவர் திருவள்ளுவர் காலத்துக்கு முன்னரும் இந்த 'ஆபாசம்' இருந்திருக்கிறது. அது கூடவே கூடாது என்று குறள் எழுதி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் அது இருந்து கொண்டுதான் இருக்கிறது. வள்ளுவரே இதில் தோற்றுவிட்டார் என்றால் மிகையாகாது.

ஆகவே, நாம் எது ஆபாசம், எது ஆபாசமில்லை என்ற வாதத்தில் இறங்காமல்—இந்த அவசர உலகத்தில் பொழுது போக்குக்காகப் படிக்க இனிமையான கதைகளையும், நாவல்களையும் சமைக்கும் எழுத்தாளர்களை ஊக்குவிப்போம்.

இலக்கிய உலகில் என்றென்றும் நாம் இம்மாதிரியான வாதப் பிரதிவாதங்களைக் கண்டிருக்கிறோம்; கேட்டிருக்கிறோம்.

சமுதாயம் இந்த வெற்றுக் கூச்சல்களை காது கொடுத்துக் கேட்பதில்லை என்பதை திருவள்ளுவர் காலத்திலிருந்து இந்நாள் வரை கண்டிருக்கிறோம்.

புதிய பாணியில் நவீன நாவலாக 'மங்கலா, சுப மங்கலா!' படைக்கப்பட்டிருக்கிறது.

புஷ்பா தங்கதுரை வாசகர்களை ஏமாற்றுவதில்லை. வாசகர்களைக் கவர்வதில் அவர் வல்லவர். இதுவரை அவர் நூல்களை ரசித்த தமிழக மக்கள் இந் நூலையும் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

பூம்புகார் பிரசுரம்

மங்கலா, சுப மங்கலா:

1

ஆதிச்சநல்லூர் பரம்பைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நிறையப்பேர் மாட்டார்கள். விஷயத்தைச் சொல்கிறேன். கவனமாகக் கேளுங்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இந்தப் பரம்பு இருக்கிறது. திருநெல்வேலியிலிருந்து, திருச்செந்தூர் போகும் சாலையில் 12-வது மைலில் இருக்கிறது. இதன் வடக்குப்புறத்தில் தாம்பிரவருணி நதி ஓடுகிறது. (பாதுகாக்கப்பட்ட இடம் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் வைத்துள்ள போர்டை இன்றும் இங்கே சாலை ஓரத்தில் பார்க்கலாம்.)

இந்த ஊர் ஒரு பெரிய ரிக்கார்டை ஏற்படுத்தி உள்ளது.

உலகத்திலேயே மிக விஸ்தாரமான மயானம் இந்த ஆதிச்சநல்லூரில்தான் இருக்கிறது.

மயானத்தின் விஸ்தீரணம் மொத்தம் நூற்றுப் பதினைன்கு ஏக்கர்!

இவ்வளவு விஸ்தீரணமுள்ள மயானம் உலகில் வேறு எங்கேயும் கிடையாது.

இந்த மயானத்தில் என்ன விசேஷம்?

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் (சிலர் 4,000 ஆண்டுகள் என்கிறார்கள்) ஆயிரக்கணக்கான மனிதச் சடலங்களை இந்த மயானத்தில் புதைத்திருக்கிறார்கள்.

மண் தாழிகளில் சடலங்களை வைத்து அவற்றை ஆறடி தூரங்களிலும் இரண்டடியிலிருந்து பன்னிரண்டடி ஆழம் வரையிலும் புதைத்து வைத்திருக்கிறார்கள். இந்தத் தாழிகளை முதுமக்கள் தாழி என்று அழைக்கிறார்கள்.

சென்ற நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் சென்னை மாகாண தொல்பொருள் இலாகாவைச் சேர்ந்த ஏ. ரீ என்ற ஆங்கிலேயர் இந்தத் தாழிகள் சிலவற்றைத் தோண்டி எடுத்தார்.

ஆவலோடு திறந்து பார்த்தார். உள்ளே எலும்புக் கூடுகள் இருந்தன. ஆனால் பொடிந்துபோயிருந்தன.

அவரது ஆராய்ச்சிக்கு மண்டை ஓடு முழுமையாகக் கிடைக்கவேண்டும். இதற்காக அவர் பல தாழிகளை வெட்டி எடுத்தார். கடைசியில் அவர் விரும்பியது கிடைத்துவிட்டது. சில தாழிகளில் மண்டையோடுகள் முழுமையாகக் கிடைத்தன.

இவை தவிர தாழிகளின் உள்ளே அந்நாளைய ஆபரணங்கள் பல கிடைத்தன. பொன்னால் செய்யப்பட்ட "பட்டம்", வெண்கலம், கிளிஞ்சல், எலும்பு இவைகளால் செய்யப்பட்ட வளையங்கள், கங்கணங்கள், பிராணி உருவங்கள் எல்லாம் உள்ளே இருந்தன.

ஆராய்ச்சிக்காக ரீ எடுத்த பல மண்டை ஓடுகளில் இரண்டு ஓடுகள் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டன. பல நம்நாட்டு பொருட்காட்சி சாலைகளுக்குச் சென்றன. (சென்னைப் பொருட்காட்சி சாலையில் இவற்றை இன்றும் பார்க்கலாம்.)

இங்கிலாந்திற்குப் போன இரண்டு மண்டை ஓடுகளை டாக்டர் ஜே. பீட்டி என்பவர் மான்செஸ்டரிலிருந்து லண்டனுக்கு கொண்டு போய்க்கொண்டிருந்தார். அப்போது ஒரு விபத்து ஏற்பட்டது.

விபத்தில் ஒரு ஓடு உடைந்து விட்டது. மற்றொன்று சுக்கு நூறாகிவிட்டது.

சுக்குநூறாகிவிட்ட ஓடு ஒரு பெண்ணின் தலை ஓடு!

இதுவரை படித்தவுடன், நான் ஏதோ எக்ஸார்ஸிஸ்ட் கதை எழுதுகிறேன் என்று நினைத்துவிடவேண்டாம்.

கதையில் ஏதாவது ஒரு த்ரில் உண்டாக்க முடியுமா என்று பார்த்தேன். அவ்வளவுதான்!

மண்டை ஓட்டின் கதையை இங்கேயே நிறுத்திக் கொள்கிறேன்.

2

"காணோம்" தலைப்பின் கீழ் காலைப் பத்திரிகையில் அந்தப் பெண்ணின் படத்தைப் பார்த்தவர்கள் திகைத்துப் போயிருப்பார்கள்.

மங்கலா என்ற பெண் அரை போஸ்ட்கார்டு சைஸில் அவ்வளவு அழகாக இருந்தாள். கண்கள் இரண்டும் எமரால்ட்கள்! புருவம் மெல்லிசாய் நீண்டு கறும்கோடு பரவி, கன்னம் செக்கச் சிவந்து .....போட்டோவிலேயே பளிச்சென்று அழகு சொட்டிக் கொண்டிருந்தது.

மங்கலா என்ற 23 வயது பெண்ணை கடந்த 24-ந் தேதியிலிருந்து காணவில்லை. துப்புக் கொடுக்கிறவர்களுக்கு வெகுமதி அளிக்கப்படும்.

கீழே ஒரு முகவரி கொடுக்கப்பட்டிருந்தது.

படத்தைப் பார்த்தவர்கள் நிச்சயமாக அந்தப் பெண்ணைப்பற்றி சிறிதாவது யோசித்திருப்பார்கள்.

அவள் மறைந்த காரணம் எதுவாக இருக்கும்?

கொலையா? கற்பழிப்பா? கடத்தலா? இவை அனைத்துமா?

அடுத்த நாள் பத்திரிகையில் காரசாரமாய் ஒரு கடிதம் வந்தது.

—நாட்டில் கடத்தல்கள் அதிகமாகிவிட்டன. தினமும் 'காணோம்' என்ற தலைப்பில் பெண்களின் படங்கள் வெளியாகின்றன.

போலீசார் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. சாதாரண மனிதருக்குத் தெரிவது அவர்களுக்குத்தெரியாதா? நாடே சீரழிந்து வருகிறது—

என்று தேவகோட்டை ராமசாமி வெளுத்துக் கட்டி இருந்தார்.

இன்ஸ்பெக்டர் சிங் (குற்ற ஆய்வு) இரண்டு நாள் செய்திகளையும் பேப்பரில் படித்திருந்தார்.

ராமசாமியின் காரசாரத்தைப் படித்த போது புன்னகை வந்தது.

'காணோம்' என்று போடுகிற விளம்பரங்களில் முக்கால் வாசியும் திருட்டுக் காதலனுடன் ஓடுகிற கேஸ் — ஆசை முடிந்துவிட்டால் அம்மா திரும்பி வந்துவிடுவாள். இல்லாவிட்டால் ஐயா திருப்பி அனுப்பிவிடுவார். இதைப் புரிந்து கொள்ளாமல் படிச்சவங்க எதை எதையாவது எழுதிடறாங்களே என்று நினைத்தார்.

பத்து மணிக்கு அலுவலகத்திற்குப் போனார்.

பத்தாவது நிமிஷம்!

டெலிபோன் அடித்தது.

அசிஸ்டெண்ட் கமிஷனர்தான் கூப்பிட்டார்.

—சிங்! எக்ஸ்பிரஸ்லே வெளியாகியிருக்கிற லெட்டரைப் படிச்சீங்களா?

—படிச்சேன்.

—கமிஷனர் விசாரணை செய்யச் சொல்றார்.

—பெற்றோர்கள் கம்ப்ளெய்ன்ட் கொடுத்திருக்காங்களா?

—கொடுக்கலேன்னு தெரிஞ்சுது.

—ஸார்! நான் சொல்றேன்னு நினைக்காதீங்க! அப்பா அம்மாக்களே கம்ப்ளெய்ண்ட் கொடுக்கலேனு நாம் இந்தக் கேஸை எடுக்க வேண்டிய அவசியம் என்ன?

—சிங்! நானே கமிஷனர்கிட்டே விவாதம் பண்ணிட்டேன். பேப்பர்லே போட்டிருக்கிற நியூஸ்பேரிலே விசாரிக்கச் சொல்றார். நீங்க போய் பர்ஸனலா அவங்க குடும்பத்திலே விசாரிச்சுடணும்.

—எஸ் சார், என்றார் சிங்.

போனைக் கீழே வைத்தார்.

3

நகரத்தின் விளிம்புகளில் நாகரீகமாக எழுந்துகொண்டிருந்த காலனிகளில் ஒன்று அது!

போகும்போதே பெல்பாட்டம் பெண்கள் சைக்கிள் விட்டுப்போய்க் கொண்டிருந்தார்கள்.

சைக்கிள் ஸீட்டில் அவர்களது பின்புறம் அழுந்தியிருந்த அழுத்தமும் அதன் பெருமிதமான தோற்றமும் பளிச்சென்று சிங்கின் கண்களை வெட்டின.

பெடல் செய்யும்போது மிருதுவான பாண்ட் அவர்களது கொழுத்த தொடைப் பகுதிகளை மேலும் கீழுமாக மாறி மாறிக் காண்பித்தன.

— நாம் நினைத்தது சரிதான். இந்தப் பகுதியின் நாகரீகமே அலாதி! இங்கே ஒரு சாதாரணப் பெண்ணுக்குக்கூட என்னவெல்லாமோ நடைபெற வாய்ப்பிருக்கிறது என்று நினைத்தார்.

'டி' ப்ளாக்கின் இரண்டாவது மாடி ஃப்ளாட்டில் மங்கலாவின் குடும்பம் இருந்தது.

அது ஒரு எம். ஐ. ஜி. ஃப்ளாட்.

வாசல் முன்னால் நின்றுகொண்டு பஸ்ஸரை அழுத்தினார். கதவு திறந்தது.

மங்கலாவின் தந்தை ராம்நாத் அவரை வரவேற்றார். இன்ஸ்பெக்டர் சிங் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

ராம்நாத்திற்குத் தொண்டை அடைத்துக் கொண்டிருந்தது. மெதுவாகப் பேசத் தொடங்கினார்.

—நான் ரயில்வே காட்டரிங்லே, வேலை பார்த்தேன். இன்ஸ்பெக்டராக ரிடையர் ஆனேன். மங்கலா என்னுடைய ஒரே பெண். அவளைப் பிள்ளையா வளர்த்துட்டு வந்தேன். நிறைய சுதந்திரம் கொடுத்தேன். நான் சொன்ன கோட்டை தாண்ட மாட்டாள்.

சிங் விசாரணையை ஆரம்பித்தார்.

—உங்க பெண் எப்போ காணாமல் போனா?

—24-ந் தேதி காலையிலே வெளியே போனா! அப்புறம் திரும்பவே இல்லை.

— பதினைந்து நாளாயிடுத்து.

— ஆமாம்.

—மிஸ்டர் ராம்நாத்! நீங்க இந்த விஷயத்தை உடனே ஏன் போலீஸ்லே கம்ப்ளெய்ண்ட் பண்ணலை?

— அப்பவும் பண்ணல்லே! இப்பவும் பண்ண விரும்பல்லே!

—என்ன காரணம்?

—நீங்கள் வீடு தேடிவந்து கேட்டதனுல் சொல்றேன். என் பெண் எங்களுக்கு ஒரு லெட்டர் எழுதி வச்சிருந்தா.

—எங்கே அது?

ராம்நாத் கொண்டுவந்து காண்பித்தார்.

அப்பாவுக்கு,

வணக்கம், இதுவரை வாழ்க்கையில் தங்களுக்குத் தெரியாமல் எதுவும் செய்யவில்லை. இப்போது செய்ய நினைத்தேன் என்பதை நினைத்தாலே மனம் ரொம்பக் கசக்கிறது. இந்தக் கடிதத்தை எழுதவே துணிவு இல்லை. இருந்தாலும் உங்களுக்குக் கவலை ஏற்படக் கூடாது என்பதற்காக எழுதுகிறேன். திரும்பி வரும்போது எல்லாவற்றையும் விவரமாகக் கூறுகிறேன். சுருக்கமாக இப்போது தெரிவித்துக் கொள்கிறேன். நான் வரும்போது திருமணம் ஆனவளாக வந்து சேர்வேன். மூன்று நாட்களில் வந்து விடுவேன். அம்மாவை வருத்தப் படச் சொல்லாதீர்கள்!

உங்கள் பிரியமுள்ள,
மங்கலா

சிங் உதட்டைப் பிதுக்கினுர்.

—உங்க பெண் நீங்க இட்ட கோட்டைத் தாண்ட மாட்டான்னு இப்போத்தான் சொன்னீங்க! ஆனு அவ தாண்டியிருக்கிறு! தேர் இஸ் நோ கேஸ்! என்றுர்.

—கேஸ் இருக்குன்னு நான் சொல்லல்லியே! காரமாகச் சொன்னுர் ராம்நாத்.

—சிங் திரும்பினுர்.

—நீங்க பாட்டுக்கு விளம்பரம் கொடுத்துடறீங்க. அதைப் பார்த்து நாலு பேர் லெட்டர் எழுதறுங்க!...

சிங் விறுவிறு என்று நடந்தார்.

—கதவு வரை போய்விட்டார்.

—இன்ஸ்பெக்டர் ஸார்! ராம்நாத் அழைத்தார்.

—ஒரே ஒரு செகண்ட்.

சிங் திரும்பிப் பார்த்தார்.

— நான் சொல்றதை தயவு செய்து கேளுங்க. விளம்பரம் கொடுத்ததற்குக் காரணம் இருக்கு. பெண் மூணு நாளிலே திரும்பி வரேன்னு சொன்னு. இதோடே அஞ்சு மூணுநாள் ஓடிடுத்து. திரும்பி வரவில்லே. அவளை நினைவுபடுத்தறதுக்காகத் தான் முக்கியமா இந்த விளம்பரம் கொடுத்தேன். அதோட எனக்கு இன்னொரு பயமும் இருந்தது. ஒருவேளை இவளை யாராவது எங்கேயாவது கடத்திப் போய் வச்சிருந்தால்...... அப்படி யாராவது துப்பு கொடுக்க மாட்டாங்களான்னு ஒரு ஆசை! அவ்வளவுதான் என்றார் ராம்நாத்.

—இந்த மாதிரி கேஸிலே மூணு நாள்னு சொல்லுவாங்க. முப்பது நாள் ஹாயாக இருந்துட்டு வருவாங்க! இளமைப் பருவம் ஸார்! உங்க பெண் படிச்சவங்கதானே! கவலைப் படாதீங்க!

இன்ஸ்பெக்டர் போவதற்குத் தலைப்பட்டார்.

—இன்ஸ்பெக்டர்!

சிங் திரும்பினார்.

—ஒரே ஒரு வேண்டுகோள்!

சிங் அவர் அருகே சென்றார்.

—இப்படி வாருங்கள்.

அவரை அழைத்துக் கொண்டு அடுத்த அறைக்குப் போனார்.

குளிர்ச்சியான அறை. அதன் உள்ளே பார்த்ததும் சிங் திடுக்கிட்டார்,

மங்கலாவின் பெரிய அளவு படம் அங்கே தொங்கிக் கொண்டிருந்தது.

அதன் கீழே துவண்டு போய் படுத்துக்கிடந்தாள் ஒரு அம்மாள்.

—என் மனைவி, ஸார்! சரியாச் சாப்பிட்டு பத்து நாளாச்சு! ஒரே அழுகைதான் போங்கள்.

இருவரும் சென்று அந்த அம்மாளைப் பார்த்தார்கள்.

அவர்கள் வந்ததை அவள் பொருட்படுத்தினதாகவே தெரியவில்லை.

மங்கலாவின் போட்டோவை சிங் பார்த்தார்.

விழியின் நீலக் கருமையில் ஏதோ ஒரு உணர்ச்சி தேங்கிக் கிடந்தது.

அது என்ன உணர்ச்சி?

வெளியில் வந்ததும் சிங் ராம்நாத்தைப் பார்த்தார்.

—என் மனைவிக்காகத்தான், ஸார், நான் விளம்பரம் போட்டது. அவளுக்கு என்னவோ மங்கலா உயிரோடு திரும்பி வரணும்னு ஆசை! என்று சொல்லி கண்களைத் துடைத்தார் ராம்நாத்.

—நிச்சயம் வருவா! பயப்படாதீங்க! என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார் சிங்.

4

மங்கலாவின் தந்தை ராம்நாத்தை சிங் விசாரித்து விட்டு வந்து ஒரு வாரம் கூட ஆகியிருக்காது. தன் பெண்ணைக் காணவில்லை என்று முறையாய் ஒரு கம்ப் ளெய்ண்டை ராம்நாத் கொடுத்து விட்டார். ஏ. ஸி. யும் இதுபற்றி சிங்கிடம் முறையாக அறிவித்துவிட்டார்.

இனி கேஸை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டியது தான்.

ஒரு கொலை நடந்து சடலம் கிடைத்துவிட்டால் லட்டு மாதிரி கேஸில் இறங்கிவிடலாம். விறு விறு என்று துப்புகள் துலங்கும்!

அவை ஒவ்வொன்ருகத் தெரிந்துகொண்டு மேலே மேலே போவதில் ஒரு குஷி.

கடைசியில் கொலை செய்தவனை பக்கென்று பிடித்துக் கொள்ளும்போது, பெரிய அல்ஜீப்ரா ஈக்வேஷன் படிப்படியாகக் கரைந்து, கடைசியில் விடை மட்டும் தனியாக நிற்கும் போது ஒரு மகிழ்ச்சி ஏற்படுமே, அதுபோன்ற ஒரு அனுபவம் ஏற்படுகிறது.

உண்மையில் குற்ற ஆய்வும் ஒரு அல்ஜீப்ரா கணக்குத் தான்.

ஆனல் இங்கே சடலமே இல்லை. ஆள் கொலை செய்யப் பட்டாளா என்று தெரியவில்லை. கடத்தப்பட்டதாகவும் தெரியவில்லை. ஏதோ வெறும் சூனியத்தைத் துழாவுவது போலிருந்தது.

இருந்தாலும் சூனியத்திலிருந்து ஒரு உருவத்தை வர வழைப்பதுதான் அவரது சாமர்த்தியம்.

மாலையில் சிங் வேட்டைக்குப் புறப்பட்டார்.

முதலில் அவருக்குத் தெரிய வேண்டியது மங்கலா ஒரு நல்ல பெண்ணு?

அவளது சிநேகித, சிநேகிதிகள் யார் யார்?

அவளது காதலன் யார்?

அவள் எங்கெங்கெல்லாம் போவது வழக்கம்?

இவற்றை நிச்சயம் தெரிந்து கொள்ளவேண்டும்.

5

—மிஸ்டர் ராம்நாத்! நீங்கள் மனம் திறந்து பேச வேண்டும். உங்கள் பெண் மீது உங்களுக்கு ஏதாவது சந்தேகம் உண்டா?

ராம்நாத் வீட்டு ஹாலில் சிங் உட்கார்ந்து கொண்டு விசாரணை நடத்திக்கொண்டிருந்தார்.

—என் பெண் மீது சந்தேகமே கிடையாது. இன்ஸ்பெக்டர், என்றார் ராம்நாத், அழுத்தமாக.

—நீங்க காண்பித்தீர்களே, லெட்டர் அது உங்க பெண் கையெழுத்துதானே?

—ஆமாம்.

—அதிலே ஏதாவது சந்தேகம் உண்டா?

—இல்லை.

—ஒருவேளை யாராவது பலவந்தப்படுத்தி இதை எழுதச் சொல்லியிருப்பாங்களா?

—இருக்கலாம்.

—கடிதம் உங்க வீட்டிலேதானே இருந்தது?

—ஆமாம்!

—அதை வீட்டுக்குள்ளே இருக்கும் போதுதானே அவள் எழுதியிருக்க முடியும்?

—ஆமாம்.

—அப்போ, பலவந்தம் என்கிற பேச்சுக்கே இடம் இல்லையே.

—இல்லைதான்.

—அப்போ அவளா மனசு இஷ்டப்பட்டு இதை எழுதி யிருக்கா.

—இருக்கலாம்.

—இருக்கலாம் இல்லே. இருக்கணும், என்றார் சிங் அழுத்தமாக.

—சரி.

—அப்போ உங்க பெண் யாருடனே உங்களுக்கு தெரி யாமல் சிநேகம் வச்சிருக்கா, இல்லையா?

தந்தைக்குப் பெண் பாசம் இன்னும் தலைதூக்கி இருந்தது. பெண் மீது எந்தக் குற்றம் சாட்டப்படுவதையும் அவர் விரும்பவில்லை. மேலே அவர் பேசவில்லை.

—மிஸ்டர் ராம்நாத்! உங்கள் பெண் காணமல் போய் விட்டாள். அவளைக் கண்டுபிடிக்க நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதில் நீங்கள் சரியாகப் பதில் சொல்லா விட்டால் எதுவுமே செய்ய முடியாது என்றார் சிங்.

ராம்நாத்துக்கு அவர் சொன்னதன் அர்த்தம் தெரிந் திருக்க வேண்டும்.

—சரியாச் சொல்றேன் இன்ஸ்பெக்டர் என்றார் ஈனமான குரலில்.

பிறகு சொல்ல ஆரம்பித்தார்.

மங்கலா எம். ஏ. பாஸ் செய்திருந்தாள். வீட்டில் கலகலப்பாக இருப்பாள். நன்றாகப் பாடுவாள். பெயிண்டிங் இப்போதுதான் ஆரம்பித்தாள். கிடார் மேல் ஆசை! ஆனால் சரியாகப் பழகிக்கொள்ள நேரமில்லை. ஜெர்மன் கற்றுக் கொண்டிருந்தாள். இந்தியின் மீதும் நாட்டம். அதற்கும் அவகாசம் இல்லை.

சொல்லப்போனால் எல்லாவற்றின் மீதிலும் அவளுக்கு இண்ட்ரெஸ்ட். யோகாவிலிருந்து, ராக்கெட்கள் வரை அவளை ஈர்க்காதது எதுவும் இல்லை.

இவ்வளவு துறைகளில் விருப்பம் இருப்பதால் வீட்டுக்கு எவ்வளவோ பேர்கள் வருவார்கள். ஆண்களும் பெண் களும், இளவயதினர்களும் வயோதிகர்களும். எல்லோ ரிடமும் சரிசமமாகப் பழகுவாள் அவள். ஆனால் எல்லா நட்புகளையும் அளவோடு வைத்துக் கொள்வாள்.

அங்கே வரும் ஆண்கள் யார் மீதும் ராம்நாத்துக்குச் சந்தேகம் கிடையாது.

—அவர்கள் யாவரும் நல்லவர்கள் என்று சொல்ல முடியுமா? என்றார் சிங்.

—அது என்னால் சொல்ல முடியாது.

—இந்த ஆண்களில் யாராவது மங்கலாவுடன் அதிகம் பழக முயற்சித்தார்களா?

—அப்படி ஏதும்இல்லை.

—சரி, ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள். உங்க பெண் லவ் பண்றதாக இருந்தால் யாரைப் பண்ணி யிருக்க முடியும். சொல்ல முடியுமா? என்றார்.

—நிச்சயமாத் தெரியாது. எல்லாரிடமும் சமமாத்தான் பழகினா.

—உங்க வீட்டுக்கு வந்த ஆண்களில் யார் கொஞ்சம் அதிகமா வருவாங்க?

—ஒரு புரொபஸர் வருவார். முப்பத்தைந்து வயது. நானாபாய் கல்லூரியிலே கெமிஸ்டிரி புரொபசர். ஆனால் அவர் கல்யாணம் ஆனவர். அவர் மேலே எதுவும் சொல் வதற்கு இல்லை.

சிங் விசாரணையை முடித்துக் கொண்டார். போகும் போது ராம்நாத்துக்கு ஒரே ஒரு வேண்டுகோள் மட்டும் விடுத்தார். வீட்டில் மங்கலாவின் பொருள்கள் எது இருந் தாலும் அவற்றைப் பத்திரமாகக் காப்பாற்ற வேண்டும். அவற்றைக் கலைத்துவிடக் கூடாது.

ராம்நாத் அதற்கு ஒத்துக்கொண்டார்.

6

மங்கலா எம். ஏ. படித்துக் கொண்டிருந்தபோதுதான் அது நிகழ்ந்தது.

வெளியூர் பெண்களுக்காக கல்லூரியில் ஒரு ஹாஸ்டல் இருந்தது.

அங்கே சில பெண் புரொபசர்களும் தங்கிஇருந்தார்கள்.

இவர்களில் மிஸ் மனோகரி என்பவள் பெயர் மாணவி களிடையே அடிக்கடி அடிபட்டது.

அவளுக்கு நாற்பது வயது.

அவளது அறைக்கு சாதாரணமாக யாரும் போக மாட்டார்கள். மனோகரி மாணவிகளிடம் 'வல்கராக' பேசு வாள், 'வல்கராக' நடந்து கொள்வாள் என்று எங்கும் அபிப்பிராயம் பரவி இருந்தது.

இந்த மனோகரி பலமுறை மங்கலாவைத் தன் அறைக்கு வரும்படி அழைத்திருந்தாள்.

மங்கலா ஒருநாள் தைரியமுடன் அவள் அறைக்குப் போனாள்.

மகிழ்ச்சியோடு மனோகரி அவளை வரவேற்றுப் பேசினாள். பிறகு பாத்ரூமுக்குள் குளிக்கப் போய் விட்டாள்.

மேஜை மீது இருந்த ஒரு புத்தகத்தை மங்கலா மெள்ள இழுத்து, புரட்டினாள்.

'செக்ஷுவல் இன்டிமஸி' என்று தலைப்பு. உள்ளே பிரித்தாள்.

புத்தகம் முழுவதையுமே வாசிக்க வேண்டிய தேவை யில்லை.

ரசமான பகுதிகளை மனோகரி அண்டர்லைன் செய்திருந்தாள். படிக்கப் படிக்கச் சுவையாக இருந்தது.

மற்றொரு புத்தகத்தை இழுத்தாள்.

'மை ஸ்லீப்லெஸ் நைட்ஸ்'

உள்ளே பிரித்தாள். ரசமான கட்டங்கள் முழித்துக் கொண்டு முன்னால் வந்தன.

வாசிக்க ஆரம்பித்தாள். அதற்குள் மனோகரி குளித்து விட்ட சப்தம் கேட்கவே மூடிவைத்தாள்.

வரும்போதே மனோகரி மங்கலாவை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டு வந்தாள்.

—புத்தகத்தைப் பாரு மங்கலா. சும்மா பாரு! உலகத்திலே எவ்வளவோ விஷயம் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு. எனக்கு அந்தக் காலத்திலே இதெல்லாம் கிடைக்காமல் போச்சு. உன் வயசு மட்டும் எனக்கு இப்போ இருந்தால்...என்றாள்.

பிறகு கண்ணாடி முன் நின்று தலையைச் சீவிக் கொண்டு, வாழ்க்கையில் எதுவும் அருவருக்கத்தக்கதல்ல. வெறுக்கத் தக்கதல்ல, தள்ளத் தக்கதல்ல என்று ஒரு லெக்சர் அடித்தாள்.

மங்கலா வெறும் புன்னகையோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.

7

அதன் பிறகு மங்கலா இரண்டுமுறை மனோகரியின் அறைக்குப் போயிருந்தாள்.

இரண்டு முறைகளிலும் மனேகரி அவளிடம் மேஜை மீது இருக்கும் புத்தகங்களைக் காட்டி—ம், உனக்குப் பிடிச்சதை எடுத்துப் படிச்சுக்க. எல்லாத்தையும் படிச்சுத் தெரிஞ்சுக் கணும். களவும் கற்றுமற, என்று சொல்லிப் புன்னகை புரிந்தாள்.

—இல்லே, மேடம் எனக்கு இதிலே இன்ட்ரெஸ்ட் இல்லே, என்று கூறினாள் மங்கலா.

—நீ ஒண்ணு, உனக்குச் சின்ன வயசுதானே. இதெல்லாம் தெரிஞ்சு வச்சுக்கணும். மேனாட்டிலே எல்லாம் அப்படித் தான்.

ஒரு புரோபசர் இப்படிப் பேசுவது மங்கலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

8

மூன்றும் முறையாக ஒருநாள் மாலே வேளையில் திடீ ரென்று மங்கலா வந்து சேர்ந்தாள். அப்போது வகுப்புகள் முடிந்து மனேகரி தன் அறைக்கு வந்து முகம், கை, கால் கழுவிவிட்டு பவுடர் அடித்துக் கொண்டிருந்த நேரம்.

மேக்-அப் போட்டுவிட்டு எழுந்திருக்கும் போதுதான் கதவைத் திறந்து கொண்டு மங்கலா உள்ளே வந்தாள்.

—கம் இன் என்று புன்னகையோடு மனேகரி கூறினாள். மங்கலா மெல்ல நடந்து உள்ளே வந்தாள்.

அவள் 'சிக்'காக நடப்பதே மனேகரியின் கண்களில் விழுந்தது. மெல்லிசான இடுப்பும் அதில் அவளது பாண்டின் பட்டை இறுக்கிய இறுக்கமும் அவள் கண்களில் விழுந்தன.

ஒரு கணம் அவளேப் பார்த்து மனேகரி அப்படியே நின்றாள்.

மங்கலா புன்னகை புரிந்தாள்.

அதன் வசீகரந்தான் மனேகரியை வெகுநாட்களாக இழுத்துக் கொண்டிருந்தது.

இன்று அது மனேகரியை மிகவும் கவர்ந்து விட்டது.

ஒரு கணத்தில் அவள் பவுடர் டின்னைக் கீழே வைத்தாள்.

—ஓ, மங்கலா என்று சொல்லி அவளைக் கட்டி ஒரு முத்தம் இட்டாள்.

பிறகு, மங்கலா யோசிக்குமுன் அவளை இறுக அணைத்தாள். மங்கலா முயற்சி செய்தும் அவள் விடவில்லை.

கடைசியில் மங்கலா திணறிக் கொண்டு தன்னை விடுவித்தாள். கலைந்துபோன ஆடைகளைச் சரிசெய்தாள். மூச்சு இரைத்து, நெற்றியில் வியர்வை அரும்பியது.

—மேடம் என்று இரைந்தாள்.—நீங்கள் இவ்வளவு மோசமாக நடப்பீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை. ஒரு ஆண்பிள்ளையை விட மூர்க்கத்தனமாக நடந்தீர்கள். நான் உங்களை வெறுக்கிறேன் என்று சொல்லிவிட்டு மடமடவென்று வெளியே போனுள்.

ஒரு வாரத்திற்குப் பிறகு மங்கலா ஒரு லேடி டாக்டரை சந்திக்க நேர்ந்தபோது, மனேகரியின் அதிசயமான செய்கைகளைப் பற்றி அவரிடம் விவரித்துக் கூறினுள்.

டாக்டர் சிரித்தாள்.

—ஓ! ஷி இஸ் எ லெஸ்பியன்! என்ருள்.

9

அன்று காலையில் இன்ஸ்பெக்டர் சிங் அஸிஸ்டெண்ட் கமிஷனரைப் பார்க்கப் போயிருந்தார்.

தீர்வு காணுமல் இருக்கும் பல பிரச்னைகளைப் பற்றி பேசிய பிறகு ஏ. ஸி. மங்கலாவின் கேஸிற்கு வந்தார்.

—அந்தப் பெண்ணைப் பற்றி ஏதாவது தெரிஞ்சுதா?

—இல்லை, ஸார்! விசாரணை ஆரம்பிச்சிருக்கிறேன், எப்படிப் போகிறது பார்க்கலாம் என்ருர்.

—உங்களுக்கு என்ன சிங்? ஞன திருஷ்டியிலேயே எல்லாம் கண்டு பிடிச்சுடுவீங்க என்ருர்.

அலுவலகத்திற்கு வந்ததும் சிங்குக்கு அந்தக் கவலைதான் வந்தது. எப்படியும் இந்தக் கேஸில் ஏதாவது ஒரு முனையைக் கண்டுபிடித்தாக வேண்டும். எப்படிக் கண்டு பிடிப்பது.

முதலில் மங்கலா ஒரு நல்ல பெண்ணு என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அக்கம் பக்கத்தார்கள்தான் எப்போதுமே பெரிய நீதிபதிகள்.

அவர்கள் சட்டென்று ஒரு பெண்ணைப் பற்றிய உண்மைகளைக் கூறிவிடுவார்கள்.

திட்டம் வகுத்தார். முதலில் மங்கலா வீடு இருக்கும் பகுதியில் 'பி' ப்ளாக்கிலும், 'ஜி' ப்ளாக்கிலும் கேட்க வேண்டியது.

அதன் பிறகு விசாரணையை மங்கலாவின் சிநேகிதிகளிடம் திருப்ப வேண்டியது.

ப்ளாக்குகளில் போய் விசாரித்தார். இரண்டு இடங்களிலும் நல்ல ரிப்போர்ட்கள்தான் வந்தன—மங்கலாவா? அவள் ஒரு அபூர்வப் பிறவி! மற்றப் பெண்கள் அவளைப் போல் நடந்தால் எவ்வளவோ மேல் என்ருர்கள்.

இனி சிநேகிதிகளை விசாரிக்க வேண்டியதுதான். எந்த சிநேகிதி அகப்படுவாள்? அவள் எங்கே இருப்பாள்?

நேராக லேடி பெண்டிங் பெண்கள் கல்லூரிக்குப் போஞர்.

பிரின்ஸ்பால் மிஸ். எம். ஆர். டோக் ஒரு ஆங்கிலோ இந்தியன்.

சிங் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் அன்போடு உபசரித்தாள்.

மங்கலாவைப் பற்றித் தெரியவேண்டும் என்று சொன்னதும்,

ஓ, ஷி வாஸ் எ குட் கேர்ல்! நல்ல ஒழுக்கங்கள்! நல்ல நடவடிக்கைகள் என்றாள்.

—மேடம்! உங்கள் கல்லூரியில் போன இரண்டாம் வருஷம் பாஸ் பண்ணின எம். ஏ. மாணவிகளின் க்ரூப் போட்டோ இருக்கிறதா? என்று கேட்டார்.

இருக்கிறது என்று சொல்வதற்கு முன்னாலேயே மிஸ் டோக் மணியை அடித்து—டிருமலே, டிருமலே! என்று கூப்பிட்டாள்.

திருமலை, நாமம் போட்டுக்கொண்டிருந்த அறுபத்தைந்து வயதுக்காரர், தலைப்பாகையுடன் உள்ளே வந்தார். முகம் எல்லாம் வெள்ளை மயிர்.

அவரிடம் படத்தைக் கேட்டாள் டோக்.

படம் ஐந்து நிமிடத்தில் வந்தது.

அது ஒரு பெரிய படம். ஹிஸ்டரி க்ரூபில் நாற்பது பேர் படித்தார்கள். நாற்பது பேரும் போட்டோவில் இருந்தார்கள்.

சிங் மங்கலாவைக் கவனித்தார். அவள் போட்டோ ஜெனிக்காக இருந்தாள். பிறகு ஒவ்வொரு பெண்ணையும் உற்றுப் பார்த்தார்.

தலை நிமிர்ந்து,—மேடம் இந்த போட்டோவை என்னிடம் இரண்டு நாட்கள் தர முடியுமா? என்று கேட்டார்.

—ஓ! என்று கையைப் பிசைந்தாள் டோக்!—நான் கமிட்டியிடம் கேட்க வேண்டுமே என்றாள் தொடர்ந்து.

—அது எப்போது முடியும்?

—அடுத்த மாதம் ஐந்தாந் தேதிதான் கமிட்டி கூடுகிறது.

போச்சுப் போஎன்றுமனதில் நினைத்தார் சிங்!

டோக் இன்னும் கையைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

—சரி மேடம்! இங்கேயே பார்த்துவிட்டுப் போகிறேன். நான் சிறிது அவகாசம் எடுத்துக்கொள்வேன். ஆட்சேபனை இல்லையே! என்றார்.

—நாட் அட் ஆல்! என்றாள் டோக், கைகள் இப்போது சுலபமாகப் பிரிந்து விட்டன.

டோக் டேபிள் லைட்டைப் போட்டாள்.

சிங் ஆராய்ச்சியில் இறங்கினார்.

எல்லாப் பெண்களையும் விசாரிப்பது என்பது கடினம். விசாரித்தும் பிரயோசனம் இருக்காது. சரியான பெண்ணைத் தேர்ந்தெடுத்தால் ஏதாவது விஷயம் வெளிவரும்.

க்ரூப் போட்டோவில் இருந்த மாணவிகள் ஒவ்வொருத்தரையும் உற்றுப் பார்த்துக்கொண்டே போனார். சில மாணவிகளிடம் சிறிது நேரம் அதிகமாகத் தங்கினார். அவர் தமது ஆராய்ச்சியை முடிக்க அரை மணிநேரம் ஆகியது. மிஸ் டோக் தமது ஸாக்ஸ் கால்களை மாற்றிமாற்றி வைத்துக் கொண்டிருந்தாள்.

கடைசியில் லதாவையும் காந்தாமணியையும் தேர்ந்து எடுத்தார்.

10

—நோ, மிஸ் லதா! எனக்கு வேண்டிய விஷயம் வேறே! நாலு வருஷமா மங்கலா கிட்டே பழகினேன்னு

சொன்னீங்க! அவளுடைய அந்தரங்க நடவடிக்கை பற்றித் தான் தெரிந்து கொள்ளணும். அதுதான் இந்தக் கேஸுக்கு உதவியாக இருக்கும், என்றார் சிங்.

லதா ஒரு மிலிட்டரி ஆபீசரின் பெண்! பெரிய ஹாலில் கம்மீஸ் போட்டுக்கொண்டு கால்மேல் காலை இறுக்கி வைத்துக்கொண்டு பேசினாள்.

—இன்ஸ்பெக்டர்! எங்க ரெண்டுபேர் கிட்டேயும் அந்தரங்க நடிவடிக்கைன்னு எதுவும் கிடையாது. நாங்கள் மனசில் நினைத்ததைப் பேசுவோம்! பேசுவதை நினைப்போம்! அவ்வளவுதான்.

சிங்குக்குக் கஷ்டமாக இருந்தது......எப்படி இவளிடம் விளக்குவது.

—நோ, மிஸ் லதா! எனக்கு வேண்டிய விஷயம் வேறு விதமானது· மங்கலா காணமல் போய்விட்டாள். அப்படி போனதன் காரணங்களை ஆராய வேண்டும். அதற்கு அவளுடைய அந்தரங்க வாழ்க்கை தேவை. கொஞ்சம் வெளிப் படையாகக் கேட்கிறேன். அவளது செக்ஸ் வாழ்க்கை எப்படி?

லதா குலுங்கிச் சிரித்தாள். உடம்பெல்லாம் குலுங்கியது. மேலே இரு இளமைகளும் குலுங்கியதைப் பார்த்து சிங் முகத்தை வேறு புறம் திருப்பினார்.

—இன்ஸ்பெக்டர்! நல்ல கேள்வி கேட்டீர்கள். மங்கலா ஒரு கண்ணியமான பெண். ஒழுக்கமானவள். திருமணத்திற்கு முன் செக்ஸ் வாழ்க்கையில் ஈடுபட மாட்டாள்.

—நோ நோ மிஸ் லதா! நான் அப்படி ஈடுபடுவாள் என்று சொல்லவில்லை. செக்ஸ் விஷயத்தில் அவளது அபிப் பிராயங்கள் என்ன? விருப்பங்கள் என்ன? அதைத்தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

—அவள் என்னிடம் எதையும் சொன்னது கிடையாது.

—காதலைப்பற்றிக் கூடவா?

—காதலைப் பற்றியும் கூடத்தான். அவளுக்கு ப்ளாட் டோனிக் லவ் பிடிக்கும் என்று ஒருமுறை சொல்லியிருக்கிறாள். காதல் தோல்வி அடைஞ்சாத்தான் நிரந்தரமா இருக்கும் என்று இன்னொரு முறை சொல்லியிருக்கிறாள். இவ்வளவுதான்.

—யாரையேனும் காதலிக்கிறேன் என்று சொன்னாளா?

—ஊஹ்ூம், சொல்லவேயில்லை.

—பாய் ஃப்ரண்ட்ஸ் யாராவது உண்டா?

—ஓ காட்! எதுவும் கிடையாது.

—ஆங்கிலப் படம் பார்ப்பாளா?

—பார்ப்பாள்! அவளுக்கு உணர்ச்சிமயமான படங்கள் தான் பிடிக்கும். வேறு எதுவும் பிடிக்காது.

லதாவின் வீட்டை விட்டு வந்தபோது சிங்கிற்கு ஏமாற்றம்தான் எழுந்தது.

துப்பு ஆய்வதற்கான எந்தப் புலனும் கிடைக்கவில்லை என்று நினைத்தார்.

காந்தாமணியின் வீட்டை அடைந்தபோது மாலை மணி ஆறு! 'டிடிக்கும் டிடக்கும்' என்று உள்ளே மேற்கத்திய ரிதம்!

கிளுக் என்று உடையும் சிரிப்புகள்.

வாசலில் வரவேற்பு அறையில் ஜப்பானிய புத்தர்! மழமழப்பான கொழுத்த கண்ணாடியில் சிகரெட்-ஆஷ்-ட்ரே.

சிங், பெயர், உத்தியோகங்களைச் சொன்னதும் காந்தா துள்ளி ஓடி வந்தாள். உள்ளே ஏதோ இன்டோர் ஆட்டம் ஆடியிருக்க வேண்டும். அவள் ஷர்ட்களில் வியர்வை ஊறியிருந்தது. கீழே டைட்ஸ் போட்டிருந்தாள். அதன் வியர்வை வெளியே தெரியவில்லை. எனினும் முழங்காலுக்கு மேல் பசபசத்திருந்தது. மெல்லிய உரோமங்கள் ஒன்றை

ஒன்று ஒட்டி வரைபட ஆறுகள் போல் சின்னக் கிளைகளைக் காண்பித்தன.

சோபாவில் தொப்பென்று உட்கார்ந்தாள். அது அவளை மேலே ஒருமுறை தூக்கிவிட்டு, பிறகு அவளது பின் புறங்களில் இதமாகப் பிடித்துக்கொண்டது.

—மிஸ் மங்கலாவைப் பற்றி விசாரிக்கவேண்டும். அவளைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

தெரிந்தவற்றைச் சொன்னாள்.

எதுவும் இன்ஸ்பெக்டருக்கு உபயோகமில்லாதவை.

—நீங்கள் சொல்வதற்கு ஆட்சேபம் இல்லை என்றால்...... என்று நிறுத்தி காந்தாவைப் பார்த்தார் சிங்.

—அவளது செக்ஸ் வாழ்க்கைதான் எனக்குத் தேவை! சொல்ல முடியுமா?

—ஓ! அது எப்படி எனக்குத் தெரியும், இன்ஸ்பெக்டர்! ஒவ்வொருத்தரும் மறைவுகளில் நடத்துவதை நம்மிடம் சொல்வார்களா? அவரவர் ப்ரைவேட் வாழ்க்கைகளை ரகசியமாகத் தானே வைத்துக் கொள்வார்கள்.

ஆ, சுவாரசியமாகப் பேசுகிறாளே என்று நினைத்தார் சிங்.

—அப்படியானால் மிஸ்! அவள் ஒரு ப்ரைவேட் வாழ்க்கை வைத்திருந்தாள் என்று நம்புகிறீர்களா?

—கட்டாயம் இருக்கவேண்டும்.

—அதை உங்களிடம் சொன்னாளா?

—ஊஹும், சொல்லவில்லை! எந்தப் பெண்தான் அதைச் சொல்வாள்?

சிங்குக்கு ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவு அனுபவ பூர்வமாகப் பேசுகிறாள்! இவள் சொல்வது தான் சரியாக இருக்கவேண்டும்.

—இல்லையே, மிஸ்! ரொம்ப அந்தரங்கமாய் பழகினு, ஒருத்தருடைய வாழ்க்கை முறை தெரிய வரும் இல்லையா?

—வரலாம். வராமலும் இருக்கலாம். மங்கலாவின் வெளிப்புற வாழ்க்கையில் அப்பழுக்கே சொல்ல முடியாது.

—உங்களைப் போல ஒருத்தர் அனுமானமாக் கூடக் கண்டுபிடிக்க முடியும் இல்லையா?

—முடியும்! இவள் விஷயத்தில் அனுமானிக்க முடியலே.

—அனுமானிக்க முடியாவிட்டாலும், அவளிடம் ஏதாவது அந்தரங்கம் இருக்கும்னு நினைச்சீங்களா?

—ஷ்யூர்லி. அநேகமாக இந்த அந்தரங்கம் இல்லாத பெண்களைப் பார்க்கவே முடியாது. சிலவங்க வெளியில் சொல்லுவாங்க! சிலவங்க மாட்டாங்க.

—மங்கலாவிடம் அந்தரங்கம் இருந்ததுன்னு நீங்கள் ஊகிக்கும்படி எதையாவது பார்க்க நேர்ந்ததா?

காந்தா சிரித்தாள்.

இதற்குள் மற்றப் பெண்கள்—அவளது—சிநேகிதிகள் அங்கே ஒவ்வொருவராக வந்து ஓசையில்லாமல் உட்கார்ந் தார்கள். எவ்லோரும் உடம்பை சுத்தமாகத் துடைத் திருந்தார்கள். பசபசப்பு ஏதுமில்லை.

—ஊகத்தைக் கூடச் சொல்லவேண்டுமா?

—ஏன், சொன்னல் என்ன?

—பைத்தியக்காரத்தனமாகத் தோன்றும்.

—இல்லை; எதையும் நான் சரியான கோணத்தில் எடுத்துக்கொள்ள முடியும்.

—நான் ஒரு இன்ட்யூஷன்லேகூடச் சொல்வேன். அது உங்களுக்கு குருட்டு நம்பிக்கையாத் தோணலாம்.

—இல்லை; நான் எல்லாவற்றிலும் நம்பிக்கை வைப் பவள். குருவி ஜோஸ்யத்தில் கூட,

—சொல்றேன். சாமுத்திரிகா லட்சணம் தெரியுமா?

—தெரியாது. கேள்விப்பட்டிருக்கிறேன்.

—சரி. வேண்டாத இடங்களில் ரோமம் அதிகம் இருந்தால் அவளுக்கு ஸெக்ஸ் அதிகம் உண்டு என்பாங்க.

—ஆமாம்.

—மங்கலா இங்கே டேபிள் டென்னிஸ் ஆட வருவாள். பேண்ட் தான் போடுவா! ஷார்ட்ஸ் போட்டுக்கவே மாட்டா! ஒரு நாள் வற்புறுத்தினேன். கூச்சமா இருந்தா. என்ன விஷயம்னு கேட்டேன். ஸாரியை முழங்கால் வரை இழுத்துக் காண்பித்தாள். விஷயம் புரிஞ்சுது. ஒரே ரோமம்!

சிங்குக்குக் கஷ்டமாக இருந்தது.

அவள் தொடர்ந்தாள்.

—நான் அட்வைஸ் பண்ணினேன்! எலக்ட்ரிக் ட்ரீட்மெண்டிலே எடுத்துடலாம்னு சொன்னேன். அவ கேட்கல்லே.

—இந்த விஷயத்தை வச்சுத்தான் ஸெக்ஸி என்கிறீர்களா?

—பார்த்தீர்களா! உங்களுக்கு இது மூட நம்பிக்கையா இருக்கும்னு சொன்னேனே!

—நான் அதை அப்படி எடுத்துக்கிடல்லே, இதைத் தவிர வேறு ஏதாவது உண்டா?

—உண்டு!

—சொல்லுங்க!

—அவ ஆட வரும்போது பார்த்திருக்கேன். அவ நிப்பிள் தடிமனா இருக்கும். நீளமாகவும் இருக்கும்.

சிங் கண்ணை மூடினார். பல்லைக் கடித்தார். கசப்பைச் சாப்பிட்டது போலிருந்தது.

—ஸாரி! உங்களுக்குப் பிடிக்காட்டி சொல்லியிருக்க மாட்டேன்.

சிங் மெள்ள மேலே வந்து கண்ணைத் திறந்தார்.

—இல்லே! உங்க ஆராய்ச்சி என்னை திகைக்க வைக்கிறது. குற்ற இயல்புக்கும் முகஜாடைக்கும் பொருத்தம் உண்டுன்னு மேனாட்டு அறிஞர்கள் கூட ஆராய்ச்சியிலே கண்டுபிடிச்சிருக்காங்க. நான் கூட அதைக் கவனிச்சிருக்கேன். உங்க அறிவு இன்னும் அதிகமாப் போகுது! மங்கலாவின் தேக லட்சணத்தை வைத்துக்கொண்டே புலன் கண்டு பிடித்து விடுவீர்கள் போலிருக்கிறது.

—என் ஆராய்ச்சி அங்க லட்சணத்திலே மட்டும் இல்லே. வேறு அனுமானங்களும் உண்டு. மனோதத்துவம்.

—ஓ! பேஷ்! அதைச் சொல்லுங்கள் என்றார் சிங்.

—நீங்க என் தந்தை வயசுக்கு ஒப்பானவர். உங்ககிட்டே பேசக் கூச்சமா இருக்கு.

—பரவாயில்லேமா! இது ஒரு விசாரணை! நாம்ப ஒரு உண்மையைக் கண்டுபிடிக்கப் போறோம். நீங்க உதவணும்.

—நான் கொஞ்சம் ஜாலியாய்ப் பேசற டைப்! ஸெக்ஸ் விளையாட்டுகளைப் பற்றித் தாராளமாப் பேசுவேன்.

—சிங் நிமிர்ந்தார்.

—மங்கலா அதைக் கேட்டவுடனே சுளிப்பாள். ஆனால் அது மேலெழுந்தவாரின்னு கண்டு பிடிச்சிருக்கேன்.

—எப்படி?

—ஒரு ஸெக்ஸ் விளையாட்டை நான் தத்ரூபமா வர்ணிச்சிட்டேன்னு வச்சுக்குங்க! அப்போதிலிருந்து அவ மனசு அதிலேயே சுழன்றுகிட்டு இருக்கிறது எனக்குத்தெரிந்துவிடும்.

—எப்படி?

—சம்பாஷணையிலே அடிக்கடி தடங்கல் வந்துடுமே! இடையிலே எதையோ யோசிக்க ஆரம்பிச்சுடுவா. நான்

சொன்னதை அவ உள்ளூற ரசிக்கிறான்னு நான் நல்லாப் புரிஞ்சுக்குவேன்.

சிங்குக்கு அவளது அனுமானம் சரி என்று தோன்றியது. இந்தப் பெண் புத்தி கூர்மை உடையவள் என்று நினைத்தார்.

—சரி, மிஸ் காந்தா! உங்க அனுமானத்திலே அவள் இப்படிப்பட்ட பெண்ணாக இருந்தால் வாழ்க்கையிலே சும்மா இருந்திருக்க முடியாதே!

—ஷ்யூர்! நிச்சயம் சும்மா இருந்திருக்க முடியாது. ஆனா அவளுக்கு வெளி உலகத்தோட பயம் நிறைய இருந்திருக்க வேண்டும். இந்த பயந்தான் அவளை சும்மா இருக்க வச்சிருக்கும். அப்படியும் ஒரு விஷயம் நடந்தது.

—சொல்லுங்க!

—எங்க ஹிஸ்டரி லெக்சரர் அறைக்கு இவள் அடிக்கடி போய் வந்தா.

—அதிலே என்ன தப்பு?

—அந்த லெக்சரரைப் பற்றி பல வதந்திகள் உண்டு.

—வதந்திகள் தானே!

—நிஜமாகக்கூட இருக்கும்! மிஸ் மனோகரின்னு பேரு! மதமதன்னு இருப்பா! நான் ஸெக்ஸி என்று சொல்கிற எல்லா லட்சணங்களும் அவளிடம் உண்டு. அவள் மாணவிகளைச் செயற்கை வழிகளிலே ஈடுபடுத்துகிறாள்னு சொல்லுவாங்க! ஒரு மாணவி அவள் கன்னத்திலேயே அடிச்சிருக்கா! அப்புறம் விசாரணை அது இதுன்னு ஒரே கலாட்டா ஆச்சு! காலேஜ் கமிட்டியிலேயே எதையும் நிரூபிக்க முடியவில்லை. மனோகரிமேலே எந்தக் குற்றமும் இல்லேனு சொல்லிட்டாங்க!

—நீங்க நம்பினீங்களா?

—இல்லே; நம்பமுடியவில்லே. சில பெண்கள்கிட்டே அவள் பழகற பழக்கம் ரொம்ப இண்டிமேட்டா இருந்தது. அந்தப் பெண்களும் அவ மேலே உயிரையே வச்சிருந்தாங்க.

அது என்ன பக்தியோ தெரியாது! மஞ்ஞேகரியைப் பற்றி ஏதாவது குற்றம் சொன்னு இதுகளுக்குக் கோபம் மூக்குக்கு மேலே வந்துடும்.

—அப்படியா?

—ஆமாம்! சில மாணவிகள் மஞ்ஞேகரியினுடைய போட்டோவை பர்ஸிலே நிரந்தரமா வச்சுக்கிட்டாங்க!

—சரி, இந்த மஞ்ஞேகரி அறைக்கு மங்கலா போனுளா?

—ஆமாம்! பலமுறை போயிருக்கா! நாங்ககூட கேலி செய்திருக்கோம். வாழ்க்கையிலே எல்லோரும் நல்லவங் கன்னு பதில் உபதேசம் பண்ணுவா!

—சரி! இதனுலே அவ வாழ்க்கையே மாறிப்போயிடிச்சா?

—தெரியலே! அப்புறம் கொஞ்ச நாளிலே மஞ்ஞேகரியை அவ விட்டுட்டா! அது என்ன காரணம்னு பிடிபடல்லே! ஏதோ நடந்திருக்கும்னு நினைச்சோம்! என்ன நடந்தது என்று தெரியாது. இதெல்லாம் எனக்கு அவ மேலே சந்தேகத்தைக் கொடுத்தது.

காந்தா அதற்குமேல் அதிகமான விஷயம் எதையும் கூறிவிடவில்லை.

வீட்டுக்குத் திரும்பும்போது சிங் யோசித்துக்கொண்டே போனுர்.

காந்தா சொன்ன பல விஷயங்கள் அவருக்கு உபயோக மாக இருந்தன.

மங்கலா வெளியில் ஒரு தோற்றம் உள்ளே ஒரு தோற் றம் உள்ளவளாக இருக்கலாம். அதுதான் அவர் எதிர் பார்த்ததும்கூட!

சரி, அப்படியே அவளுக்கு ரகசிய வாழ்க்கை இருந்தா லும்கூட அவளது காதலன் என்பவன் யார்? அவன் எங்கிருக் கிருன்? யாருக்கும் தெரியாமல் அவள் எப்படி ஒரு காதலனை வைத்துக் கொள்ள முடியும்?

11

லேடி பெண்டிங் கல்லூரியின் முதல்வர் மிஸ் டோக்கின் அறைக்குள் இன்ஸ்பெக்டர் சிங் மீண்டும் நுழைந்தார்.

—மிஸ் மனோகரியை நான் பார்க்க வேண்டும், என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தார்.

மிஸ் டோக் விழித்தார். அவளுக்கு ஒரு பரபரப்பு ஏற்பட்டது. மனோகரிக்கும் இந்தக் கேஸுக்கும் என்ன சம்பந்தம்?

—மனோகரியைக் கூப்பிடுகிறேன், என்று சொல்லி மணியை அழுத்தி—டிருமலே, டிருமலே என்று அழைத்தாள்.

—மிஸ் டோக்! மன்னியுங்கள்! மிஸ் மனோகரியை இங்கே அழைக்க வேண்டாம். நான் அவரது அறையில் போய்ப் பேசுகிறேன். அவர் எங்கே இருக்கிறார்?

—ஹாஸ்டல்லே, ஐராவதம் பிளாக்கிலே இருக்கிறாள், என்று சொல்லிக் கையைப் பிசைந்து—ஹாஸ்டலுக்குள் நாங்கள் ஆண்பிள்ளைகளை அனுமதிப்பதில்லை, என்றாள்.

—நான் போக வேண்டுமே!

—நான் கமிட்டியிடம் கேட்கவேண்டும் என்றாள், டோக், கையைப் பலமாகப் பிசைந்து கொண்டு.

—அப்படியானால் நானும் மாஜிஸ்ட்ரேட் உத்திரவு வாங்கி உடனே மனோகரியின் அறையைச் சோதனை போட்டாக வேண்டும். என்னை நீங்கள் அனுமதித்தீர்களானால் அந்த இக்கட்டைத் தவிர்க்கிறேன்.

மிஸ் டோக் தயங்கினாள்.

பிறகு,—எஸ் நீங்கள் போங்கள்! என்றாள்.

எனக்குத் துணையாக உங்கள் வேலைக்காரனை அனுப்புங்கள்.

—டிருமலே, டிருமலே

ஐராவதம் பிளாக்கை சிங் நோட்டம் விட்டார். வெளியே பப்பாளி மரங்கள் நிறைய இருந்தன. ஒதுக்கமான அறையை மனோகரி தேர்ந்தெடுத்திருந்தாள்.

சிங் தன்னை அறிவித்துக் கொண்டதும் மனோகரிக்கு பகீர் என்றது. சட்டென்று பெரிதாகிய விழிகளை சிங் கவனித்துக் கொண்டார்.

—எனக்கு மங்கலாவைப் பற்றித் தெரிய வேண்டும்.

—ஓ, ஷி வாஸ் எ குட் கர்ல். சமீபத்திலே அவளைக் காணோம்னு பேப்பரிலே போட்டிருந்தாங்க. வருத்தமா இருந்தது.

—அதைப் பற்றித்தான் உங்களிடம் கேட்க வந்தேன்.

—மை காட்! அவள் கல்லூரியை விட்டுப்போய் இரண்டு வருஷம் ஆகப் போகுதே!

—எனக்குத் தெரியும்! அவள் நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்கத்தான் வந்தேன்!

—எனக்கு அதிகம் தெரியும்னு நினைக்கிறீங்களா?

—தெரிஞ்சிருக்கலாம் இல்லையா?

—எல்லா மாணவிகளைப் போல அவளும் என்னோடு பழகுவா.

—எல்லோரும் உங்ககிட்டே நெருங்கிப் பழகுவாங்களா?

—எல்லோரும் மாட்டாங்க! நான் சில இண்டெலிஜண்ட் மாணவிகள் மேலே பிரியம் வச்சுப்பேன். அவங்க படிப்பிலே உதவி செய்வேன். சொல்லிக் கொடுப்பேன்.

—அதைப் போலத்தான் மங்கலாவுக்கும் உதவி செய்தீர்களா?

—ஆமாம்.

—மங்கலா இங்கே வந்தா ரொம்ப நாழிகை இருப்பாங்களா?

—மாட்டாள்! இரண்டு மணி நேரம் அதிகபட்சம் இருப்பா.

—அப்போ என்ன விஷயத்தை எல்லாம் பேசுவீர்கள்? பாடவிஷயம் மட்டுமா அல்லது...

—பாடந்தான் முக்கியமா இருக்கும். அவள் ஒரு சரித்திர மாணவி! அவளுக்குச் சரித்திரத்து மேலே ரொம்ப ஆர்வம்! ஆராய்ச்சிகள் எல்லாம் பண்ணனும்னு சொல்லுவா! ஆந்த்ரோபாலஜியில் (மனிதஇன ஆராய்ச்சி) ருசி வேறு. எனக்கும் இதெல்லாம் பிடிக்கும். நிறையப் பேசுவோம். இந்த ஆராய்ச்சியிலே நான் பல பேருக்கு உதவி கூடப் பண்ணியிருக்கிறேன்.

—ஆராய்ச்சி தவிர பொதுவான விஷயங்களைப் பேசுவீர்களா?

—ஓ, பேசுவோம்.

—என்ன விஷயங்க?

—பெண்களுக்கு எந்த விஷயங்கள் பிடிக்கும்! ஸாரி, மேக்—அப், நகை, அது இதுன்னு எத்தனையோ இருக்கு! ஸாரியிலே ருஷ் நிறத்து ஸாரி பிடிச்சிருக்கும்பா? மேக்அப்பிலே ஐ ப்ரோ வெட்டிக்கிறது பிடிக்காது என்பா...இப்படி எத்தனையோ.

—இவ்வளவுதான் பேசுவீங்களா?

—ஆமாம்.

—ஸெக்ஸ் மேட்டர்?

—ஓ இன்ஸ்பெக்டர்! நான் ஒரு புரொபஸர்! உபாத்தியாயர் ஸ்தானம்! நான் போய் ஒரு மாணவியிடம் ஸெக்ஸ் பேசுவேனா?

—மாட்டீங்களா?

இந்தக் கேள்வியை சிங் அழுத்தினுர். கூடவே மனேகரி யின் கண்களை அழுத்தமாகப் பார்த்தார்.

மனேகரி வெலவெலத்தாள். பதில் சொல்லத் தடுமாற் றம் தெரிந்தது.

பிறகு சமாளித்தாள்.

—இன்ஸ்பெக்டர், என்றுள் அழுத்தமாக. என்னிடம் நீங்கள் முறையாகப் பேச வேண்டும் என்றுள் கண்டிப்பாக.

அப்படிச் சொன்னவள் மேஜை மீது வைத்திருந்த ஒரு கையால் புத்தகங்களை மெள்ள நகர்த்த முயற்சி செய்தாள். சிங் நாசூக்காக கவனித்துக் கொண்டார்.

—மங்கலாவுடன் உங்களுக்கு ஏதோ தகராறு நடந்ததாமே!

மனேகரி திடுக்கிட்டாள்.

—யார் சொன்னுர்கள்?

—தெரிய வந்தது.

—எல்லாம் பொய்! யாராவது வீண் வதந்திகளைக் கிளப்பிவிட்டிருப்பாங்க!

—அப்படி உங்களைப் பற்றி வதந்திகளைக் கிளப்பிவிடறது உண்டா?

—ஏன் விடமாட்டாங்க? எங்க புரொபசர்களிடையிலே பொருமை இல்லையா, போட்டி இல்லையா?

—எதனுலே பொருமை?

—அதை என்னுலே விளக்க முடியாது! நான் கல்யாணம் செஞ்சுக்கிடல்லே! இஷ்டப்படி வாழறேன், இஷ்டப்படி செல வழிக்கிறேன். இதனுலே பொருமை! இன்னும் எனக்கு ஒரு பர்ஸனுலிடி இருக்கு, அதனுலே பொருமை! தினம் ஒரு

பட்டுப்புடவை கட்டறேன், அதனாலே பொறுமை! என் வகுப்பிலே ஒழுக்கம் அதிகம்! அதனாலே பொறுமை!

—உங்களைப் பற்றி என்ன வதந்தி கிளப்பினாங்க? என்றார் சிங்.

—அதை நீங்கள்தான் எனக்குச் சொல்லணும்!

—எனக்கு அதிகமாத் தெரியாது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணுமே!

—இன்ஸ்பெக்டர் என்று சொல்லிச் சிரித்தாள் மனோகரி. —என்னிடம் நீங்கள் எதற்கோ போராடுறீங்க?எதற்கு என்று தெரியவில்லை.

—இல்லை! வதந்தியைப் பற்றித் தெரிந்தால் போதும்!

—அதுக்கும் உங்கள் கேஸுக்கும் என்ன சம்பந்தம்!

—மேலெழுந்தவாரியாக எந்தச் சம்பந்தமும் இல்லை தான்!

—பின்னே ஏன் கேட்கிறீர்கள்!

சிங் ஒருகணம் மௌனமானார். அவருக்கே பொறுப்பான வரம்புகளை மீறுகிறோமோ என்று ஒரு யோசனை!

அவரது மௌனமும், அவரது துருவும் பார்வையும் அவளை ஏதோ செய்திருக்க வேண்டும்.

மனோகரி தனக்கே சொல்லிக் கொள்வதுபோல்—வதந்தினா என்ன வதந்தி? பெண்கள் எதைப்பற்றிப் பேசுவாங்க? இவ ராத்திரி வெளியிலே போனா! எவனோடேயோ சுத்தறா! லீவு எடுத்துக்கிட்டு அபார்ஷன் பண்ணிக்கிட்டா! தூ......... அவதூறுகளுக்கு ஒரு கணக்கு வழக்கு இருக்கா!

—சரி, மேடம்! கடைசியா நீங்க மங்கலாவை எப்போ சந்திச்சீங்க!

—கல்லூரியின் கடைசி நாளிலே மாணவிகள், புரொபஸர்கள் எல்லோரும் சேர்ந்து க்ரூப் போட்டோ எடுத்துகிட்டோம். அதுதான் எங்கள் கடைசி சந்திப்பு.

—மங்கலாவுடன் பழகினதிலே அவமேலே சந்தேகப்படும் படியா ஏதாவது தோணிச்சா?

—எதுவும் கிடையாது! ரெண்டு வருஷம் ஆச்சு! நான் அவளையே மறந்துட்டேன்.

இன்ஸ்பெக்டர் எழுந்தார்—ஓ புத்தகங்கள் நிறையப் படிக்கிறீர்களே? என்று சொல்லி மேஜைமீதுள்ள புத்தகங் களை நகர்த்தினார்.

மூன்று புத்தகங்கள்

தி அனிமல் ஃபீமேல்!

வாட் யு ஆல்வேஸ் வாண்டட் டு நோ!

தி ஸைகாலஜி ஆஃப் ஸெக்ஸ்!

—ஓ உங்களுக்கு இதில் பிரியமோ? என்று கண்ணில் சுடர்விட்டுக் கொண்டு சிங் கேட்டார்.

—லைப்ரரியிலிருந்து எதையாவது எடுத்துக்கொண்டு வந்து படிப்பேன். பொழுது போக வேண்டுமே!

12

இரண்டு வாரங்கள் ஓடின. சிங்குக்கு இதர வேலைகள் நிறைய இருந்தன.

எல்லாம் ஒருவாறாக முடிந்த பிறகு மீண்டும் கேஸ்களில் மூழ்கலானார்.

நாட்கள் கடந்து போவதில் அவருக்கு ஒரு திருப்தி. மங் கலா எங்கிருந்தாவது தன் காதலனுடன் திரும்பி வந்துவிட மாட்டாளா என்று ஒரு அல்ப ஆசை!

அவள் எங்கே வரப்போகிறாள்?

வந்திருந்தால் அவளது தந்தை ஓடிவந்து கேஸை வாபஸ் வாங்கி யிருப்பாரே!

இந்தக் கேஸ் என்ன? கடத்தலா, கொலையா?

மங்கலா எங்கே போனாள்?

புரொஃபஸர் மனோகரியைப் பார்த்துவிட்டு வந்ததி லிருந்து அவருக்கு ஒரே விரக்தி!

கேஸ் எங்கேயும் நகர்வதாகக் காணோம்.

அவளை விசாரித்ததெல்லாம் வீணோ என்று தோன்றியது.

இனி யாரைத்தான் விசாரிக்க?

சம்பந்தப்பட்ட இடங்களில் விசாரித்தாகி விட்டது, மங் கலா நல்லவள் என்று எல்லோரும் சொன்னார்கள், உள்ளூர ஆசை இருப்பவள் என்று ஒருத்தி சொன்னாள்.

இந்த விஷயங்களுக்கு மேல் எதுவும் தெரியவில்லை.

எல்லாவற்றையும் விட மர்மம், அவளுக்கு ஒரு காதலன் இருந்தான் என்பதே!

யாருக்கும் அதைப் பற்றி ஒரு செய்தி கூடத் தெரியாது.

அதுதான் மிகவும் அதிசயமானது.

அவ்வளவு ரகசியமாக ஒரு ஆணும் பெண்ணும் தங்கள் சந்திப்புகளை வைத்துக் கொள்ள முடியுமா?

மிக்க சிரமமாயிற்றே அது!

மங்கலாவின் வீட்டிலேயே ஏதாவது துப்பு கிடைக்குமா?

இத்தனை நாளும் அவர் மங்கலாவின் வீட்டைச் சோதனை செய்யாமல் இருந்ததற்குக் காரணம் இருந்தது.

முதலில் மங்கலா கடத்தப்பட்டாளா, கொலை செய்யப் பட்டாளா என்று நிச்சயம் தெரியவில்லை.

இரண்டாவது, அவளே ஒரு கடிதம் தன் கையாலேயே எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறாள்.

இந்தக் காரணங்களால், பின்னால் தகுந்த முகாந்திரங்கள் கிடைத்தால் அன்றி வீட்டைச் சோதனை போட வேண்டாம் என்று நினைத்திருந்தார்.

இப்போது எந்த வழியிலும் துப்பு கிடைக்காத நிலையில், வீட்டைச் சோதனை போட்டால் ஏதாவது கிடைக்குமா என்று பார்க்க விரும்பினார்.

13

மங்கலாவின் வீட்டில் எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

சிங் தமது உதவி ஆளோடு அலமாரி, பீரோக்கள், டிராயர்கள் எல்லாவற்றையும் பார்த்துவிட்டார்.

புத்தகங்களையும் நோட்டுகளையும் உதறி எடுத்துப் பார்த்துவிட்டார்.

எந்தவிதப் புலனும் கிடைக்கவில்லை.

மீண்டும் சிங்குக்கு விரக்திதான் ஏற்பட்டது.

இதென்ன கேஸ்? ஒரு ஓரத்தில் சிறு கீறல்கூட ஏற்படவில்லையே!

—மிஸ்டர் ராம்நாத்! எனக்கு அது மிஸ்டரியாகத்தான் இருக்கு! உங்கள் பெண்ணைப்பற்றி எதுவும் கண்டு பிடிக்க முடியவில்லை. ரொம்ப ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இதில் எங்கேயோ ஒரு முனை மறைஞ்சிருக்கு! அதை இழுத்துட்டா எல்லா விஷயமும் வெளியில் வந்துவிடும். அந்த முனைதான் கிடைக்க மாட்டேன் என்கிறது என்றார் சிங்.

ராம்நாத் முன்னைவிட இப்போது மோசமாகி இருந்தார். சோகத்தினால் அவருக்கு உடம்பில் ஒரு கூனல் விழுந்து

விட்டது. அவரால் சரியாகவும் பேச முடியவில்லை. சோபாவில் நடுங்கியவாறே அமர்ந்திருந்தார்.

—முதல்லே! இந்தக் காதலன் என்கிறதே நிஜமா? என்று கேட்டார் சிங்.

முதல் தடவையாக ராம்நாத் தலைநிமிர்ந்து பேசினார்.

—நானும் அதைத்தான் அடிக்கடி நினைக்கிறேன். என் பெண்ரொம்ப நல்லவள். அப்படி ஒரு காதலன் இருந்தா அதை முன்னாலேயே எங்கிட்ட சொல்லியிருப்பா. இப்படி திடுதிப்னு லெட்டர் எழுதிட்டுப் புறப்பட்டுப் போயிட்டா.

—சரி! அப்போ அந்தக் கடிதத்தைப் பற்றி என்ன சொல்கிறீர்கள் என்றார் சிங்.

—அதுதான் எனக்கும் மர்மமாக இருக்கு என்றார்.

—அது அவள் கையெழுத்துத்தானே!

—ஆமாம், அதிலே சந்தேகம் இல்லே! ஆனால் இப்போ நினைச்சா அவ மாதிரி யாராவது இப்படி எழுதி வைக்க முடியுமான்னு யோசிக்கிறேன்.

—காணாமல் போனதுக்கு முந்தின நாள் வீட்டிலே இருந்தாளா?

—இருந்தா!

—அப்போது எப்படி இருந்தா?

—சாதாரணமாத்தான் இருந்தா. வித்தியாசமே இல்லை.

—அதற்கு ஒருவாரம் முன்னாலே வரைக்கும் எப்படி இருந்தா?

—வழக்கம் போலத்தான் இருந்தா.

இன்ஸ்பெக்டர் காபியை அருந்திக்கொண்டே யோசித்தார்.

—சரி மிஸ்டர் ராம்நாத்! உங்கபெண் கல்லூரிப் படிப்பை முடிச்சு கிட்டத்தட்ட இரண்டு வருஷம் ஆகப் போகுது. இத்தனை நாளும் சும்மாவே இருந்தாங்களா?

—எஸ் ஸார்! லைப்ரரி உண்டு, வீடு உண்டு, புத்தகங்கள் உண்டு. அவ்வளவுதான் வேறே எங்கேயும் போனது கிடையாது.

—எங்கேயாவது ஒரு வாரம், பத்து நாள் என்று?

—எங்கேயும் கிடையாது!

—சொந்தக்காரங்க யாருடைய வீட்டுக்காவது?

—ஊஹூம்! இரண்டு நாள் தங்கும்படியா எங்கேயுமே போகமாட்டா. காலையிலே போனு சாயங்காலம் வந்துடுவா!

சிங் முகவாயைத் தடவினுர். என்ன சிக்கலான கேஸ் இது? ஆளைக் காணவில்லை. துப்பும் கிடைக்கவில்லை.

எழுந்திருந்தார்.

யோசனையில் சுற்றிவர மெதுவாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் கண்களில் சுவரில் உள்ள படங்கள் தென்பட்டன. இரண்டு குடும்ப போட்டோக்கள். ஒரு இயற்கைக் காட்சி.

இன்னொன்று?

—அது என்ன படம், என்றுர் சிங்.

—அது ஒரு சக்கரம்! பழைய கொங்குநாட்டு ராஜாக்கள் பூஜித்த சக்கரம் இது! இது இப்போ நம்ப மியூசியத்திலே இருக்கு! தங்க கில்ட் போட்ட வெண்கலத்திலே உருவாக்கினது. எவ்வளவு வேலைப்பாடு பார்த்தீர்களா? இதை போட்டோ எடுத்து மியூசியத்திலேயே விற்கிருங்க என்றுர் ராம்நாத்.

—உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?

—மங்கலா மியூசியத்திற்குக் கொஞ்சநாள் போய்வந்தா.

—அதைச் சொல்லவே இல்லையே என்றுர் சிங்.

—அதிலே விஷயம் ஒண்ணுமில்லேன்னு விட்டுட்டேன்.

—எதையும் லேசிலே தள்ளிடக்கூடாது! விஷயத்தைச் சொல்லுங்க!

—மங்கலாவுக்கு ஹிஸ்டரி, ஆந்த்ரோபாலஜி இரண்டி லும் ரொம்ப இண்ட்ரஸ்ட் உண்டு.

—ம்

—இதிலே சில ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி பத்திரி கைக்கு அனுப்புவா.

—ம்

—கல்கட்டாவிலிருந்து ஏஷியாடிக் சொஸைட்டி இவளைப் பாண்டிய நாட்டைப்பற்றி எழுதும்படிக் கேட்டிருந் தது. அதுக்காக இவ மியூசியத்திலே போய் ஆராய்ச்சி பண்ணினு.

—என்ன ஆராய்ச்சி?

—அது தெரியாது! எனக்கு இந்தப் பழங்காலங்களே பிடிக்காது. இவ மியூசியம் டைரக்டர் கிட்டேயிருந்து அனுமதி வாங்கி ஆறுமாசம் அங்கே இருக்கிற விக்கிரகம், சிலை இவைகளை ஆராய்ச்சி பண்ணினு.

—அப்போ தினம் மியூசியத்திற்குப் போனுளா?

—இல்லை. வாரத்திலே இரண்டு மூணு நாள் போவா. இப்படி ஆறுமாதம் போயிட்டிருந்தா.

—ஓகோ? அது எப்போன்னு சொல்ல முடியுமா?

—போன வருஷத்துக் கடைசியிலே இருக்கும், அப்புறம் கட்டுரை எழுதினு. ரொம்பப் பிரமாதம்னு அந்த ஜர்னல் பாராட்டிடுத்து.

—அப்போ, ராம்நாத்! இந்த மியூசியத்திலே யார்கிட்டே யாவது மங்கலாவுக்குப் பழக்கம் ஏற்பட்டிருக்குமா?

—நிச்சயம் இருக்காது. மியூசியமே பழசு! அங்கே வச்சிருக்கிற பொருளும் பழசு. அதேபோல இந்த மியூசியத்

திலே வேலை செய்யறவங்களும் எல்லாரும் துருப் பிடிச்ச மாதிரி அவ்வளவு பழசாத் தென்படறு என்று அவளே என் கிட்டே சொல்லியிருக்கா.

—ஓ!

—காலையிலே மியூசியத்துக்குப் போவு சாயங்காலம் வந்துடுவா! அவ்வளவுதான்!

—சமீபத்திலே அங்கே போயிருந்தாளா?

—ஊஹூம், இல்லை.

—அங்கிருந்து அவளை யாராவது பார்க்க வந்திருக்காங்களா?

—இல்லை.

—மிஸ்டர் ராம்நாத்! ஒரு, விஷயம்! மங்கலாவைப் பற்றி என்னென்ன விஷயம் உண்டோ அவ்வளவையும் நீங்க முழுசாச் சொன்னுத்தான் உண்டு. இப்படி கொஞ்சம் கொஞ்சமாகச் சொன்னு பிரயோசனம் இல்லை.

—இல்லை ஸார்! மியூசியம் போனதை நான் முக்கியமா நினைக்கல்லே. அதனுலேதான்.

—இப்போ இருக்கிற சந்தர்ப்பத்திலே எதுக்குமே முக்கியத்துவம் கொடுக்கணும். இதைத் தவிர வேறு ஏதாவது விஷயம் உண்டுன்னு சீக்கிரம் சொல்லிடுங்க.

—வேறே எதுவும் கிடையாது ஸார்!

14

நகரத்தின் வெளிப்புறத்தில் இருபது மைலில் இருந்தது மியூசியம்.

எஃப் எச். க்ரேவ்லி மியூசியம் என்று காமன் வளைவில் அதன் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

உள்ளே எத்தனை ஏக்கர் இருக்குமோ! மாமரமும், வேம்பு, பூவரச மரங்களும் இனந்தெரியாத எத்தனையோ மரங்களும் வளர்ந்திருந்தன.

வாசலில் காம்பவுண்ட் பல இடங்களில் இடிந்திருந்தது.

அந்தக்காலத்து ஏதோ நவாபின் எஸ்டேட்டையும் அரண்மனையையும் வாங்கி, இந்த மியூசியமாகச் செய்திருந் தார்கள்.

அந்தப் பழங்காலத்து அரண்மனை மட்கிப்போய்த் தெரிந்தது.

மியூசியத்தின் தெற்கே தூரத்தில் அலுவலர்கள் வசிப்ப தற்கான் பழையகால வீடுகள்.

போகிற வழியெல்லாம் நாணலும் புதர்களும் கொழித்துக் கிடந்தன.

மியூசியத்தின் பிரதான கட்டிடத்திற்கு இடது புறமாக மியூசியம் ஆபிஸ்! வலது புறத்தில் லாபரடரிகள்.

டைரக்டர், கியூரேட்டர், உதவி கியூரேட்டர், டெக்னி கல் அசிஸ்டெண்ட், டாக்ஸிடெர்மிஸ்ட், குமாஸ்தாக்கள், பாதுகாவலர்கள், இரவு வாட்ச்மேன், கார்பெண்டர், தோட்டக்காரர் ஆக எல்லோரும் சேர்த்து நாற்பது பேர்கள் இருந்தார்கள்.

மியூசியம் காலையில் ஒன்பதிலிருந்து மாலை நான்கு மணி வரை திறந்திருந்தது.

சிங் போன போது மணி மூன்றரை ஆகியிருந்தது.

படிமக் காலரிகளில்— எல்லோரும் வாங்க! கதவைச் சாத்தரோம் என்ற குரலைஅடிக்கடி பாதுகாவலர்கள் கிளப்பிக் கொண்டிருந்தார்கள்.

காலரி வழிகாட்டிகள் அவசர அவசரமாக அன்றைய ரிஜிஸ்டர் எழுதும் வேலைகளை முடித்துக்கொண்டிருந்தார்கள்.

தன்னை அறிவித்துக் கொண்டு டைரக்டர் சூரேசனின் அறைக்குள் சிங் நுழைந்தார்.

சூரேசனுக்கு ஐம்பது வயது இருக்கும். வெள்ளை ப்ரேமில் கண்ணாடி போட்டிருந்தார்.

ஆராய்ச்சிகள் நடத்தினதாலோ என்னவோ கண்கள் குழி விழுந்திருந்தன.

அங்குள்ள மேஜை, நாற்காலிகள் யாவுமே பழமையாயிருந்தன.

அறைக்குள்ளேயே ஒரு பழமை நெடி.

சிங் தாம் வந்த விஷயத்தைக் கூறினார். மங்கலா என்கிற பெண்ணை ஒருமாதமாகக் காணவில்லை என்றதும் சூரேசன் பரபரப்பு அடைந்தார்.

—அடப்பாவமே! அவளுக்கு என்ன ஆச்சு என்று சொல்லி உடனே மேஜை மணியைத் தட்டி கியூரேட்டரை அழைத்து வரச் சொன்னார்.

கியூரேட்டருக்கு நாற்பது வயதிருக்கும்.

நாற்காலியில் உட்காராமல் நின்றுகொண்டே பேசினார்.

—நடராஜன்! மங்கலான்னு ஒரு பெண்ணு ரிஸர்ச் செய்யறதுக்கு வந்தாளே — அவளை ஒரு மாசமாக் காணலையாம்!

—மைகாட்! என்றார் நடராஜன்! —நல்ல பெண் ஸார்! ரொம்ப இன்டெலிஜண்ட், எதையும் ஆராய்ச்சியோடு பார்க்கக்கூடிய நோக்கு! பாவம்!

—அவளைப் பற்றிதான் உங்களிடம் விசாரிக்கலாம்னு நினைச்சு வந்தேன்.

—என்ன வேணும்னு கேளுங்க, சொல்றோம்.

—அந்தப்பெண் நடவடிக்கைகளைக் கவனிச்சிருக்கீங்களா?

—அப்பழுக்கு சொல்லமுடியாது, என்றார் நடராஜன். காலையிலே பத்து பத்தரைக்கு வருவா. மாலை மூணரை மணிக்குப் போயிடுவா. 88ஸி இப்படிதான் போகும். அதிலே ஏறிப் போயிடுவா!

—இங்கே யார்கிட்டே யாவது அதிகமாகப் பழகுவாளா? என்றார் சிங்.

—யார்கிட்டே ஸார் பழகுவாங்க என்று பதில் கேள்வியை டைரக்டர் சுரேசன் நடராஜனிடம் போட்டார்!

—எல்லார் கிட்டேயும் ஒரேமாதிரிதான் பழகுவா! நாங்கள் தான் மாறி மாறி அவளுக்கு கைட் பண்ணுவோம்! வேலை செய்றவங்க எல்லாருமே அவளுக்கு ஏதாவது ஒரு விஷயத்திலே உதவி செய்ய வேண்டியிருக்கும். செய்வாங்க!

—ஆராய்ச்சி விஷயத்திலே பழகறது. சரி! சும்மா சாதாரணமாக உட்கார்ந்து வீட்டு விஷயம், நாட்டு விஷயம்னு யாரிட்டயாவது பேசணும் இல்லே! அப்படி யார்கிட்டே பேசுவாங்க?

இரண்டு பேரும் யோசித்தார்கள்.

நடராஜன் உடனே—வாட்டர் கேரியர் ஒரு அம்மா இருந்தாங்க! அவங்ககிட்டேதான் ஸோஷியலாப் பேசுவாங்க! அந்த அம்மா இப்போ செத்துப்போய் இரண்டு மாதம் ஆச்சு!

—வயசானவளா?

—இல்லை நாற்பது வயது இருக்கும். மாரடைப்பிலே போய்ட்டாங்க.

—வேறு யாராவது உண்டா?

—வர்கீஸ் கிட்டே பேசுவாங்க! அவர் டிரான்ஸ்பர் ஆகிப் போயிட்டாரு.

—எங்கே போயிட்டார்?

—ராஜினுமா பண்ணிட்டு ஸெண்ட்ரல் ஆர்கியாலஜி டிபார்ட்மெண்டுக்குப் போயிட்டாரு.

—எப்போ ராஜினுமா பண்ணினுர்?

—ஆறு மாசம் இருக்கும்.

பிறகு பல பாதுகாவலரை சிங் விசாரித்தார். தோட்டக் காரரை விசாரித்தார்.

நான்கு மணிக்கெல்லாம் அந்த மியூசியம் பகுதி நிர் மானுஷ்யமாகி விட்டது.

அலுவலர்கள் முக்கால்வாசிப் பேரும் ஸைகிளை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

காட்டில் இருப்பது போல் சிள் என்று ஒரு இரைச்சல் கேட்டது.

சிங் போலீஸ் ஜீப்பில் ஏறி உட்கார்ந்தார்.

அவர் முகத்தில் மீண்டும் விரக்தி தோன்றியது.

15

மறுநாள் கமிஷனர் ஆபீசில் கான்ஃபரன்ஸ். எல்லா ஏ.ஸி. களும் வந்திருந்தார்கள்.

ஆய்வுப்பிரிவைச் சேர்ந்தஅதிகாரிகளும்வந்திருந்தார்கள்.

நிகழ்ச்சி நிரலுக்கு இடையில் கமிஷனர் திடீரென்று ஏ. ஸி. யிடம் —அந்த காலேஜ் பெண் கேஸ் என்னவாயிற்று என்று கேட்டார்.

ஏ. ஸி. சிங்கின் முகத்தைப் பார்த்தார்.

சிங் எழுந்தார்.

ஸார், இதில் என் இயலாமையை வருத்தத்துடன் தெரி வித்துக் கொள்கிறேன். நான் எந்தக் கோணத்தில் இதை விசாரித்தாலும் ஒரே இடத்திற்குத்தான் வந்து சேருகிறேன்.

புலன் துலங்குவதாக இல்லை. என்னைப் பொருத்த வரையில் இதுவெறும் 'ஓடிப்போன' கேஸ் என்று தோன்றுகிறது. அந்தப் பெண் தன்னைச் சுற்றியுள்ள உறவினர்கள், சிநேகிதிகள் யாவரிடமும் ஒரு நல்ல பெண் என்கிற தோற்றத்தையும் நடத்தையையும் காட்டி வந்திருக்கிறாள். ஆனால் என் விசாரணையில் அந்தப் பெண்ணுக்கு நிறைய சபல புத்திகளும் இருந்து வந்திருக்கின்றன என்று தெரிய வந்தது. இதன் காரணமாய் அவள் யாருக்கும் தெரியாமல் ரகசியமாய் ஒரு காதல் வாழ்க்கையை உருவாக்கிக் கொண்டிருக்கிறாள். அதை அவள் எப்படி அவ்வளவு ரகசியமாக வைத்துக் கொண்டாள் என்பதே ஆச்சரியம். ஏனெனில் யாரை விசாரித்துப் பார்த்தாலும் அந்தப் பெண்ணின் காதலன் யார் என்பதற்கு ஒரு சிறிய துப்பு கூடத் துலங்கவில்லை.

முடிவில் அந்தப் பெண் என்ன செய்திருக்கிறாள்? காதலனைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறாள். அதை ரகசியமாகச் செய்து முடித்து மூன்றாவது நாள் வீடு திரும்புகிறேன் என்று கடிதம் எழுதி இருக்கிறாள். மூன்று நாட்கள் ஆகியும் திரும்பவில்லை. காரணத்தை நான் மனோதத்துவ ரீதியில் ஊகிக்கிறேன்.

எப்படி என்றால் அந்தப் பெண் மற்றவர்களுக்காக 'நல்லவள்' என்ற வெளித் தோற்றத்தை எப்போதும் காண்பித்து வந்திருக்கிறாள். அந்தத் தோற்றத்தின் புனிதத்தை அவள் கெடுக்க விரும்பவில்லை. காதல் திருமணம் செய்து கொண்டு, நாலுபேர் முன்னால் தலை குனிவோடு வந்து நிற்க அவள் மனம் இடம் கொடுக்கவில்லை. எனவே, திருமணமான பின்னும் அவள் தன் காதலனோடு திரும்பி வராமலேயே இருந்திருக்க வேண்டும். அவ்வளவுதான்.

அந்தப் பெண் எப்போதாவது திரும்பி வருவாள் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன் என்று கூறி முடித்தார் சிங்.

கமிஷனர் பென்சிலை மேஜை மீது குத்திக் கொண்டிருந்தார்.

எதிரே பெரிய போர்டின் மீது அவர் பார்வை சென்றிருந்தது.

அதில் காணமல் போன பெண்கள் என்ற தலைப்பின் கீழ் கடந்த மூன்று மாதத்தில் 22 என்று எண்ணிக்கை காட்டப் பட்டிருந்தது.

அதுதான் அவருக்குக் கவலை கொடுத்தது.

—மிஸ்டர் நமசிவாயம்! என்று ஏ. ஸி. யைக் கூப்பிட் டார் அவர்.

—எஸ், ஸார்!

—இது கடத்தலாக ஏன் இருக்கக் கூடாது? யாரோ ஆசை காட்டிப் பெண்ணை அழைத்துப் போய் விட்டார்கள்.

—நானும் அப்படித்தான் நினைக்கிறேன், ஸார்! ஆனல் பெண் படித்தவள்!

—அதனல்தான் திருமண ஆசையை எவனே காண்பித் திருக்கிருன்!

—இருக்கலாம்.

—மிஸ்டர் சிங்!

—எஸ் ஸார்!

—அந்தப் பெண் காணமல் போனள் என்ருல் காதலனும் காணமல் போயிருப்பான் இல்லையா?

—ஆமாம் ஸார்!

—அப்படி யாராவது ஆண் காணமல் போயிருக்கிருர் களா பார்த்தீர்களா?

—எந்தவிதத் தகவலும் இல்லை, ஸார்!

—அதனலே தான் காதல் தியரியை ஒத்துக் கொள்ள முடியவில்லை. நான் இதை வெறும் கடத்தல்னு நினைக்கிறேன். இங்கே ஸிடியிலே ஒரு குழு வேலை செய்கிறது என்று தோணறது.

—எஸ், ஸார்!

—இதில் போனதடவை நாம்ப சந்தேகப்பட்டு விட்ட வங்களை எல்லாம் விசாரிக்கணும், மிஸ்டர் நமசிவாயம்!

—எஸ், ஸார்!

—பங்களூருக்கும், ஹைதராபாத்துக்கும் இரண்டிரண்டு பேரை விசாரிக்க அனுப்புங்க!

—எஸ், ஸார்!

மீட்டிங் முடிந்து வெளியே வந்த பிறகு சிங்கும் ஏ. ஸி. யும் தனியாகப் பேசினார்கள்.

—ஸார்! இது கடத்தல் இல்லை, ஸார்! வெறும் ஓடிப் போன கேஸ்! அந்தப் பெண் தன் கைப்பட லெட்டர் எழுதி யிருக்கா ஸார்! என்றார் சிங் அழுத்தத்தோடு.

—அந்த லெட்டர் இருக்கா? என்றார், ஏ. ஸி.

—இருக்கு ஸார், வச்சிருக்கேன்!

—அதை வேணுமின்னு ஃபோரன்ஸிக் லாபரடரிக்கு அனுப்புங்களேன். ஏதாவது விஷயம் புலனாகிறதா, பார்ப் போம்!

—எஸ், ஸார்!

அன்று இரவு சிங்குக்குச் சரியாகத் தூக்கம் பிடிக்கவில்லை. இதென்னடா இது! இப்படி ஒருகேஸ்! எப்படிப் பிடித்தாலும் நெக்கு விட மாட்டேன்கிறது?

அவரது திறனுக்கே இது சவால் விடுவதுபோன்று தோன்றியது.

—சிங் ஸார்! உங்களையும் பார்ப்பேன், உங்க அப்பாவை யும் பார்ப்பேன், என்று கேஸ் அவரைப் பார்த்து கை கொட் டிச் சிரிப்பது போலிருந்தது.

அப்படி ஒரு பிரமை தோன்றும் போதெல்லாம் அவருக்கு ஒரு ஆத்திரமே எழுந்து வந்தது.

அந்தக் கேஸை அப்படியே கழுத்தை முறுக்கித் தூரப் போட்டுவிட வேண்டும் போல் தோன்றியது.

16

காலையில் ஒன்பது மணிக்கு சிங் ராம்நாத்தின் வீட்டில் இருந்தார்.

உள்ளே போன போதே சிங்குக்கு ஆத்திரம் இருந்தது.

—ஸார்! ஏதாவது விஷயமா? என்று ஆவலோடு கேட்டார் ராம்நாத்.

—இல்லை, விசாரிச்சுக்கிட்டிருக்கோம், என்று சொன்ன அவர்—மிஸ்டர் ராம்நாத்! மங்கலாவின் அறையில் நான் கொஞ்சம் தனியாக இருக்கவேண்டும். எந்தவிதத் தொந்திரவும் கூடாது. என்னை யோசிக்க விட்டு விடுங்கள் என்றார்.

—தாராளமாக இருங்கள். எப்படியாவது என் பெண்ணைக் கண்டு பிடித்துக் கொடுத்தால் சரிதான் என்றார் ராம்நாத்.

மொஸைக் தரை போட்ட அழகான சின்ன அறைக்குள் சிங் நுழைந்தார். அதன் கதவை வெறுமென சாத்திவைத்தார் ராம்நாத்.

உள்ளே சுற்றிவர சிங் பார்த்தார்.

கண்ணாடி போட்ட கப்போர்ட்.

உள்ளே ஒரு பஞ்சு பொம்மை, பீங்கான் யானைகள், கண்ணாடி வார்ப்பில் ஒரு மாடர்ன் ஆர்ட்.

மேல்தட்டில் தனியாக திருப்பதி வெங்கிடாசலபதி படம், பள பள என்று தங்க கில்டு.

இதில் எந்தப் பொருள் எந்தத் துப்பைக் கொடுக்கப் போகிறது?

அவருக்கே சிரிப்பு வந்தது.

இதென்ன மாயவேலையா, மந்திரவேலையா? ஒரு அறைக்குள் வந்துநின்று மனசுக்குள் தானாக துப்புத் துலங்கவேண்டும் என்று நினைக்கிறேமே! எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது? விஞ்ஞான ரீதியில் யாராவது இதை ஒத்துக் கொள்ள முடியுமா?

ஆனால் அவருக்குத் தாம்செய்யும் தொழிலில் நம்பிக்கை! ஏதோ ஒரு உணர்வு அவரை எங்கேயோ இழுக்கும்போது அவர் அதற்குக் கீழ்ப் படிந்தாக வேண்டும்! அது ஒரு முடிவில் கொண்டு விட்டாலும் சரி, விடாவிட்டாலும் சரி!

மேனாடுகளில் கூட இப்படி உள்உணர்விலே துப்பறிபவர்கள் பலர் இருக்கிறார்கள்.

மேஜை முன்னால் உட்கார்ந்தார்.

எதிரே அலமாரியில் புத்தகங்கள் வரிசையாக இருந்தன. பருமன் பருமனாக சரித்திரப் புத்தகங்கள். ஸ்பேஸ் விஞ்ஞானம் பற்றி ஒரு புத்தகம். தமிழில் திருக்குறள் காமத்துப் பால் உரை! அடேடே! இந்தப்பாலில் மட்டுந்தான்இவளுக்கு ருசியா?

மகாபாரதம், மாணிக்கவாசகர் வரலாறு, அழகுக் கலைக் குறிப்புகள், யோகா, ஹெரால்ட் ராபின்ஸ், ஆர்தர் ஹேலி.........

பழமையும் புதுமையும் கலந்திருக்கிறது.

சில புத்தகங்களை எடுத்துப் புரட்டினார். அட்டையைக் கழற்றிப் பார்த்தார்.

எதுவும் தெரியவில்லை.

டிராயரைத் திறந்தார். வெள்ளைப் பேப்பர் அடுக்கி வைத்திருந்தாள்.

மேக் அப் சாமான்கள்.

சில கடிதங்கள்.

கடிதம் ஒவ்வொன்றையும் பார்த்தார். லைப்ரரி செநேகிதி, ஒரு பத்திரிகை, ஒரு விளம்பர நிறுவனம் ஆகியவற்றிலிருந்து வந்த கடிதங்கள்! பிரயோசனமே இல்லை.

விரக்தி மேலிட்டு வந்தது.

அறையைச் சுற்றிவரப் பார்த்தார்.

அவருக்கே மனம் வெதும்பியது.

இங்கே, இந்த அறையில் பொருள்களே அதிகமில்லை, என்னத்தைக் கண்டுபிடிக்கப் போகிறோம்?

அரை மணி நேரம் ஆகிவிட்டது.

மெள்ள எழுந்தார்.

அறையை மெள்ளச் சுற்றினார்.

மங்கலாவின் துணிகளை வைத்திருக்கும் சிறிய தேக்கு மர பீரோ! அதை அன்றைக்கே சோதனை செய்தாகி விட்டது.

பாதி அவநம்பிக்கையில் அதைத் திறந்தார். உள்ளே மங்கலாவின் துணிகள், மிதமான கலர்கள்! ஒன்றின்மேல் ஒன்று மிருதுவாய்ப் படிந்திருந்தன.

சோளிகள்!

பாடிகள்!

ப்ராக்கள்!

கீழ்த்தட்டில் உள் பாவாடைகள்!

சிங்கின் நினைவு சுழன்றுகொண்டே இருந்தது!

சோளிகள் ஒன்று இரண்டை எடுத்துப் பார்த்தார். இவை என்ன கதை சொல்லப் போகிறது?—என்று அவர் மனமே அவரைக் கேட்டது. புன்னகை வந்தது.

விரல் நுனிகளால் பாடிகளை எடுத்தார்.

நீங்கள் எதைத் தேடுகிறீர்கள்?—என்று மீண்டும் மனம் கேட்டது.

ஒரு உடம்பின் திண்மையில் படிந்தால்தான் இவைகளுக்கு அழகு!—அவரது ஒரு மனம் ஏதோ புதிதாய்க் கண்டுபிடித்தது போல் கூறியது.

ஸாரியில் கை வைத்தார்.

அவ்வளவு வழவழப்பை எதிர்பார்க்கவில்லை. கையி லிருந்து நழுவி விழுந்தது.

குனிந்து எடுத்தார்.

மென்மையான செண்டின் வாசனை. ஏதோ ஃபிரெஞ்சு செண்டாக இருக்க வேண்டும். ஆல்கஹாலின் மிருதுவான நெடி.

இரண்டாவது ஸாரியை எடுத்தார். வாசனை தெரிய வில்லை. முகர்ந்து பார்த்தார். அந்த ஃபிரெஞ்சு செண்டின் நெடி வந்துவிட்டது.

ஏதோ வேலையில்லாதவர் செய்வது போல் ஒவ்வொரு ஸாரியாக எடுத்தார்.

ஆறுவது ஸாரியை எடுத்தபோது ஏதோ இரண்டு தாள்கள் பறந்த மாதிரி இருந்தது.

என்னவாக இருக்கும்?

சுற்றிவர உற்றுப் பார்த்தார். எதுவும் தெரியவில்லை.

மூளை ஏதோ வேலை செய்தது.

ஸாரியை சன்னல் ஓரம் கொண்டுபோய்க் கீழே வைத்தார்.

ஊமை வெளிச்சம் அதன்மீது பளிச்சென்று விழுந்தது.

மெதுவாக அந்த ஸாரியின் மடிப்புகளைப் பிரித்து விட்டார்.

கீழே ஸாரியைப் பாதியாக விரித்து விட்டார். எதுவும் தெரியவில்லை.

மீளவும் அந்த விரக்தி வந்தது.

ஆனால் மனம் எதையோ துருவவேண்டும் என்று தூண்டியது.

கீழே ஸாரியை உற்றுப் பார்த்தார்.

அங்குல அங்குலமாகப் பார்த்தார்.

இதென்ன?

பொடி மணல்போல் இரண்டு மிகச்சிறிய உருண்டைகள் ஸாரியில் உருண்டன.

உன்னிப்போடு பார்த்தால்தான் தெரிந்தது.

பரபரப்புடன் தள்ளித் தள்ளிப் பார்த்தார். அந்தச் சின்ன உருண்டைகள் அங்கங்கே ஸாரியில் ஒட்டிக் கொண்டிருந்தன. சிலஉருண்டன. சில பகுதிகளில் அவை மிகுதியாக ஒட்டிக் கொண்டிருந்தன.

இவை என்ன?

இரண்டு உருண்டைகளைக் கையில் எடுக்கப் பார்த்தார். அதுவே கஷ்டமாக இருந்தது. அவ்வளவு இக்குணிகளாய் இருந்தன.

கீழே இரண்டைத் தள்ளி நகத்தால் அமுக்கிப் பார்த்தார். அவை நசுங்கிவிட்டன.

ஓகோ, இவை மண் துளிகள் இல்லை. அப்படியானால் என்ன? ஏதாவது திண்பண்டங்களின் துகள்களா?

முகர்ந்து பார்த்தார். நெடி பிடிபடவில்லை. இந்த நெடி எதிலிருந்து எழும்? எங்கேயோ எழும் என்று மூளை அறிந்திருக்கிறது. சட்டென்று நினைவுக்கு வரவில்லை.

மேலும் மேலும் துகள்களை ஆராய்ந்தார். கிடைத்தவற்றை ஸாரியிலிருந்து தட்டி எடுக்க முயன்றார்.

கையில் அவைகளை ஒருவாறு சேர்த்ததும் மூளை டக்கென்று வெளிச்சம் போட்டது.

இவை ஏதோ பூக்களின் மகரந்தங்கள். உலர்ந்துபோய் நிறம் மாறியிருக்கின்றன. இவை ஏராளமாக அந்த ஸாரியில் ஒட்டியிருக்கின்றன.

ஸாரியை மீண்டும் பார்த்தார்.

ஓ! இது ரூஷ் நிறம்!

புரொபசர் மனோகரி சொன்னது நினைவுக்கு வந்தது. மங்கலாவுக்கு ரூஷ் நிறம் பிடிக்கும்.

சிங்கின் மூளை சுறுசுறு என்று வேலை செய்தது.

உடனே சோளிகளை ஒவ்வொன்றாக எடுத்தார். மகரந்தப்பொடி இருக்கிறதா என்று பார்க்க ஆரம்பித்தார்.

கடைசி சோளியில் பொடி ஒட்டியிருந்தது. அந்தச் சோளியின் கலர், ஸாரியின் கலருக்கு மாட்சிங்காக இருந்தது.

சிங் மேலும் தொடர்ந்தார்.

பாடியையும் உள் பாவாடையையும் ஆராய்ந்தார்.

ஒரே ஒரு பாடியிலும் பாவாடையிலும் மகரந்தப் பொடிகள் இருந்தன.

ஒரு விஷயம் அவருக்குப் புரிந்தது.

மங்கலா ரூஸ் கலர் ஸாரியை உடுத்திய அன்று எங்கேயோ தரையில் புரண்டிருக்கிறாள்.

அந்தத் தரையில் மகரந்தப் பொடி நிரம்பிக் கிடந்திருக்கிறது.

அதாவது ஒரு மரத்தடியிலோ, பல மரங்கள் நிறைந்த இடத்திலோ தரையில் மங்கலா படுத்திருக்க வேண்டும், அல்லது புரண்டிருக்க வேண்டும்.

அந்த மரத்தின் பூக்கள்தான் அந்த மகரந்தங்களைக் கீழே உதிர்த்திருக்க வேண்டும்.

மற்றொன்றையும் சிங் கவனித்தார். அந்த ஒரு ஸாரி, பாடி, உள்பாவாடை, சோளி இவைகளில் மட்டும் செண்டின் நெடி வித்தியாசப்பட்டிருந்தது. அந்த நெடியை அனுமானிக்க முடியவில்லை. மிக மிக சன்னமாக வீசியது.

சிங் பிரயாசையுடன் உட்கார்ந்து ஒரு காகிதத்தில் மகரந்தப் பொடிகளை எல்லாம் சேர்த்துக் கொண்டார்.

அந்தத் துணிகளையும் பத்திரமாக ஒரு பேப்பரில் பொட்டலம் இட்டுக் கொண்டார்.

கதவைத் திறந்து வெளியே வந்தார்.

ராம்நாத்திடம் அந்தத் துணிகளை எடுத்துப் போவதாகக் கூறிவிட்டு விடை பெற்றார்.

17

சிங்குக்கு ஒரு கஷ்டம். ஃபோரன்சிக் லாபரடரியில் மகரந்தத்தை வைத்து ஆராய்ச்சி நடத்த முடியுமா?

முதலில் அந்த லாபரடரியில் ஒரு பாடனிஸ்ட் கிடையாது.

துப்பறிவதில் இப்படி ஒரு பிரச்சினையை யாரும் எதிர் பார்த்திருக்க மாட்டார்கள்.

என்ன செய்யலாம் என்று யோசனையில் இருக்கும்போது அவரது சக இன்ஸ்பெக்டர் கோபால் வந்து சேர்ந்தார்.

—மிஸ்டர் கோபால்! எனக்கு மங்கலா கேஸ்லே ஒரு தடயம் கிடைச்சிருக்கு! ஆனா அந்தத் தடயம் கேஸுக்கு உதவி பண்ணினாலும் பண்ணலாம். பண்ணாவிட்டாலும் இல்லை, என்று சொல்லி, மின் விசிறியை நிறுத்திவிட்டு பொட்டலத்தை மெதுவாக அவிழ்த்து மகரந்தப் பொடிகளைக் காண்பித்தார்.

—இதென்ன விஷப்பொடியா என்றார் கோபால்.

—விஷப்பொடி இல்லை-மகரந்தப் பொடி. என்னுடைய தியரி என்னவென்றால், இந்தப் பொடி சிதறி உள்ள மரத்தின் கீழ் மங்கலா விழுந்து புரண்டிருக்க வேண்டும். பாடியில்கூட இந்தப் பொடிகள் தென்பட்டன. அநேகமாக அவளும் அவள் காதலனும் அந்த இடத்தில் கட்டிப் புரண்டிருப்பார்கள்.

கோபால், சிங்கின் முதுகைத் தட்டினர்.

—பேஷ்! பிரமாதமான தியரி! என்ருர்.

—என்ன! கேலி செய்கிறீர்களா? என்று கேட்டார் சிங்.

—இல்லவே இல்லே! இதை ஆராய்ந்து பார்க்கலாம், ஆனல் இந்த ஸிடியிலே எத்தனை ஆயிரம் மரங்கள் இருக்கின் றன. எத்தனை பார்க்குகள், எத்தனை தனி இடங்கள்! இதில் எங்கே எந்த மரத்திலிருந்து இந்த மகரந்தம் விழுந்தது என்று கண்டுபிடிக்கப் போகிறீர்கள்? என்று கேட்டார்.

—அதுதான் கஷ்டம், பார்ப்போம்! எனக்கு ஒரு தாவர இயல் நிபுணரைப் பார்க்க வேண்டும்.

—அப்படியா? என் நண்பர் ஒருவர் அக்ரிகல்சுரல் காலே ஜில் புரொபசராக இருக்கிருர். விசாரிக்கிறேன்—ஆனல் ஒன்று மிஸ்டர் சிங்! இந்தத் துணியில் உள்ள மகரந்தப்பொடி அந்தப் பெண் உபயோகித்தபோதுதான் ஒட்டிக் கொண்டது என்று எப்படிச் சொல்ல முடியும்?

—வேறு என்ன வழி இருக்கிறது?

—ஏன்? லாண்டிரியிலிருந்து வரும்போதே அந்தப் பொடி ஒட்டியிருந்தால்?

—அதை நான் கவனித்துவிட்டேன். இது உடுத்தி அவிழ்த்த டிரஸ்தான்! சலவைக்குப் போடாமல் வைத் திருக்கிருள். அதன் உலேப்பிலேயே அதைப் புரிந்து கொண் டேன்.

சிங் பொட்டலத்தை அவிழ்த்து ஸாரி, சோளிகளை எடுத் துக் காட்டினர்.

கோபால் அதை ஆர்வமுடன் பார்க்கத் தொடங்கினர்,

18

தூாவர இயல் நிபுணர் மகரந்தங்களே இரண்டு வாரங்கள் ஆராய்ச்சி செய்துவிட்டு சொன்ன விஷயங்கள்.

இவை செம்பருத்திப் பூவின் மகரந்தங்களாக இருக்க லாம். மிகவும் கருகிவிட்டதால் அறுதியாகச் சொல்ல முடிய வில்லே.

இந்த மகரந்தங்கள் ஒரு மாதத்திலிருந்து இரண்டு மாதத் திற்கு முன்பு வரை பூவிலிருந்து உதிர்ந்திருக்கலாம்.

மகரந்தங்கள் நல்ல ஊட்டமுடன் கொழுத்திருந்தால் தான் உலர்ந்தபிறகும் இவ்வளவு திண்மையாகவும், உள்ளே ஈரம் உள்ளதாகவும் இருக்க முடியும். ஊட்டமுடன் அவை செழித்து வளரவேண்டுமானுல் எங்கேயாவது தன்னிச்சை யாக இயற்கையாக வளர்ந்திருக்க வேண்டும்.

இந்த விஷயங்கள் சிங்குக்கும் போதும் என்று தோன் றியது, இந்த மரங்கள் வளர்ந்த இடத்தைக் கண்டுபிடித்து விட்டால் அதிலிருந்து ஆட்களேக் கண்டுபிடிப்பது சற்றுஎளிது.

மங்கலா படித்த கல்லூரி, அவள் உபயோகித்த லேப்ரரி, அவளது சிநேகிதிகளின் வீடுகள், அவள் ஆராய்ச்சி செய்த மியூசியம் ஆகிய ஒவ்வொன்றையும் பார்க்கத் திட்டம் வகுத் தார்.

ஒரு வாரத்திற்குள் அநேகமாக எல்லாவற்றையும் தீர்த்து விட்டார்.

மியூசியம் ஒன்றுதான் பாக்கி!

ஒரு புதன் கிழமை மாலே இரண்டுமணிக்கு மியூசியத் திற்கு புறப்பட்டார்.

அவர் போன சமயம் பெரியதொரு ஆந்திரா கும்பல் திருப்பதி மொட்டையோடு வந்து மியூசியத்தை மொய்த்

திருந்தது. இரண்டு டூரிஸ்ட் பஸ்களில் அவர்கள் வந்திருந்தார்கள்.

சிங்குக்கு அது சௌகரியமாய் இருந்தது. யாருக்கும் தன்னை அறிவித்துக் கொள்ளாமல் தானும் ஒரு டூரிஸ்ட் போல் மியூசியத்தின் விஸ்தாரமான தோப்புவெளியில் உலாவினார்.

அந்தப் பகுதியை ஒரு மினி காடு என்று கூடச் சொல்லலாம். நடக்க நடக்க நீளமாகிக் கொண்டே இருந்தது.

சுற்றிலும் உள்ள மரங்களை உற்றுப் பார்த்துக் கொண்டே நடந்தார். மேலே பார்த்துப் பார்த்து கழுத்துதான் வலித்தது.

அந்த மியூசியத்தின் பெரிய சுற்றளவில் அவர் நடந்து விட்டார்.

ஆனால் செம்பருத்தி என்ற நாமதேயமே தெரியவில்லை.

சுற்றிவிட்டுத் திரும்பி வரும்போது மணி நான்கு ஆகிவிட்டது. —எல்லோரும் வாங்கோ! கதவைப் பூட்டறோம் என்று வேலைக்காரர்களின் இரைச்சல்!

தொடர்ந்து சன்னல்களைச் சடார் சடார் என்று தள்ளி அடைக்கும் சத்தம்!

மியூசியம் அலுவலர்கள் சீக்கிரம் ஓடத் தொடங்கிக் கொண்டிருந்தார்கள்.

சிங் தூரத்திலிருந்தே எல்லாவற்றையும் கவனித்தார்.

டைரக்டர், கியூரேட்டர், டாக்ஸிடெர்மிஸ்ட் மூவரும் பேசிக் கொண்டே வெளியில் வந்து, தூரத்தில் போய் கிளைப் பாதைகளில் பிரிந்தார்கள்.

மியூசியம் சீல் வைக்கப்பட்டுவிட்டது.

இரவு வாட்ச்மேன் ஒரு வயசானவன். கையில் டார்ச் கம்புகளுடன் வந்து சேர்ந்தான்.

இன்னும் சிறிது நேரத்தில் ஸிடியிலிருந்து இரண்டு துப்பாக்கி போலீசார் வந்து சேருவார்கள். இரவு நேரம் முழுவதும் அவர்கள் தான் காவலர்கள்.

மியூசியத்திற்குள் விலை மதிக்க முடியாத பொருள்கள் நிறைய இருந்தன.

வெறிச்சென்று போன இந்த மியூசியத்தின் ஒற்றையடிப் பாதை வழியே சிங் நடந்து, கட்டிடத்தின் பெரிய பெரிய படிகளில் ஒன்றின்மீது வந்து உட்கார்ந்தார்.

வாட்ச்மேன் கூர்ந்து கவனித்துக் கொண்டே அவர் முன்னால் வந்தான்.

—இனிமே நாளைக்குத்தான் திறப்பாங்க! என்றான்.

சிங்குக்குச் சிரிப்பு வந்தது.

—மியூசியம் பார்க்க வரலைங்க! என்றார். பிறகு யோசித்துக்கொண்டே—ஒரு மருந்துச் சாமான் தேடி வந்தேன் கிடைக்கல்லே.

—என்ன மருந்து?

—ஒரு பூ ஒண்ணு வேணும்!

—என்ன பூ.

—செம்பருத்திப் பூ! கொஞ்சம் நிறைய வேணும். நூறு இருநூறுன்னு வேணும்.

—பூ இவ்வளவுதானா? என்றான் வாட்ச்மேன். அதோ அந்த இரட்டை மரம் நிக்குது பார். அதுக்கு வடக்கே மூணு பர்லாங் நடந்தால் போதும்.

தோப்புத் தோப்பா வளர்ந்திருக்கு. எவ்வளவு பூ வேணுமின்னாலும் கிடைக்கும்,

—சிங் துள்ளி எழுந்தார்.

—அவன் காட்டிய திசையைப் பார்த்தார். அவர் கண்ணில் பட்டது முதலில் குவார்ட்டர்ஸ். அதைத் தாண்டித் தான் அந்த செம்பருத்தித் தோப்பு இருக்கிறது என்று வாட்ச்மேன் சொல்கிறான்.

—ரொம்ப சந்தோஷங்க! வரேன். நேராக வடக்கே பார்த்து நடக்கலானார்.

நாணற் புதர் மத்தியில் ஒற்றையடிப் பாதை! விரு விரு என்று நடந்தார்.

குவார்ட்டர்ஸே வெகு தூரத்தில்தான் இருந்தது. அதன் ஒதுக்குப் புறமாக பாதை சென்றது.

குவார்ட்டர்ஸைத் தாண்டி பதினைந்து நிமிடம் நடந்த பிறகு அந்த இடத்தை அடைந்தார்.

அடேயப்பா! அதை ஒரு செம்பருத்திக் காடு என்றே சொல்லவேண்டும்.

கீழே புல்லும் நாணலும் மெத்தென்று ஆக்கிய தரை!

அந்தத் தரை முழுவதும் மகரந்தப் பொடிகள் சிதறிக் கிடந்தன.

சிங் மனதில் ஒரே சந்தோஷம்! ஏதோ பெரிய வெற்றி கிடைத்தது போல் நினைத்தார்.

சுற்றிவர நோட்டம் விட்டார்.

அருகில் ஒரு குளம் மாதிரி தண்ணீர் தேங்கி இருந்தது.

சுற்றிவர பெருங்கற்கள் சிதறிக் கிடந்தன.

அந்த இடமே பார்ப்பதற்கு ரம்மியமாயிருந்தது.

சரியான இடம்! காதலர் சந்திப்பதற்கு ஒரு உன்னத மான இடம்.

19

மறு நாள் காலையில் சிங் பத்து மணிக்கு மியூசியத்திற்குப் போனார்.

டைரக்டர் அறைக்குப் போனபோது, அவர் 'ரவுண்ட்ஸ்' ஸில் இருக்கிறார் என்று சொன்னார்கள்.

நேராக அவர் மியூசியத்திற்குள் போனார்.

இவ்வளவு வருஷங்களாக நகரத்தில் இருக்கிறாரே ஒழிய, மியூசியத்தைப் பார்த்ததில்லை.

உள்ளே படிமக்கூடத்தின் வழியாக செல்லும்போது, அந்த நிர்மானுஷ்ய ஹாலில் எல்லா கடவுள்களும் அவரை உற்றுப் பார்ப்பது போலிருந்தது.

அடுத்தாற்போல் சிற்ப அறைக்குள் பெரிய அளவு புத்தர்களும், வராக அவதாரங்களும், அனுமார், வீரபத்திரர் சிலைகளும் அவரை விறைத்துப் பார்த்தன.

மூன்றாவதான ஓவியக் காட்சிக் கூடத்தில் டைரக்டர் நின்று கொண்டிருந்தார். அவர் முன்னால் ஒரு டெக்னிகல் அசிஸ்டெண்ட் ஒரு ஓவியச் சட்டத்திற்கு ஒரு ரசாயனத் திரவத்தைப் பூசிக்கொண்டிருந்தார்.

இன்ஸ்பெக்டரைப் பார்த்தார் டைரக்டர் சூரேசன்!— வாங்க, வாங்க! என்றார்.

—மிஸ்டர் சூரேசன்! முக்கியமான காரியம்! உங்களைப் பார்க்க வந்தேன் என்றார்.

சூரேசன் உடனே அவருடன் சென்றார்.

இருவரும் டைரக்டரின் அறையில் உட்கார்ந்தார்கள்.

—மிஸ்டர் சூரேசன்! எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது.

—சொல்லுங்கள், இன்ஸ்பெக்டர்.

—மங்கலா மறைந்து போவதற்கு முன்பாக முந்திய வாரத்தில் இந்தப் பக்கம் வந்திருக்கிறாள் என்று ஆதாரம் கிடைத்திருக்கிறது.

—அப்படியா? அது எனக்குத் தெரியாது. கியூரேட்டரை விசாரிக்கட்டுமா?

—நோ, நோ வேண்டாம்! நான் அதை கவனித்துக் கொள்கிறேன், நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும்.

—சொல்லுங்கள்.

—இங்கே வேலை செய்பவர்களின் குணங்களைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். யார் யார் சுபாவத்தில் கெட்டவர்கள் என்று சொல்ல முடியுமா?

சுரேசனின் கண்ணாடி பளபளத்தது.

—இது ஒரு கஷ்டமான கேள்வி! அஃப்கோர்ஸ் எனக்கு ஒன்றிரண்டு ஒழுங்கு நடவடிக்கை கேஸ்கள் வந்தன. ஆனாலும் சொல்றேன். இங்கே இருக்கிறவங்க எல்லோருமே டீஸண்ட் ஆளுங்க! யார் மேலேயும் அநாவசியக் குற்றம் சொல்ல முடியாது, நான் இருபத்தைந்து வருஷமா இங்கே வேலை பார்க்கிறேன். என்னாலே இதைத் திட்டவட்டமாச் சொல்லமுடியும்!

—பெண்கள் விஷயத்திலே தவறாக நடக்கிறவங்க யாராவது இருக்கிறார்களா?

—பொதுவா அப்படி எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை. ஒரு கைட் மட்டும் ஒரு வேலைக்காரப் பெண்ணை இழுத்தான்னு ஒரு ரிப்போர்ட். அதைப் பெரிசு பண்ணாம எச்சரிக்கை செய்து விட்டுவிட்டோம்.

—மங்கலா இங்கே வந்த போது அவளுக்கு அதிகமா உதவி செய்தது யார் யார்?

—சொல்லப் போனா எல்லோருந்தான் செய்தோம். இன்ஸ்பெக்டர்! பொதுவா படித்த பெண்கள் யாராவது இங்கே விஷய ஞானத்தோடு வந்தா அது எங்களுக்குப் பெரிய விருந்து. எல்லோருமே அவளுக்கு உதவி பண்ணுவோம். அதெல்லாம் எங்களுக்குப் பெரிய சந்தர்ப்பங்கள்! ஏதோ அரசாங்கம் இந்தப் பொருட்காட்சி சாலைகளை வச்சிருக்கு. தவிர இதை எந்த அறிவாளிங்க வந்து பார்க்கிறாங்க! திருப்பதி போய்விட்டு வரும் மொட்டைத் தலைங்கதான் நிறைய வந்து பார்க்கிறாங்க!

—மங்கலாவுக்கு உதவி செய்வதில் யாருக்காவது ஸ்பெஷல் இண்ட்ரெஸ்ட் இருந்ததைப் பார்த்தீங்களா?

—யாரையும் குறிப்பிட்டுச் சொல்றதுக்கு இல்லே.

—சரி என்றார். இன்ஸ்பெக்டர்—இது சிக்கலாகத்தான் இருக்கும் போல இருக்கு.

—இன்ஸ்பெக்டர்! மங்கலா இங்கே வந்தாள் என்று எப்படித் தெரிந்தது?

—ஒரு செய்தி கிடைத்தது.

—தனியே வந்தாளா? யாருடனாவது வந்தாளா?

—தனியாகத்தான் வந்திருக்கவேண்டும்.

—இல்லே, வந்திருந்தால் க்யூரேட்டருக்கு நிச்சயம்தெரிஞ்சிருக்கும், கேட்டுப்பாருங்க!

20

மியூசியத்திற்கு நான்கு நாட்கள் சென்று கியூரேட்டர் தொடங்கி எல்லா அலுவலர்களையும் சிங் விசாரித்தார்.

எல்லோரும் கிட்டத்தட்ட ஒரே விதமான பதிலைத்தான் தந்தார்கள். மங்கலா ஒரு நல்ல பெண். அவளுடன் யாரும் சந்தேகப்படும்படி நெருங்கிப் பழகவில்லை. அவள் மியூசியத்திற்கு வந்து பல மாதங்கள் ஆகிவிட்டன. சமீபத்தில் வரவே இல்லை.

ஒரே செய்திகளே எல்லாரிடமும் கிடைத்ததால் சிங்கிற்கு தன் அனுமானங்கள் மீதே சந்தேகம் இருந்தது.

ஒரு வேளை மங்கலா காணாமல் போனதற்கும், மியூசியத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இராதோ?

அவளது ஸாரியில் உள்ள மகரந்த பொடிகள் வேறு இடத்தைச் சேர்ந்தவையாக இருக்குமோ?

மியூசியம் தோப்பில் உள்ள மகரந்தங்களை அவர் ஒரு காகிதத்தில் சேர்த்து வைத்திருந்தார்.

அதை எடுத்துக் கொண்டு ஒருநாள் காலையில் தாவர இயல் நிபுணரிடம் சென்றார்.

நிபுணர் அந்த மகரந்தங்களை வெகு நேரம் பரிசோதித்துப் பார்த்தார்.

பிறகு சிங்கைப் பார்த்து—மிஸ்டர் சிங்! நீங்கள் முன்பு கொடுத்த மகரந்தங்களும் இவையும் ஒன்றுதான். வித்தியாசமில்லை, என்றார்.

—வெரிகுட், ஸார்! எனக்கு ஒரே ஒரு சந்தேகம்! நகரத்தின் வெவ்வேறு பகுதிகளில் செம்பருத்தி வளர்ந்திருக்கிறது. என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த வெவ்வேறு இடத்துப் பூக்களின் மகரந்தங்கள் ஒரே மாதிரிதானே இருக்க முடியும்?

—மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் வித்தியாசம் இராது. ஆனால் சோதனைசெய்தால் அதன் ஊட்டம், பருமன், இவற்றில் எல்லாம் வித்தியாசப்படும், என்றார் நிபுணர்.

—அப்போது நிச்சயமாக இவை ஒரேவித மகரந்தங்கள் தான்?

—ஆமாம்! இதில் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் இன்னொரு வழியும் இருக்கிறது.

—என்ன வழி?

நீங்கள் முதலில் கொடுத்த மகரந்தங்களில் மண் துகள்களும் ஒட்டிக் கொண்டிருந்தன.

—அப்படியா?

—ஆமாம்! இப்போதும் மண் துகள்களோடு மகரந்தத்தைக் கொடுத்திருக்கிறீர்கள்! இந்த இரண்டு விதத் துகள்களும் ஒரே இனத்தைச் சேர்ந்ததா என்று கண்டுபிடிக்க வேண்டும் .

—நல்ல யோசனை என்று துள்ளினார் சிங்.

—நீங்கள் ஒரு புவிஇயல் நிபுணரைப் பாருங்கள். சந்தேகம் நிவர்த்தியாகிவிடும்.

அடுத்து, புவி இயல் நிபுணரைப் பார்த்தபோது, அவர் அவகாசம் கேட்டார்.

மகரந்தத்தில் ஒட்டிய மண்ணின் கூறுகளைப் பல விதங்களில் பரிசோதிப்பதற்கு நான்கு நாட்கள் ஆகும் என்றார்.

சிங் நான்கு நாட்கள் காத்திருக்க வேண்டிவந்தது.

ஐந்தாம் நாள் காலையில் நிபுணரின் லாபரடரில் டாண் என்று விஜயம் ஆகிவிட்டார்.

—நீங்கள் கொடுத்த இரண்டு மண்துகள்களும் ஒத்திருக்கு ஸார் என்று மகிழ்ச்சியுடன் கூறினார் நிபுணர்.

சிங் அவர் கைகளைக் குலுக்கினார். பிறகு—எனக்கு ஒரு சந்தேகம் என்றார்.

—தாராளமாகக் கேளுங்கள்!

—நான் இதுவரை மண் ஆராய்ச்சி மூலம் துப்பறிந்ததில்லை. இதுதான் முதல் தடவை! அதனால் கேட்கிறேன். இந்த இரண்டு மண் சாம்பிளும் ஒன்று என்கிறீர்கள். நகரத்தில் இதே போன்ற மண் பல இடங்களில் இருக்காதா?

—இருக்கலாம்! ஆனால் அபூர்வம். வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பொருள்கள் மண்ணுடன் கலந்து விடுகின்றன. ஒரு நகரத்தில் கலப்புக்கு சந்தர்ப்பங்கள் அதிகம். வெவ்வேறு செயற்கைக் கலப்புகள் அதிகமாக இருக்கும். ஆனால் நீங்கள் கொடுத்த சாம்பிள்களில் அப்படிப்பட்ட கலப்புகள் இல்லை. இவை இரண்டும் கிராமப் புறங்களிலோ வெட்ட வெளிகளிலோ எடுக்கப்பட்ட சாம்பிள்கள்!

சிங் மகிழ்ச்சியுடன் திரும்பினார்.

இன்னும் ஒரே ஒரு சோதனைதான் பாக்கி இருந்தது. மங்கலா தன் வீட்டிலிருந்து மியூசியத்திற்குப் போவ

தானுல் பஸ்ஸில் போயிருக்க வேண்டும். அந்த குறிப்பிட்ட ரூட் கண்டக்டர்களிடம் விசாரிக்க வேண்டும்.

முதலில் அதில் ஏமாற்றந்தான் கிடைத்தது. அந்த ரூட்டில் வேலை செய்த நான்கு கண்டக்டர்களும் மங்கலா வின் போட்டோவைப் பார்த்துவிட்டு அவளைப் போல் எந்தப் பெண்ணையும் பார்த்த நினைவு இல்லை என்ருர்கள்.

சிங்குக்கு யோசனை எழுந்தது. பிறகு இன்னொரு வழி யைக் கடைப்பிடிக்க நினைத்தார்.

மங்கலா வீட்டுப்பக்கத்திலிருந்து மியூசியம் போகும் ரூட் டிற்குப் பதிலாக, வெவ்வேறு பகுதியிலிருந்து மியூசியத்திற் குப் போகும் ரூட்களை விசாரிக்க நினைத்தார்.

விசாரித்ததில் ஒரே ஒரு ரூட்டில் ஒருகண்டக்டர் மங்கலா வைப் பலமுறை பார்த்ததாகக் கூறினுர்.

—சுமார் இரண்டு மாதம் முன்னுல் கூட பார்த்தேனுங்க! இந்தப் பெண் மியூசியத்திற்கு முந்தின ஸ்டாப்பிலேயே இறங்கிடுவாங்க என்ருர் கண்டக்டர்.

சிங்கிற்குப் பளிச்சிட்டது.

மங்கலா தன் வீட்டிலிருந்து வேறு எங்கேயோ போய் விட்டுப் பின்னர்தான் மியூசியத்திற்குப் போயிருக்க வேண்டும்.

அப்படி அவள் மியூசியத்திற்குப் போவதை ரகசிய மாகவே வைத்திருக்க வேண்டும்.

அவளது பெற்ருேர்களுக்குக் கூட அது தெரிந்திருக்காது.

சரி, ஒரு உறுதி விழுந்துவிட்டது. மங்கலா மியூசியத்தில் உள்ள யாருடனே ரகசியமாகத் தொடர்பு வைத்திருக்க வேண்டும்.

அவள் மறைவுக்கு அந்த யாரோதான் உடந்தையாக இருந்திருக்க வேண்டும்.

21

மிஸ்டர் சுரேசன்! மங்கலா கடந்த மாதங்களில் பல முறை மியூசியத்திற்கு வந்ததாக எங்கள் கையில் சாட்சியங்கள் இருக்கின்றன. அவள் மறைவுக்கு இங்கே யாரோ ஒருவர் தான் காரணமாக இருந்திருக்க வேண்டும் என்றார் சிங்.

டைரக்டர் சுரேசன் அதிசயப்பட்டார்.

—இன்ஸ்பெக்டர்! இதுஎப்படி நடக்கும்னுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கு. இருந்தாலும் உங்களுக்கு முறைப்படி எல்லாவித உதவியும் நான் அளிக்க தயாராக இருக்கிறேன். நீங்கள் முழு அளவு விசாரணைகள் நடத்தலாம் என்றார்.

—அந்தப் பெண் இங்கே வந்தால் உங்களுக்குத் தெரியாமல் போகிற சந்தர்ப்பம் உண்டா?

—நிறைய உண்டு. உண்மையில் நான் ஆபீசை விட்டுப் போவதேயில்லை. ரவுண்ட்ஸுக்கு எப்பவாவது போனால் உண்டு. இந்தப் பெண் என் கண்களில் படாமலேயே வந்து விட்டுப் போக சான்ஸ் இருக்கு.

—அவள் வந்தால் பொதுவாக உங்கள் பணியாட்கள் உங்களிடம் சொல்லிவிடுவார்கள் அல்லவா?

—நிச்சயமாகச் சொல்வார்கள்.

அப்படியானால் உங்களுக்கு ஏன் இதைப்பற்றித் தெரியவில்லை?

ரகசியமாக வந்துவிட்டுப் போனால் எப்படி எனக்குத் தெரியும்? தவிர மியூசியத்திற்குள் வந்தாள் என்பதற்கு என்ன நிச்சயம் இருக்கிறது? மியூசியம் காம்பவுண்டு எவ்வளவு பெரிது. இதில் எந்தப் பகுதிக்காவது வந்து போய்விட்டால்...

—அதையும் கவனிக்க வேண்டியதுதான் என்றார் சிங்.

—உங்களுக்கு வேண்டுமென்கிற வசதி எல்லாம் கொடுக்கிறேம் என்ருர் சுரேசன்.

இரண்டாவது ரவுண்ட் விசாரணையைத் துவக்கினுர் இன்ஸ்பெக்டர் சிங். இரண்டு முழு நாட்கள் ஓடிவிட்டன.

யாரிடமிருந்தும் உதவியான தகவல் எதுவும் வரவில்லை. ஒரே வெறுப்புதான் ஏற்பட்டது. எனினும் அவருக்கு ஒரு அனுமானம்.

அங்குள்ள எட்டு பேர்களுக்குள்தான் யாராவது பொய் சொல்லியிருக்க வேண்டும்.

எட்டு பேருந்தான் படித்தவர்கள்.

1) மியூசியம் ஹெட்கிளார்க்—பெயர் பரமேஸ்வரன் வயது 48. குவார்ட்டர்ஸில் இருந்தார். இரண்டு பிள்ளைகள், பெண்கள்,மனைவி,தாயார்,தகப்பனுர் எல்லோரும் அவருடன் இருந்தார்கள்.

2) கிளார்க் நம்பர் 1. பெயர் சிங்காரம். வயது 35. குவார்ட்டர்ஸில் இருந்தார். மனைவி, ஒரு மைத்துனி, வயதான தாயார் வீட்டில் இருந்தார்கள்.

3) கிளார்க் நம்பர் 2. ரமேஷ், வயது இருபத்தெட்டு. திருமணமாகாதவன். வெளியே பெற்றோர்களோடு இருந்தான் தினமும் பஸ்ஸில் வந்தான்.

4) டெக்னிகல் அசிஸ்டெண்ட். டில்லிபாபு. வயது 32, வெளியே இருந்தார். மனைவி, இரண்டு குழந்தைகள். தினமும் சைக்கிளில் வந்தார்.

5) டாக்சிடெர்மிஸ்ட். ராகவலு. வயது 36, மனைவி, குழந்தைகள் கிடையாது. குவார்ட்டர்ஸில் இருந்தார்.

6) கியூரேட்டர் நடராஜன். நாற்பது வயது, மனைவி, ஆறுகுழந்தைகள், பாட்டனுர் உயிரோடு இருந்தார்.

7) கியூரேட்டர். சந்திரகுமார். வயது 36, திருமணமாகாதவர். குவார்ட்டர்ஸில் இருந்தார். ஒரு வயதான அம்மாள் சமையல்காரி.

8) டைரக்டர். சுரேசன். ஐம்பத்தொரு வயது, மனைவி உண்டு. குழந்தைகள் கிடையாது. குவார்ட்டர்ஸில் இருந்தார்.

இதில் கிளார்க் ரமேஷும், கியூரேட்டர் சந்திரகுமாருந் தான் திருமணம் ஆகாதவர்கள். இரண்டு பேரும் ஸ்டைலாக டிரஸ் செய்பவர்கள்.

இரண்டு பேர்களில் ரமேஷை நீக்கிவிடலாம். அவன் ஒரு குமாஸ்தா. அவனிடம் மங்கலா அதிகம் பழகியிருக்க மாட்டாள்.

சந்திரகுமார்தான் இளமையோடும் அதே நேரத்தில் படிப்போடும் பதவியோடும் இருந்தார்.

மங்கலா பழகி இருந்தால் இவரோடு பழகியிருக்கலாம். ஆனால் இவர் பேசுவதைப் பார்த்தால் எந்தவிதச் சந்தேகமும் உண்டாகவில்லை. நிறைய ஆராய்ச்சிகள் செய்து மேலும் போய் புகழ் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரே ஆசைதான் இவருக்கு! எந்நேரமும் புத்தகமும் ஆராய்ச்சியுந்தான்.

அனுமானங்கள் இரண்டு பேரைச் சுட்டிக்காட்டினாலும், இன்ஸ்பெக்டர் எதையும் கவனக்குறைவாக விட்டு விட விரும்பவில்லை.

தம்முடைய வழக்கமான பாணியில் எல்லாரையும் ஆராய்ந்துவிட நினைத்தார்.

24

இரண்டாவது ரவுண்ட் விசாரணை முடிந்த அன்று மாலையில் இன்ஸ்பெக்டர் சிங்குக்கு நகரம் திரும்ப உடனே விருப்பமில்லை.

இன்னும் ஆராய்வதற்கு வழி ஏதாவது இருக்கிறதா என்று துருவினர்.

விசாரணையின் போது வாட்ச்மேன் பாலுசாமியின் வீடு பக்கத்தில் ஒரு பர்லாங்கில் இருக்கிறது என்பதை அறிந்தார்.

அந்த நாளில் வேலையில் சேரும்போது பொய் வயது சொல்லியிருப்பான் போல இருக்கிறது.

இப்போது அவனுக்கு வயது அறுபதுக்கு மேல் இருக்கும்.

இருந்தும் ரிடையர் ஆகாமல் வேலைக்கு வந்து கொண் டிருந்தான். அவனது ஆபீஸ் வயது ஐம்பத்திரண்டுதான்.

நாரங்குப்பம் வழியைக் கேட்டுக் கொண்டு போனர். ஒரு பர்லாங் தூரத்தில் இருந்தது. அங்கே போனதும்தான் வாட்ச்மேனுக்கு அன்று வீக்லி விடுமுறை என்று தெரிந்தது. சாவகாசமாகக் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்தான்.

இன்ஸ்பெக்டர் ஐயா வந்ததும் பாலுசாமிக்குத் தலை கால் தெரியவில்லை. ராஜ உபசாரம் செய்து அவரைக் கயிற்றுக் கட்டிலில் உட்கார்த்திவிட்டு அவன் கீழே உட் கார்ந்து கொண்டான்.

—பாலுசாமி! நீங்கதான் அந்தக் காலத்து மனுஷர். எனக்கு உதவி செய்யணும்! ஒரு பொண்ணு, பாவம் வீட்டிலே காணுமல் போயிட்டா. பெத்தவங்க அழுருங்க! யாரோ அயோக்கியன் அவளை இழுத்துக்கிட்டுப்போய் என்னபண்ணி ஞனே தெரியாது. இப்போ ஆளைக் காணவில்லை! உங்க மியூசி யத்திலே யாரைக் கேட்டாலும் துப்புத் துலங்க மாட்டேங் குது. என்ன செய்யலாம்? என்ருர்.

பாலுசாமி—கையைக் கட்டிக்கொண்டு பேசினன்.

—ஸார்! நீங்க படிச்சவங்க! நான் சொன்ன கேட்டுப்பீங் களோ, என்னவோ! இருந்தாலும் சொல்லறேன். நம்ப மியூசி யத்தில் பேய்கள் நடமாடுது.

சிங்குக்கு தூக்கி வாரிப் போட்டது. இதென்ன புதுச் செய்தி?

—பேய்ங்களா?

—ஆமாம், ஸார்! உள்ளே மியூசியத்திற்குள்ளே இருக்கு! அதுங்க அடிக்கிற லூட்டி சொல்லி முடியாது. இன்னிக்கும் சரி, நானு இருந்தாலும் சரி, போலீஸ்காரரா இருந்தாலும் சரி, அந்தக் கட்டடத்துத் தாழ்வகரத்திலே படுக்க மாட்டோம். வெட்ட வெளியிலே கட்டில் போட்டுக் கிட்டுத் தான் படுப்போம்.

—என்ன காரணம்!

—அது என்னவோ, ஸார்! தாழ்வாரத்தில் படுத்துட்டா ராவுலே அப்படியே ஆளேப்போட்டு அமுக்குது! எப்படிப் பட்ட சீமான்கள் எல்லாம் சவால் விட்டிருக்காங்க! படுத் துட்டு அவஸ்தைப்பட்டிருக்காங்க! இந்த விஷயம் டைரக்டர் ஐயாவுக்கே தெரியுமே!

—அவர் என் கிட்டே சொல்லலியே!

—கேட்டுப் பாருங்க!

—சரி, இந்தப் பேய்களுக்கும் மங்கலாவுக்கும் என்ன சம்பந்தம்?

—அந்தப் பொண்ணு ஆராய்ச்சி கீராய்ச்சின்னு சொல் லிக்கிட்டு முதுமக்கள் தாழியிலே கையை வச்சு, காலே வச்சு, ஸ்கேல் புடிச்சு, அளந்து, மூடியைத் திறந்து, தகரத்தாலே உள்ளே நோண்டி என்னவெல்லாமோ பண்ணிச்சுங்க! அந்த தாழி ஆதிச்சநல்லூர் தாழிங்க. நாலாயிரம் வருசத்துக்கு முன்னாலே புதைச்சிருக்காங்க! அந்த நாளிலே நூற்றிருபது வயசு இருப்பாங்களாம். சாகமாட்டாங்களாம். தொண்டு கிழம் ஆகி, காது, கண், பேச்சு எல்லாம் போயிடுமாம். இருந் தாலும் சாகாமே அப்படியே இருப்பாங்களாம். கஞ்சியோ கூழோ வாயிலே மட்டும் ஊத்தி விடுவாங்களாம். அந்த ஊட்டத்திலே அப்படியேஇருப்பாங்களாம். ஜடம் மாதிரிஎந்த உணர்ச்சியும் இல்லாம அப்படியே வருஷக்கணக்கிலே உயி ரோடு இருப்பாங்களாம்! லேசிலே சாகமாட்டாங்களாம்! இதனாலே மத்த ஜனங்க என்ன பண்ணினாங்க!

அவங்களை உயிரோட இந்தத் தாழிக்குள்ளே வச்சுபுதைச்சுடுவாங்களாம்! இப்படிப் புதைச்ச தாழி ஆதிச்சநல்லூர்லே ஆயிரக்கணக்கிலே இருக்காம். அந்தத் தாழியிலே போய் இந்தப் பொண்ணு வம்பு பண்ணக் கூடாது, ஸார்!

தீவிரமாகப் பேசி முடித்தான் பாலுசாமி.

சிங்குக்குத் தூக்கி வாரிப்போட்டது. இதென்னடா கிணறு வெட்டப்போய் பூதம் கிளம்புகிறதே, என்று நினைத்தார்.

—ஏன் பெரியவரே! அந்தப் பொண்ணு அந்த மாதிரி ஆராய்ச்சி பண்ணினது தப்புங்கிறியா?

—தப்பு தப்பு தப்பு ஸார்! பெரியவங்க சமாதியைத் தோண்டலாமா? எத்தனை வருசத்துக்கு முன்னாலே செத்துப் போனா என்ன? மனுசன் மனுசன் தானே! அவனை தோண்டி எடுக்கலாமா? இங்கிலீஷ்காரன் செஞ்சான்னா அது அவன் தலைஎழுத்து. ஆதிச்சநல்லூர் ஓட்டை எடுத்துக் கொண்டு போன பீட்டி துரைபட்ட அவஸ்தை தெரியுமா? செத்தவன் ஆவி யாரையும் விடாதுங்க! அதுவும் முழுசா சாகலியே! அந்தக் காலத்திலே சாகாமலே புதைச்சிடுவாங் களாமே!

—பெரியவரே! உங்க ஆராய்ச்சி எனக்கு ரொம்பப் புதுமையாத் தோணுது! என்றார் இன்ஸ்பெக்டர் சிரித்துக் கொண்டு.

—எனக்கு என்ன ஸார்? ஐயாக்கள் நான் சொல்றதை நம்புவீங்களோ மாட்டீங்களோ? நம்ப வீடுங்கள்லே என்ன செய்வாங்க?

மயானம் இருக்கிற பக்கம் போகாதேம்பாங்க! மயானத்துக்குப் போனா குளிச்சிட்டு வரணும். மயான சமாசாரம் எதுவுமே வீட்டுக்குள்ளே கொண்டாரக் கூடாது. மண்டை ஓட்டை வீட்டுக்கு கொண்டுவர விடுவாங்களா? எல்லாம் நம்ப பெரியவங்க யோசிச்சுத்தான் செஞ்சு வச்சிருக் காங்க! இந்தக் காலத்திலே நீங்க எல்லாம் நம்ப மாட்டீங்க.

—அப்போ என்ன சொல்றீங்க? இந்த ஆராய்ச்சி எல்லாம் பண்ணக் கூடாதுங்கிறீங்களா?

—ஆமாங்க! ஒரு சமாதியைத் தோண்டி எடுக்கவே கூடாது. பீட்டிதுரை என்ன கஷ்டப்பட்டான் தெரியுமா? கடைசியில் இந்த மண்டை ஓடுவேண்டாம்னு சீமையிலேர்ந்து இங்கே திருப்பி அனுப்பிச்சுட்டான். நிறைய ஒட்டுப்போட்டு வச்சிருக்காங்களே! அந்த மண்டை ஓட்டைப் பார்த்தீங்களா? உள்ளே இருக்கு!

—விஷயத்துக்கு வாங்க! இந்தப் பெண்ணுக்கு என்ன நடந்திருக்கும்?

—சொல்றேங்க! இந்தப் பொண்ணு முழுசா ஒரு தாழிக்குள்ளே தோண்டி ஓட்டை எடுத்திச்சு! உள்ளே மந்திரம் வச்ச தகடு எத்தனையோ இருந்திச்சு. தங்கப் பட்டத்திலே சூனிய உருவம் போட்டுக் கிடந்தது. அதை எல்லாம் இந்தப் பொண்ணு வெளியே எடுத்திச்சு! என்கிட்டே கூட அந்த ஓட்டைக் காண்பிச்சு, இது ஒரு பெண்ணோட மண்டை ஓடுன்னுது! அம்மா, எனக்கு வேண்டாம்மான்னு நான் ஓடிட்டேன். இந்த அக்கிரும்பு காரியந்தான் அந்தப் பொண்ணை அடிச்சிருக்கும்.

—அப்படின்னு என்ன சொல்றே? இந்த ஆவி அவளை அடிச்சிருக்குங்கிறீயா?

—ஆமாங்க. ஆவி இவளை வீட்டிலேந்து இழுத்துக்கிட்டு வந்து, அடிச்சுச் சாப்பிட்டிருக்கும். இதுவரைக்கும் இங்குள்ள ஆவிங்க ரெண்டு பலி வாங்கிடுச்சு!

—ரெண்டு பலியா, எப்போ?

—ஆமாங்க! அஞ்சு வருசத்துக்கு முன்னாலே ஒரு பெண் இதைப்போல படிக்க வந்திச்சு. அது போன இடம் புல்லு முளைச்சுப் போச்சு.

இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

—விளக்கமாச் சொல்லுங்க பெரியவரே!

—ஆமாங்க! பானுமதின்னு ஒரு பொண்ணு. பெரிய படிப்பெல்லாம் படிச்சுட்டு வந்திச்சு! இந்த மாதிரிதான் ஆராய்ச்சி! திடீர்னு அந்தப் பொண்ணு, காணும்ப் போயிடுச்சு!

—அப்புறம்?

—பெத்தவங்க லபோ திபோன்னு அடிச்சுக்கிட்டாங்க! பொண்ணு அட்ரஸே இல்லே!

—அப்புறம்?

—ஒரு வேலைக்காரப் பொண்ணுங்க! அறியாத வயசு இங்கே இலெ, சுள்ளி இதெல்லாம் பெருக்கிக்கிட்டுப் போய் யாருக்கோ வித்துப் பொழைச்சிகிட்டு இருந்ததுங்க! மியூசியம் வேலைக்காரிக்கு உடம்புசரியில்லேனு ஒருமாசமா உள்ளே வந்து பெருக்கிறு பாரு! ஒருநாள் ராத்திரி ஆவி அடிச்சுடுத்து. அந்தா குவார்ட்டர்சுக்கு அந்தாண்டை. தூரத்திலே குட்டை இருக்கு பாருங்க! அங்கே உடம்பு கிடைச்சுது.

சிங்கின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.

பாலுசாமி முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

—பெரியவரே! நீங்க சொல்றதைப் பார்த்தா இங்கே ஆளுங்க வர்றதே தப்புபோல இருக்கே!

—வர்லாங்க! சுத்தமா இருக்கணும்! ஒரு பேய் வராது. இந்தப் பொண்ணுங்க மாசத்தீட்டோட உள்ளே வருதுங்க! ஆவி பிடிச்சுக்குதுங்க!

பிறகு பாலுசாமி அந்தநாளில் அவனது அப்பா சொன்ன கதைகளை எல்லாம் சொன்னான்.

நூறு வருஷத்துக்குமுன் அந்த மியூசியம் ஆரம்பத்திலிருந்து ஆவிகளைப் பார்த்தவர்கள் கதையை எல்லாம் சொன்னான்.

பாலுசாமி குடும்பம் மூன்று தலைமுறையாக அந்த மியூசியத்தில் வேலைபார்த்து வந்தது.

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, சிங் புறப்படும்போது கருகரு என்று இருட்டிக் கொண்டிருந்தது.

மியூசியம் இருந்த தோப்புகள் கன்னங் கரேல் என்று சுண்டிய கறுப்பாய்த் தெரிந்தன.குவார்ட்டர்ஸ்களின் வெளிச்சங்கள் முணுக், முணுக்கென்று மங்கலாய்த் தெரிந்தன.

மியூசியம் கட்டிடத்தை உற்றுப்பார்த்தார். அதுலேசான உருவக் கோட்டுடன் தெரிந்தது, ஓ! உனக்குள்ளே எவ்வளவு ரகசியங்களை வைத்திருக்கிறாய்? என்று நினைத்தார் சிங்.

23

—பாலுசாமி உங்களைக் காபரா படுத்திவிட்டானு என்று சொல்லி டைரக்டர் சுரேசன் மெள்ளப் புன்னகையிட்டார்.

—நான் காபரா அடையவில்லை. ஆனால் அவன் சொன்னதெல்லாம் நிஜமா என்று எனக்குத் தெரியவேண்டும் என்றார் சிங்!

—ஓ எஸ்! எல்லாவற்றையும் விளக்குகிறேன். இன்ஸ்பெக்டர்! ஒரு விஷயம் சொல்கிறேன். இந்த மியூசியத்திற்குள் ஏதோ இருக்கிறது.

சிங் திகைப்புடன் அவரைப் பார்த்தார்.

—மெய்யாகத்தான் சொல்றேன். ஆனா என்னால் பகுத்தறிவு பூர்வமா சொல்ல முடியாது.நாம் அறிஞ்ச விஞ்ஞானச் சட்ட திட்டங்களுக்கு ஒத்து வராமே, இந்த மியூசியத்தில் சில காரியங்கள் நடக்கின்றன. அதை அநேகமா நாங்க எல்லோரும் கவனித்திருக்கிறோம்.

—உண்மையாகவா?

—ஆமாம்! ராத்திரிலே உள்ளே குலுங்கற சப்தம் கேட்கும். ஒண்ணுக் கொண்ணு இடிச்சுக்கிற மாதிரி கேட்கும்,

சமயத்திலே பலமாகக்கூடக்கேட்கும். நாங்க உள்ளே உடனே திறந்துபோய் சோதித்திருக்கிறோம். சப்தங்களுக்கு என்ன காரணமும் சொல்ல முடியல்லே!

—எந்தப் பகுதியில் இந்தச் சத்தம் கேட்கும்!

—குறிப்பா ஆந்த்ரோபாலஜி அறையிலே கேட்கும். அங்கேதான் ஆதிச்சநல்லூரிலிருந்து எடுத்த முதுமக்கள் தாழி, மண்டை ஓடு, எலும்புக்கூடு, தகடு எல்லாம் வச்சிருக்கோம். அப்புறம் அங்கே தனியா ஒரு கண்ணாடி கேஸ்லே எகிப்திய மம்மி வச்சிருக்கோம்.

—மம்மின்னு என்ன, மிஸ்டர் சுரேசன்?

—எகிப்திலே செத்துபோன உடம்பிலேருந்து குடலை எல்லாம் எடுத்துட்டு உடம்பை பாடம் பண்ணி வச்சுடறாங்க. நாலாயிரம் வருஷத்துக்கு முன்னாலே இறந்த ராஜகுமாரியின் உடல் இந்த மியூசியத்திலே இருக்கு. இதையெல்லாம் பார்க்கலையா?

—பார்க்கலே ஸார்,

—உங்களுக்கு கேஸ் மேலே கவலை. பரவாயில்லே! இன்ஸ்பெக்டர், ஆவிகள் உலகத்திலே உங்களுக்கு நம்பிக்கை இருக்குமோ என்னவோ, எங்க சில பேருக்கு இருக்கு! அதுவும் இந்த மியூசியத்திலே வேலை பார்க்க வர்றவங்க ஆவியிலே நம்பிக்கை வைக்காம இருக்க முடியாது! முதல்லே இல்லாவிட்டாலும் பின்னாலே நிச்சயமா வந்துவிடும்!

—என்னாலே நம்பமுடியல்லே!

—நாங்களும் வந்தப்போ அப்படித்தான் இருந்தோம். இப்போகூட வெள்ளிக்கிழமை தோறும் படையல் வைக்கலேன்னா ஆவி வீட்டுக் கதவை வந்து தட்டும்.

—படையலா?

—ஆமாம்! எங்க குவார்ட்டர்ஸ் பக்கத்திலே ஆவிங்களுக்குப் பொங்கல் வச்சுக்கொடுக்கறோம்.

சிங் மௌனமானார். அவர் முகத்திலே அவநம்பிக்கை ஓடியது.

—ஸார்! விஸ்கான்சின் யுனிவர்சிடியிலிருந்து கீ எட்வர்ட்னு ஒரு புரொபசர் வந்தார். அவரே இந்த ஆவிங்களை நம்பவேண்டி வந்துவிட்டது. இந்த மியூசியத்திலே தனியாப் படுத்திருந்து ஆவி நடவடிக்கையை நேரிலேயே பார்த்துவிட்டுப்போனார். அவர் என்ன சொன்னார் தெரியுமா?

—என்ன சொன்னார்? என்று கேட்டார் சிங்.

—உங்கள் ஆதிச்சநல்லூர் ஆவிங்கதான் இது! வயசானவங்களை உயிரோட புதைச்சிருக்காங்க என்பது உண்மை. அதனாலேதான் அவையெல்லாம் ஆவியா வந்து உலாவறது. நான் வேறே எந்த மியூசியத்திலேயும் இந்த அனுபவங்களைப் பெறல்லேனு சொன்னார்.

கூரேசனை சிங் ஆழ்ந்து பார்த்தார்.

இவர் நன்கு படித்தவர். இவர் படித்த பட்டங்கள் எவ்வளவு நீளமானவை; அப்படிப்பட்டவர் இந்த ஆவிகளிலே நம்பிக்கை வைக்கிறாரே! ஆச்சரியமாயிருக்கிறதே!

—சரி, மிஸ்டர் கூரேசன்! இந்தப் பெண்கள் சமாசாரத்திற்கு வாங்க! ஐந்து வருஷ காலத்திலே ரெண்டு பெண்களுக்கு இங்கே ஏதோ நடந்திருக்கு. அதுக்கு என்ன விளக்கம் கொடுக்கறீங்க? என்றார்!

—அதைச் சொல்றேன், என்று சொல்லி எழுந்து போய், காப்பிக்கு ஆர்டர் செய்தார் கூரேசன்.

24

இரண்டு பேருக்கும் காப்பி வந்தது. பருகினார்கள்.

கூரேசன் மீண்டும் துவங்கினார்.

—இன்ஸ்பெக்டர்! உலகத்திலே சில விநோதமான நிகழ்ச்சிகள் நடக்கிறதைப் பார்த்திருக்கோம். கேள்விப்பட்டிருக்கோம்! அது இன்னதனுலே நடக்கிறது என்கிறதை விஞ்ஞானிகளாலேயே விளக்க முடியல்லே. இதுகளையெல்லாம் கவனிச்சிட்டு, நம் உணர்வுகளுக்கு அப்பாலே ஏதோ சில சக்திகள் இருக்குன்னு அநேகவிஞ்ஞானிகளே சொல்றுங்க! இப்போ மேனுட்டிலே சில நம்பிக்கை வளருகிறதைப் பார்த்தால் நம்ப முன்னோர்கள் யாரும் தப்புப் பண்ணவில்லேனு தோணுது. பேய், பிசாசு, சூனியம், ஆவி, மறுபிறப்பு, எல்லாத்திலேயும் அவங்களே நம்பறுங்க. புத்தகம் எழுதறுங்க! சினிமா பிடிக்கிறுங்க; இப்போ நாம்ப எந்த நிலேயிலே இருக்கிறோம் என்றுல் அவங்க சொன்னு நாம்ப ஒத்துக்கிற நிலேயிலே இருக்கோம். நம்பகிட்டே இருக்கிற சொந்தச் சரக்கு மேலே நம்பிக்கை இல்லாம இருக்கிறோம். இதெல்லாம் வேடிக்கையாயில்லே? என்று கேட்டார் சுரேசன்.

—ஓரளவு உண்மைதான் என்றுர் சிங்.

—இப்போ இந்த ஆவி உலகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு இதுமேலே நம்பிக்கை உண்டு. அது இந்த மியூசியத்திற்கு வந்தப்புறந்தான் ஏற்பட்டது. நான் இங்கே வந்த புதுசிலே இதே பாலுசாமி என்னிடம் எவ்வளவோ கதை அளந்தான், நம்பல்லே! இப்போ... நம்பறேன்.

—எல்லாத்தையுமா நம்பறீங்க?

—இல்லே! நம்ப முடிந்ததை நம்பறேன். அவ்வளவுதான்!

—அவன் சொல்ற இந்தச் சாவுகளைப்பற்றி...

—நான் நம்பவில்லே, என்றுர் சுரேசன்.

—அவன் சொல்றது எல்லாம் பொய்யா?

—பொய்ன்னும் இல்லே! ஆனல் முழுதாய் நம்புகிறபடியும் இல்லே.

—சொல்லுங்க என்றுர் சிங்.

—இந்த பானுமதி கேஸை எடுத்துக் கொள்ளுங்கள். பல்லவ கால யாளிச்சிற்பங்கள் என்று ஒரு ஆராய்ச்சி கட்டுரை எழுத அந்தப் பெண் வந்தாங்க. எல்லா வசதியும் செய்து கொடுத்தோம்.

அவளோடு அவளது க்ளாஸ்-மேட் பையன் ஒருத்தன் வந்தான். இவங்க குறிப்பு எழுதுகிறதுக்கு, படிக்கிறதுக்கு என்று ஒரு ரிஸர்ச் அறை இருக்கு. அங்கேதான் எப்போதும் இருப்பாங்க! ஒருநாள் அங்கே போயிப்பார்த்தா இரண்டுபேரும் உட்கார்ந்தபடியே...! நீங்க கஜுராகோ சிற்பங்கள் பார்த்திருக்கிறீங்களா?

— பார்த்திருக்கிறேன்.

—அதிலே ஒரு பாஸ்சர் அது! சிற்பத்திலே தான் பார்க்கிறோம்னு இங்கே நேரிலேயும் பார்த்துவிட்டேன். எனக்குக் கோபம் அள்ளிக்கிட்டு வந்தது. கெட்அவுட் இன்னேன். அவங்களுக்குக் கொடுக்கப்பட்ட வசதிங்களை ரத்துசெய்தேன். பெற்றோர்கள் கையெழுத்து போட்டு நன்னடத்தை சர்டிபிகேட் கொண்டு வந்தாதான் உள்ளேவரலாம்னு சொன்னேன். அன்னிக்குப் போனவங்கதான்! வரவே இல்லே.

—அந்தப் பெண் காணமல் போயிட்டதாக பாலுசாமி சொல்றனே!

—அது வேறே விஷயம்! நான் உத்தரவு போட்டதிலிருந்து அந்தப் பெண்ணுக்கு இங்கே வரமுடியல்லே. அதனாலே வீட்டிலே மியூசியத்திற்குப் போறேன்னு பொய்யைச் சொல்லிட்டு காதலியும்காதலனுமாக ஊர்சுத்தியிருக்காங்க. கடைசியிலே இரண்டு பேரும் பம்பாய்க்கு ஓடிட்டதாகக் கேள்வி. அவங்க வீட்டிலேயிருந்து இங்கே வந்து விசாரிச்சாங்க! நாங்க விளக்கினப்புறம் போயிட்டாங்க.

—சரி! வேலைக்கார பொண்ணு பற்றி என்ன சொல்றீங்க!

—ரொம்ப நல்ல பொண்ணு சார்! காவேரின்னு பேரு! பதினைந்து வயது இருக்குமா தெரியாது! ஒரு காஷுவல்

வேகன்ஸியிலே ஒரு மாசமா வேலை செய்தாள். ஒரே சுறு சுறுப்பு! காலையிலே இவ பெருக்கும்போது உள்ளே வாட்டர் கேரியர் அம்மா கூடவே போவாங்க! அந்தப் பெண் பெருக்கிற வேளையிலே எங்க அட்டென்டெண்ட்கள் எல்லாரும் வந்துடணும்னு பேரு. ஒழுங்கா வரமாட்டாங்க! லேட்டா வருவாங்க! ஏதோ திருடுகிருடு நடக்காம ஓடுது. இருந்தாலும் இது ஸெக்யூரிடி ரிஸ்க்தான்.

அன்னிக்கு என்ன நடந்ததுன்னு, அந்தப் பெண் தனியாப் பெருக்கியிருக்கு! ஆந்த்ரோபாலஜி அறைக்குள்ளே போயிருக்குது. அங்கே என்ன நடந்தது தெரியாது! ஏதாவது எலும்புக்கூடு ஆடியிருக்கும்னு நினைக்கிறேன். வீல்னு கத்தினு பாருங்க! எல்லோரும் ஓடினோம். மூர்ச்சை போட்டுக்கிடந்தா! அப்புறம் தண்ணி தெளிச்சு, எழுப்பி, சிகிச்சை செய்தோம். அதுக்குப் பிறகு இரண்டு நாள் இருந்தா. மூணு நாள் காலையிலே குட்டையிலே செத்துக் கிடந்தாள்.

—இதுக்கு என்ன காரணம் என்று சொல்கிறீர்கள்?

—இதிலே மட்டும் ஆவி அவளை அடிச்சிட்டது என்று நம்பறேன். வேறே எந்தக் காரணத்தையும் என்னாலே நினைக்க முடியவில்லை.

சிங் யோசித்தார்.

—மிஸ்டர் கூப்ரேசன்! குட்டையிலே அந்தப் பெண் செத்துக்கிடந்தாள் என்று சொன்னீர்கள். போலீஸ் வந்ததா?

—வந்தார்கள்! எதேச்சையா தண்ணியிலே விழுந்து மூழ்கிவிட்டாள் என்று பஞ்சாயத்தார் முடிவு செய்தார்கள்! அதை போலீசாரும் ஏற்றுக்கிட்டார்கள்!

இன்ஸ்பெக்டர் யோசனையில் ஆழ்ந்தார். இரண்டு பெண்களுக்கும் ஏதோ நடந்திருக்கிறது என்பது மட்டும் உண்மை! ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விளக்கம் கூறுகிறார்கள்!

—வேறு ஏதாவது கேஸ் உண்டா? என்று கேட்டார் சிங்.

—எதுவும் கிடையாதுங்க.

—மங்கலா கேஸைச் சேர்த்தால் என்றார் சிங்.

—அது வெறும் 'ஓடிப்போன' கேஸ், ஸார். இங்கே சமீபத்திலே வந்தா என்கிறதே பொய்!

25

மறுநாள் அஸிஸ்டெண்ட் கமிஷனரை சிங் சந்தித்தார்.

—ஸார்! மியூசியம் பகுதியில் சில விசித்திரமான காரியங்கள் நடந்திருப்பது தெரிய வந்திருக்கு. அது பெரிய ஸென்ஸேஷனல் கேஸாகக்கூடப் போய்விடலாம். நான் அங்கே தங்கி விசாரணை நடத்தப் போகிறேன். உங்களிடம் சொல்லிவிட்டுப் போக வந்தேன் என்றார் சிங்.

—நேற்றுகூட கமிஷனர் கேட்டாரு! மங்கலா கேஸ் என்ன ஆச்சு? என்றார் ஏ. ஸி.

—துப்புத் துலக்கிடலாம்னு தோணுது! ரொம்ப பொறுமை வேண்டியிருக்கு! என்றார் சிங்.

மறுநாள் காலை அவர் நகரத்தின் வெளிப்புறத்தில் இருந்த அந்த போலீஸ் நிலையத்தின் ரிக்கார்டுகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

முதலில் காவேரி இறந்துபோனதற்கு ரிக்கார்ட் கிடைத்தது.

பஞ்சாயத்தாரின் அபிப்பிராயத்தைக் காட்டி சப்-இன்ஸ்பெக்டர், அந்த கேஸ் ஒரு எதேச்சையான விபத்து என்று குறித்திருந்தார்.

அதைக் குறித்திருந்த அதே சப்-இன்ஸ்பெக்டர் அந்த நிலையத்தில் வேலை பார்த்ததால் சிங் அவரை விசாரித்தார்.

—ஸார்! ஊர் பெரியவங்க சொல்றுங்க. நாம்ப அதைக் கேட்காம இருக்க முடியாது!

—பெரியவங்க எப்படி இந்த மாதிரி சொன்னுங்க. ஒரு பெண் எப்படித் தனியாப் போய் குட்டையிலே விழுந்துடுவான்னு நம்பினீங்க! என்று கேட்டார் சிங்.

—அந்தப் பொண்ணுக்கு சித்த பிரமைன்னு சொன்னுங்க.

—சொன்னது யாரு?

—மியூசியத்திலே எல்லாரும் சொன்னுங்க! அதை நம்பாமல் இருக்க முடியுமா?

—சரி! பானுமதி என்கிற பெண்ணைப் பற்றி கம்ப்ளெயிண்ட் ஏதாவது வந்ததா?

—எதுவும் வரவில்லை. ஆனுல் கேள்விப்பட்டேன். இதிலே சொந்தப் பெற்றோர்களே அதை ஒரு 'ஓடிப்போன' கேஸ்னு சொல்லிட்டாங்க. அதுக்கு மேலே சந்தேகப் படறதுக்கு எதுவுமில்லே!

சப்-இன்ஸ்பெக்டர் வெகு நிதானமாக அளவோடு பதில் சொன்னுர்.

சிங்குக்கு அது நம்பும்படியாகக் கூட இருந்தது.

ஆனுல் உள்ளூற ஒரு குழப்பம் இருந்தது. எங்கேயோ மனம் நெருடிக் கொண்டிருந்தது! எங்கே என்று தெரியவில்லை.

மீண்டும் நகரத்திற்குத் திரும்பினுர். அந்த பானுமதி என்ற பெண்ணின் வீட்டுக்குச் சென்றுர். நல்ல வசதியுள்ள குடும்பத்தில் பிறந்தது அந்தப் பெண்.

நல்ல வேலையாகப் பெற்றோர்கள் அதேவீட்டில் இருந்தார்கள்.

பெண்ணைப்பற்றி விசாரித்ததும்,—ஆமாம், ஸார்! அப்படி ஒரு துக்ககரமான நிகழ்ச்சி எங்களுக்கு நிகழ்ந்தது.

இன்னும் பெண் ஊர் திரும்பவில்லை. பையன் ஒரு கிராதகன். அவனோடு எங்கள் பெண் எந்த ஊரிலே எப்படி வாழ்கிறளோ தெரியாது, என்றார்கள்.

பிள்ளை வீட்டார் முகவரியைக் கண்டுபிடித்து சிங் அங்கே போனர்.

—ஸார்! என் பிள்ளை நல்லவன்! இப்படி ஒரு பெண்ணை அழைச்சுக்கிட்டு வெளியூருக்கு ஓடறது என்கிறது அவனுலே முடியாது, ஸார்! அவன் ஒரு கோழை, இந்தப் பெண்தான் அவனுக்கு உருவேற்றி வெளியூருக்குக் கொண்டுபோயிடுத்து, என்றார்கள்.

இந்த விசாரணைகளை நடத்திய பிறகு, சிங்குக்கு மீண்டும் விரக்திதான் ஏற்பட்டது.

ஏதாவது விஷயம் கிடைக்கும் என்று ஆவலோடு விசாரணை செய்தார் அவர்.

ஆனல் எதுவுமே கிடைக்காமல் போய்விட்டது.

இனி என்ன செய்ய?

அவர் மனம் தோல்வியை ஒத்துக்கொள்ள மறுத்தது.

எங்கேயோ ஏதோ மறைந்து கிடப்பதாக ஒரு நெருடல் இருந்தது.

அப்படி அவருக்கு நெருடல் ஏற்படும் போதெல்லாம், அதன் பின்னல் பெரிய விளைவுகளைக் காட்டுவதுண்டு.

இங்கே அவருக்கு ஒரே ஒரு சந்தேகம், பானுமதியும், மங்கலாவும் ஒரே விதத்தில் காணமல்போனதே!

பானுமதி காதலனோடு மறைந்தாள். இங்கே மங்கலா தன் காதலனோடு மறைந்ததாகச் சொல்லப்படுகிறது.

முதல் கேஸில் காதலன் யார் என்று தெரியும்.

இரண்டாவதில் யார் என்றே தெரியவில்லை.

ஒருவேளை? சிங்கின் மூளை துறுதுறுத்தது, முதல் காதல் ஜோடிகளான பானுமதியும் அவள் காதலனும் மியூசியப் பகுதியில் கொல்லப்பட்டிருப்பார்களோ?

அதனால்தான் அவர்கள் திரும்பி வராமலேயே இருந்து விட்டார்களோ?

அதேபோல் இரண்டாவது கேஸில் மங்கலாவும் அவளது காதலனும் கொல்லப்பட்டு விட்டார்களோ?

அல்லது, அவளுக்குக் காதலன் என்று யாரையோ குறிப்பிடுவதெல்லாம் பொய்யோ?

காதலன் என்பதே அவளுக்கு கிடையாதோ?

காதலனோடு ஓடுகிற இரண்டு பெண்களும் திரும்பி வராமல் எப்படி மறைந்து விடுகிறார்கள்?

சிங்கின் மனத்தில் மற்றொரு நினைவும் ஓடியது!

அதை நினைக்கும்போது அது ஒரு பைத்தியக்கார நினைவாகவும் தோன்றியது.

உண்மையிலேயே மியூசியத்தில் ஆதிச்ச நல்லூர் ஆவிகள் தங்கி இருந்து இந்தப் பெண்களை விழுங்கி விட்டதா?

சிங்குக்கு ஐம்புலன்களுக்கு அப்பால் உள்ள உலகத்தின் மீது நம்பிக்கை இல்லை.

ஆனால் அண்மையில் அனுபவம் ஏற்பட ஏற்பட, அங்கங்கே நமது புலனுக்கு உட்படாத பல சக்திகள் வியாபித்துக் கிடப்பதாக அவர் நினைக்கத் தொடங்கினார்.

அப்படியும் இருக்குமா என்று பலவிதமாய்க் குழம்பிய அவர், நேராக மியூசியத்திற்குப் போய் டைரக்டர் வீட்டுக்குச் சென்றார்.

—மிஸ்டர் சுரேசன்! இன்றிரவு நான் இங்கே தங்கப் போகிறேன். யாரும் பயப்படவேண்டாம், என்று கூறினார் அவர்.

26

மியூசியம் எல்லைக்குள் தங்கப் போகிறேன் என்று சிங் சொன்னபோது, அவர் ஒரு ஆராய்ச்சியையும் நடத்த விரும்பினார். ஒரு அனுபவத்தையும் பெற விரும்பினார்.

சிங்குக்கு சமய நம்பிக்கைகள் நிறைய உண்டு. ஆனால் நம்பத் தகாததை நம்ப மறுப்பார்.—என் அறிவுக்கு எட்ட வில்லை என்று ஒதுக்கி விடுவார்.

விஞ்ஞானத்திற்கு ஒப்பக் கூடியதாகவும் அதே நேரத்தில் விஞ்ஞானத்தின் ஒப்புதலோடு அதற்கு அப்பால் போகக் கூடியதாகவும் உள்ள ஒரு சமய நம்பிக்கைதான் அவருக்கு எப்போதுமே உகந்ததாக இருந்தது.

இந்த நிலையினால் அவருக்குப் பெரிதும் கவர்ந்தது விவேகானந்தர் உபதேசித்த தத்துவ நெறி முறைகளாகும்.

விவேகானந்தரின் வாழ்க்கையை ஆதியோடு அந்த மாகப் படித்தபோது, ஒரு இடத்தில் சிங்கின் கவனம் இதற்கு முன் விழுந்திருந்தது.

விவேகானந்தர் ஆவிகளின் மீது அதிக நம்பிக்கை வைக்காதவர்.

ஆனால் அவர் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவமே சிங்கைத் திணற அடித்துவிட்டது!

விவேகானந்தர் ஒரு நாள் தமது சீடர்களுடன் போகும் போது, திடீரென்று ஒரு இடத்தில் வெறித்த பார்வையுடன் நின்று விட்டார்.

சிறிது நேரம் அப்படியே இருந்த அவர், பிறகு சீடர்கள் பக்கம் திரும்பி—எதிரே ஏதாவது பார்த்தீர்களா? என்று கேட்டார்.

—இல்லையே, சுவாமி! என்றார்கள் சீடர்கள்.

எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. என் எதிரே ஒரு தலை முண்டமான ஆவி நின்று கொண்டு விவேகானந்தா! விவேகானந்தா! எனக்காகப் பிரார்த்தனை செய். நான் திண்டாடுகிறேன் என்று கூறியது. நான் பிரார்த்தனை செய்தேன். உடனே அந்த ஆவியின் கதறல் மறைந்து விட்டது பெரிய நிம்மதியுடன் அது திரும்பிப் போய்விட்டது.

இந்த நிகழ்ச்சி சிங்கின் மனத்தை எப்போதும் உறுத்திக் கொண்டே இருந்தது.

சமய நம்பிக்கையை மேனாட்டு முறைப்படி ஒரு விஞ்ஞான ரீதியாக பார்க்கும் விவேகானந்தரின் கண் முன்பு கூட ஆவி தோன்றிவிட்டது. அவரும் அதை நம்பவேண்டி வந்தது. அப்போது ஆவி உண்மைதானே!

பின்னர், விவேகானந்தரின் சீடரான அபேதானந்தா எழுதிய 'மரணத்திற்கு அப்பால் வாழ்க்கை' என்ற நூல் சிங்கின் மனத்தைப் பெரிதும் கலக்கி இருந்தது. அப்பா! மரணம், அதன் பின்விளைவுகள், அங்குள்ள உலகங்கள், அப்பப்பா எல்லாவற்றையும் நினைக்கக்கூட ஆச்சரியமாய் இருக்கிறதே!

ஆக இவ்வளவு பின்னணிகளைக் கொண்ட சிங், அந்த கிரேவ்லி மியூசியத்து எல்லைக்குள் படுக்கிறேன் என்று சொன்னது ஒரு நம்பிக்கையை சோதனை செய்து பார்க்கத் தான்.

இரவு எட்டு மணிக்கு மியூசியத்தின் மிக நீளமான தாழ் வாரத்தில் படுக்குமுன் டைரக்டர் சுரேசன் அவரை மீண்டும் ஒரு முறை சந்தித்தார்.

—இன்ஸ்பெக்டர்! அதோ அந்தத் தூண்பக்கம் படுத் தால் ஆவி வந்து விடும் என்றார் சுரேசன்.

—அப்படியானால் அங்கேயே படுக்கிறேன் என்று படுக்கையை அங்கே கொண்டு போனார் சிங்!

—கடவுளை தியானிச்சுக்குங்க! அப்படி பயம் அதிகமாப் போச்சுன்னு ஒரு குரல் கொடுங்க! போலீஸ்காரங்களும் நைட் வாட்ச்மேனும் அந்த ஓரக் கொட்டகையில்தான் இரவு நேரம் முழுவதும் இருப்பாங்க! என்ருர்.

சுரேசன் போய்விட்டார்.

சிங் ஒரு பாயை மட்டும் விரித்துக்கொண்டு படுத்துக் கொண்டார்.

தாம் இப்படி மியூசியத்தில் தங்கப்போவதை ஏ.ஸி.க்கு ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

துணையாட்களைக் கொண்டு போகும்படி அவர் சொல்லி யிருந்தார்.

ஆனுல், சிங் தாம் ஒருவரே சமாளித்துக்கொள்ள விரும்புவதாகக் கூறியிருந்தார்.

இங்கே தனியாக மியூசியம் தாழ்வாரத்தில் படுத்த போதுதான் அதன் கஷ்டங்கள் தெரிய ஆரம்பித்தன.

கொழு கொழு என்று எங்கும் இருட்டு விழுந்துவிட்டது.

பட்டணத்தை விட்டு விலகியுள்ள பிரதேசம் ஆதலால், அநேகமாகச் சுற்றிவர விளக்குகள் இல்லை.

மரங்களே கரும் பூதங்கள் போல் தெரிந்தன.

இப்படி தனியாக வந்து படுத்தது, தவரு, சரியா என்பதை அவர் மனம் விவாதித்தது.

தாமே தமக்குள் ஒரு தைரியத்தை வரவழைத்துக் கொண்ட பின், மியூசியத்தில் உள்ள எந்த அறைக்கு வெளியே படுத்திருக்கிருேம் என்பதை யோசித்துப் பார்த்தார்.

அடேடே! நான்காவது அறைக்கு வெளியே படுத்திருக் கிருேம்.

நான்காவது அறை தானே ஆந்த்ரோபாலஜி அறை!

சுரீர் என்றது.

சரியான இடத்தில் தான் ஆவி வருகிறது என்கிறார்கள்.

நீளமான வராந்தாவை இந்தக் கடைசியிலிருந்து அந்தக் கடைசி வரை பார்த்தார்.

மீண்டும் சுரீர் என்றது.

எல்லா வெண்டிலேட்டர்களும் அடைத்திருக்க, அந்த நான்காம் அறையின் வெண்டிலேட்டர் மட்டும் மேலே திறந்திருந்தது.

இது வேண்டுமென்றே செய்தார்களா? எதேச்சையாக நேர்ந்து விட்டதா?

அந்தச் சம்பவமே அவர் மனத்தை சிறிது கலவரப் படுத்தியது.

ஒருவேளை, ஆவியே வெண்டிலேட்டரைத் திறந் திருக்குமோ?

ஸ்பிரிட் உலகத்தில் இருக்கும் ஒரு ஆவி, இந்த உலகத்து திடப் பொருள்களைத் தொட்டு அசைக்க முடியுமா?

ஏன் முடியாது! கட்டில்கள் அசைவது, நகர்வது என்று எத்தனை சம்பவங்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம்!

சலனமான மனத்துடன் அவர் கண் மூடினார்.

வெகு நேரம் வரை தூக்கம் வரவில்லை.

நாய்கள் குரைப்பதைக் கேட்டுக்கொண்டே இருந்தார்.

சமயங்களில் ஒரு கொத்துக் காற்று திடீரென்று மரங் களைச் சலசலக்க வைத்து விட்டு ஓடியது.

அப்போதெல்லாம் மனம் நடுங்கியது.

மெள்ள மெள்ள நினைவுகள் அடங்க, இரவு ஒரு மணிக்கு மேல் உறக்கம் வர ஆரம்பித்தது.

ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்திருப்பார். நித்திரைக்குள் பத்து காத தூரம் போயிருக்கும் அவரை யாரோ வெளியில் இழுப்பதுபோல் தோன்றியது.

யார் இழுக்கிறார்கள்?

மேலே வர வர பல்வேறு தூக்க மண்டலங்களைக் கடந்து வருவது போலிருந்தது.

அவர் நினைவின்மீது படிந்திருந்த பல்வேறு போர்வைகள் விலக்கப்படுவது போலிருந்தது.

அதனால் நினைவின் ஒவ்வொரு பாகமாகப் பளிச்சிட்டுக் கொண்டு வருவது போலிருந்தது.

ஆ!

யார் இப்படி அழுத்துகிறார்கள்?

அப்பா! உடம்பின்மீது யார் இப்படி அழுத்துகிறார்கள்?

ஐயோ! ஐயோ!!

நனவுக்குள் வர அவர் துடித்தார்.

ஆனால் யாரோ அழுத்துகிறார்களே! மூச்சு போகும்படி அழுத்துகிறார்களே! ஐயோ! அப்பா!

ஒரே திணறல். சிங் உதறினார். முடியவில்லை.

அப்பா, எவ்வளவு கனம்? யார் இப்படி மார்பு மேல் உட்கார்ந்திருப்பது?

தள்ள முயன்றார்.

ஆனால் கை கால்களுக்கு சக்தி இல்லை.

அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

அய்யோ, அழுத்துகிறார்களே! மூச்சு போகிறதே!

அவருக்கும் அழுத்துகின்றவருக்கும் ஒரு துவந்த யுத்தம் நடந்து, கடைசியில் வீறிட்டுக் கொண்டு எழுந்தார் அவர்.

கண்களைத் திறந்து பார்த்தார்.

பக்கத்தில் யாரையும் காணவில்லை. யார் இங்கே வந்தார்கள்? எங்கே மறைந்தார்கள்?

அவரது பகுத்தறிவு வேலைசெய்ய ஆரம்பித்தது.

தாழ்வாரத்தின் விளிம்புக்கு வந்து வெளியே பார்த்தார். எங்கும் இருள் ஒரு ஸ்தம்பம் போல் நின்று கொண்டிருந்தது. இயற்கையில் எந்தவிதச் சலனமுமே இல்லை.

தூரத்தில் திறந்த கொட்டகையில் பலர் குறட்டை விடும் சப்தம் கூடக் கேட்டது.

தனக்கு நேர்ந்தது, மெய்யா, கனவா?

அவரை அழுத்திக் கொண்டிருந்த ஆள் அவர் கண்களைத் திறந்ததும் மாயமாய் மறைந்துவிட முடியாது.

மேலே பார்த்தார். கீழே பார்த்தார். வராந்தா முழுதும் ஓடிப் பார்த்தார்.

எங்கும் யாரையும் காணவில்லை.

இதென்ன ஆச்சரியம்?

எப்படி இது நிகழ்ந்தது?

அவருக்கு வியர்த்து விட்டது.

நிச்சயம் அது ஆள் இல்லை என்று ஒரு உணர்வு கூறியது.

திறந்திருந்த வெண்டிலேட்டர் வழியாக யாராவது மறைந்து விடுவார்களா?

நிச்சயம் முடியாது; ஒன்று அது தள்ளி இருந்தது. இரண்டாவது இருபதடி உயரத்தில் இருந்தது. அதன் வழியாக எதுவும் நடந்திருக்க முடியாது. வேறு வழியில் யாராவது வந்திருந்தால், அந்த ஆள் எழுந்து ஓடுவதற்கு அவகாசம் சிறிதாவது வேண்டும். அப்படியே அந்த ஆள் ஓடினால் அவரால் உடனே உணரமுடியும். சத்தம் நிச்சயம் கேட்டிருக்கும்.

கண்ணை மூடியிருக்கும்போது அவர்மீது உட்கார்ந்திருந்த ஆள், கண்ணைத் திறந்ததும் மாயமாய் மறைந்தது எப்படி?

பகுத்தறிவின் லாஜிக்குகள் பின்னம் பின்னமாய்ச் சிதறி ஓட, உள்ளே அடி மனத்திலிருந்து ஒரு எண்ணம் மெள்ள மெள்ள எழுந்து மேல் நோக்கி வந்து மனம் முழுவதிலும் வியாபித்துக் கொண்டது.

அவரது உணர்வுகளுக்கும், புலன்களுக்கும் அப்பால் ஒரு அமானுஷ்ய உலகம் இருக்கிறது என்ற நம்பிக்கையை உண்டாக்கும் எண்ணம்தான் அது.

அப்படி ஒரு எண்ணம் உண்டாகும் போதே அவர் உடம்பு வெடவெடத்தது.

மனிதன் வாழ்க்கையில் தெரிந்துகொண்டது எவ்வளவு குறைவானது! தெரியாத விஷயங்கள் எவ்வளவு கோடிகள் இருக்கின்றன!

படித்து, போலீஸ் துறையில் சேர்ந்து, தைரியத்திற்காகவும், புத்திகூர்மைக்காகவும் பெயர் வாங்கிய ஒரு இளமையான இன்ஸ்பெக்டரை, கடைசியில் அவர் நம்பிக்கை வைக்காத உலகத்தின் ஆவியோ, சக்தியோ, சின்னமோ வென்றுவிட்டது.

அதற்கு மேல் தூக்கம் வரவில்லை. சற்று அப்பால் மேலே இருந்த அந்த வெண்டிலேட்டர் சாதாரணமாகக் காற்றில் ஆடுவதுகூட அவரை உறைத்துவிட்டது.

யோசித்துக்கொண்டே இருந்தார்.

மெள்ள மெள்ள ஏதோ சத்தம் எங்கிருந்தோ வந்தது. காதுகள் கூர்மையாகின.

உற்றுக்கேட்கும்போது கிலுங் கிலுங் என்ற சத்தம் சதங்கை போல் கேட்டது. சன்னமாகக் கேட்டது. நிச்சயம் மனிதர்களால் அப்படி ஒரு நுண்ணிய ஒலியை ஏற்படுத்தி விட முடியாது. அவர் நிச்சயமாக அதை நம்பினார்.

ஒவ்வொரு நேரமும் அது ஒவ்வொரு திசையில் இருந்து வந்தது. திடீரென்று வெளி ஆகாயத்திலிருந்துகூட வந்தது. அவர் படுத்திருந்த வராந்தாவின் மோட்டிலிருந்துகூட வந்தது. மனிதர்கள் யாரும் அந்தச் சத்தங்களை எழுப்பி இருக்க முடியாது.

இதென்ன விசித்திரமான சத்தங்கள்! யோசித்தார். திடீரென்று ஒரு நினைவு! பூர்வீக ஆப்பிரிக்க நாட்டுக் குடிகள் கூட்டமாக பாடி ஆடுவதை அவர் சினிமாவில் பார்த்திருக்கிறார். அந்தப் பாடலைப் போன்று அல்லவா சத்தமும் கலகலப்பும் கேட்கிறது.

சுரீர் என்று உறைத்தது. உள்ளே பூர்வீகக் குடிகளின் ஆவிகள் இருக்கின்றன அல்லவா? அந்தப் பழங்குடி ஆவிகள் இப்போது ஆடிப்பாடுகின்றன.

அப்படி நினைத்ததும் அவருக்கு உடம்பு வியர்த்து விட்டது. தூங்க முடியவில்லை. பயத்தை அடக்க முயன்றார். பதைபதைப்பு இருந்து கொண்டே இருந்தது.

கடைசியில் ஒரு கோழி கூவிற்று.

வானத்தில் மெள்ள இருள் கரையத் தொடங்கியது.

27

காலையில் சுரேசனிடம் விடை பெற்றுக்கொண்டு அவர் புறப்பட்டார்.

வீட்டுக்குத் திரும்பி, குளித்து, சாப்பிட்டு ஏதோ ரிப்போர்ட்டுகளைப் படிக்க முனைந்தபோதுகூட, அவர் மீது ஒரு நிழல் படிந்திருந்தது.

—என்ன அப்படி யோசனை? என்று மனைவிகூடக் கேட்டு விட்டாள்.

ஒரு மணி நேரம்வரை அப்படியே உட்கார்ந்திருந்தவர் திடீரென்று எழுந்தார்.

—இந்த விஷயத்திற்கு ஒரு முடிவு கட்டியாகவேண்டும். இல்லாவிட்டால் எனக்கு நிம்மதி வராது என்று நினைத்துக் கொண்டே வெளியில் புறப்பட்டார்.

அவரது நண்பரின் நண்பர், ஒரு ஆவி உலக ஆராய்ச்சி யாளர். பலராமுடு என்று பெயர். அவரிடம் போய் விஷ யத்தை அக்கு வேறு ஆணி வேருகப் பிய்த்துவிடவேண்டும் என்று நினைத்தார்.

நண்பரை அழைத்துக் கொண்டு பலராமுடுவின் வீட்டுக் குப் போனபோது, அவர் பூஜையிலிருந்தார்.

பூஜைக்குப் பிறகு அவர் எழுந்து வந்து அவர்களுக்கு குங்குமத்தை வழங்கினுர்.

மூவரும் தனி அறைக்குப் போனதும், சிங் தனது இரவு அனுபவத்தை விளக்கினுர். எல்லா விஷயங்களையும் விரி வாகக் கூறினுர். இன்னும் தமக்கு ஆவி உலகத்தில் நம்பிக்கை விழவில்லை என்றும் தான் ஒரு குழப்பமான மனத்துடன் படுக் கச் சென்றதாலேயே அனுபவம் போன்ற பிரமை ஏற்பட் டிருக்கிறது என்றும் கூறினுர்! —நிச்சயம், ஏதாவது மனி தர்கள் என்னை ஏமாற்றி இப்படி ஒரு அனுபவத்தை எனக்கு தந்திருக்க முடியாது. அது ஒரு உறுதியான உண்மை! முற்றிலும் உண்மை! என்று தீவிரத்தோடு கூறினுர் அவர்.

பலராமுடு புன்னகை பூத்தார்.

முதலில் ஒரு முத்தாய்ப்பு வைத்தாற்போல் ஒரு வாக்கியத்தைச் சொன்னுர்.

வாழ்க்கையில் எல்லா அனுபவங்களுமே நம் எண்ணங் கள்தான் அன்றி வேறு எதுவும் அல்ல.

எண்ணங்கள்தான் வாழ்வு.

ஆகவே, ஒரு அனுபவம் நம் எண்ணத்தில் நேர்ந்த பிறகு அதுநேரவில்லை என்று வேண்டுமென்றே வாதாடுவது சரியல்ல.

வேறு உலக ஆவிகள் இந்த உலகத்துடன் அடிக்கடி தொடர்பு கொள்கின்றன என்பதை எத்தனையோ பேர் அனுபவங்களால் கண்டறிந்திருக்கிறோம்.

அவையெல்லாம் பொய்யல்ல, கனவும் அல்ல!

அந்த வேறு உலக ஆவிகளுடன் நாம் விருப்பப்பட்டால் தொடர்பு கொள்ளலாம், பேசவும் செய்யலாம். இதில் எந்த வித சந்தேகமும் கிடையாது, என்று கூறிமுடித்தார் பலராமு.

சிங் யோசனையில் ஆழ்ந்தார்.

—இறந்து போன எல்லா ஆவிகளுடனும் நாம் பேச முடியுமா? என்று கேட்டார் சிங்.

—ஏன் இதைக் கேட்கிறீர்கள் என்று கேட்டார் பலராம்.

—எனக்கு ஒரு விஷயத்திற்கு தேவைப்படுகிறது என்றார் சிங்

—இறந்த ஆவிகளுடன் பேசமுடியும்! ஆனால் எல்லா ஆவிகளும், பூமியின் பக்கத்தில் உலாவுவதில்லை. அவற்றின் பக்குவங்களுக்கு ஏற்ப மேலே உலகங்களுக்குப் போய் விடுகின்றன.

—நம்முடன் பேசும் ஆவிகள் எல்லாம் பூமியின் அருகிலுள்ள ஆவிகளா?

—ஆமாம், அநேகமாக துர்மரணம் அடைந்த ஆவிகளும், ஆசை நிறைவேறாத ஆவிகளும் பூமியின் அருகில்தான் இருக்கின்றன.

—அப்படியானால் துர்மரணம் அடைந்த ஆவிகளுடன் பேசமுடியும் அல்லவா?

—நிச்சயம் பேசமுடியும்!

—எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்ய முடியுமா?

—சொல்லுங்கள்!

—எனக்குச் சில விஷயங்களில் துப்புத்துலங்காமல் இருக்கிறது. எல்லாம் மர்மமாக இருக்கிறது. நீங்கள் உடன்பட்டால் நான் ஒரு காரியம் செய்ய விரும்புகிறேன்.

—என்ன செய்யவேண்டும்?

—மியூசியத்திற்குள் ஆவிகள் இருப்பது உண்மையானால் அவற்றுடன் பேசவேண்டும்.

பலராம் புன்னகை புரிந்தார்.

உம்!

—அவற்றிடமிருந்து சில உண்மைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

—அதாவது நீங்கள் துப்பறிவதற்காக ஆவிகளைப் பயன்படுத்தவேண்டும் என்று நினைக்கிறீர்கள்!

—ஏன் கூடாது! உலகத்தில் எத்தனைவித விஞ்ஞான அடிப்படைகளில் துப்பறிய முனைந்திருக்கிறார்கள். கை ரேகை, சப்தி ரேகை என்று எத்தனைவித ஆய்வுகள்! நான் ஏன் ஆவி உலகத்தை இதில் பயன்படுத்தக் கூடாது! அது புதுமையாக இருக்கட்டுமே!

—ஓ, செய்யலாம்! ஆனால் இதை வைத்து கோர்ட்டில் நிரூபிக்க முடியுமா?

—வேண்டாமே! எனக்கு வழி கிடைத்தால் போதும். பிறகு ஆதாரபூர்வமான புலன்களை என்னால் சேர்த்துக் கொள்ளமுடியும்!

—வெரிகுட்! இந்தத் துறையில் இறங்கிப் பார்க்கலாம் என்றார் பலராம்.

28

மியூசியத்தில் ஆவி அழைக்கும் படலத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னபோது டைரக்டர் சூரேசனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

—ஆகா! இப்படி ஒரு ஆராய்ச்சியில் உண்மைகளைக் கண்டுபிடித்தால் மிகவும் நல்லதாயிற்றே! என்றார் சூரேசன்.

ஆனால் கியூரேட்டர் சந்திரகுமார் ஆட்சேபணை தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டாமா ஸார்! மியூசியத்திற்குள் மாயமந்திர வேலைகள் எல்லாம் வைத்துக் கொள்ளலாமா? என்று கேட்டார்.

முதன்முறையாக சிங், கியூரேட்டரைத் தம் மனத்தில் குறித்துக் கொண்டார்.

அந்த முப்பத்தாறு வயது இளைஞர் இதுவரை அதிகமாகவே பேசியதில்லை.

கேட்டதற்கு மட்டும் பதில் சொல்வார். தாம் உண்டு தம் வழி உண்டு என்று இருப்பார்.

சிங் உடனே அவரிடம் ஒரு கேள்வி கேட்டார்.

—மிஸ்டர் சந்திரகுமார்! உங்களுக்கு ஆவிகள் உலகத்திலே நம்பிக்கை உண்டா?

—உண்டு! ஆனால் அவைகளோடு பேசுவது என்பதில் எல்லாம் நம்பிக்கை கிடையாது.

நறுக்கென்று சந்திரகுமார் பதில் சொன்னார்.

—இது போன்ற அக்கல்ட் பவர்களை நம் சுயநலத்திற்கு உபயோகிக்கக் கூடாது என்றார் தொடர்ந்து.

—அது அவரவர் தேவைகளைப் பொறுத்தது, என்றார் சிங்.

கூரேசன் கியூரேட்டரை சமாதானப்படுத்தினார்.

பன்னிரண்டு மணிக்குமேல்தான் ஆவி அழைக்கும் படலத்தை நடத்த பலராம் ஒத்துக் கொண்டிருந்தார்.

எட்டுமணி முதல் நியமங்கள் அனுசரித்து மிக்க ஆசாரமுடன் காத்திருந்தார்.

படலத்தின்போது பலராமும், சிங்கும் மட்டுமே உள்ளே இருப்பதாக ஏற்பாடாயிற்று.

வாட்ச்மேன், போலீஸ் பாரா எல்லாமே வெளியில்தான் இருக்கவேண்டியது.

மணி பன்னிரண்டு அடித்தது.

மியூசியத்தின் கதவு திறக்கப்பட்டது.

உள்ளே ஒரு இறுக்கமான இருள். வெண்டிலேட்டர், கண்ணாடிகள் வழியே மினுக்கான வெளிச்சம்.

இருவரும் மெள்ள நடந்து சென்றார்கள்.

இரவு வேளையில், ஒரு பொருட்காட்சிசாலை ஹாலில் நடப்பது ஒரு அனுபவந்தான்.

விசித்திரமான உருவங்கள் நிழல்களாக அவர்களைப் பார்த்தன. அவைகளைப் பார்த்தாலே பூதங்கள் போல் தோன்றின.

மூன்றாவது அறையைத் தாண்டி நான்காவது அறைக்குள் வந்து விட்டார்கள்.

ஸ்பிரிட்டும் இதர ரசாயன திரவங்களும் கலந்த நெடி. எத்தனையோ இறந்த தோல்கள் அங்கே அழுகிக் கொண்டிருந்தன.

முக்கியமாக எகிப்திய மம்மியிடமிருந்து ஒரு நெடி.

எலும்புக்கூடுகள், மண்டை ஓடுகளிலிருந்து வேறு விதமான நெடி.

நாலாயிரம் ஆண்டுகளாய் தங்கள் தோற்றத்தைக் காத்துவரும் முதுமக்கள் தாழி, ஒரு விசித்திரமான நெடியை அடித்துக் கொண்டிருந்தது.

இருட்டில் பழக்கப்பட்டவுடன் ஒன்றிரண்டு மண்டை ஓடுகள் மழுங்கலாகச் சிரித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. என்ன கோரம்!

கேரள கடற்கரையில் கிடைத்த சூனியம் ஓட்டும் மரப் பிரதிமைகள் இரண்டு, பயங்கரமாய் நிழல் உருவில் நின்று கொண்டிருந்தன.

சிங்குக்கு ஒரு கணம் உடல் பதறியது.

பலராமும் அவரும் ஒரு மேஜை முன்னுல் உட்கார்ந் தார்கள். அதன்மேல் ஒரு லேசான மர நாற்காலியை வைத்தார்கள்.

பலராம் ஆவிகளுக்குப் பெரிதான கஷ்டங்களைக் கொடுக்க விரும்பவில்லை.

ஆவிகள் எழுதுவதற்குக் கஷ்டப்படுகின்றன, நேரமும் எடுக்கின்றன என்பது அவருக்குத் தெரியும். ஆகவே ‘ஆமாம்’ அல்லது ‘இல்லை’ என்பதற்கு இணங்க ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ நாற்காலியின் கால்கள் தட்டிக் கொள்ளவேண்டும் என்று மனத்தில் ஒரு வரைமுறை வகுத் திருந்தார்.

உள்ளே ஒரே நிசப்தம், காற்று இல்லாததால் வியர்வை ஆருக வழிந்தது.

பென்சின், ஆல்கஹால், வினில் அஸிடேட், லிஸால், கார்பன் டெட்ரா க்ளோரைட், மெந்தால் என்று பல ரசா யனங்களின் நெடி. எலும்புகளையும் தோல்களையும் பாது காக்கும் மருந்துகள் இவை.

சிங்குக்கு மனம் அடித்துக் கொண்டது.

பலராம் வெகுநாழிகை பிரார்த்தனையில் இருந்தார். கண்களை மூடி ஆவிகளை அழைத்துக் கொண்டிருந்தார். சமீப

காலத்தில் வந்துள்ள ஆவிகளைத்தான் அழைக்க விரும்பினர். அதற்காகவே பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்.

வெகு நேரத்திற்குப் பிறகு இருவரும் நாற்காலியைத் தொட்டார்கள். அது கனத்திருந்தது. பலராமின் உடம்பு நடுங்கியது.

—சிங்! ஆவி வந்துவிட்டது. நான் ஆரம்பிக்கிறேன்— என்றார்.

—ஆவியே நீ இங்கே வந்துவிட்டாயா?

சில விநாடிகள் மௌனம்.

சிங்குக்கு ஒரே ஆவல்!

அவர் இதயம் படபட வென்று அடித்துக் கொண்டது.

காற்றில் அப்போது திடீர் இயக்கம். அதைக் காது நுண்ணிதாய் உணர முடிகிறது.

டக்!

நாற்காலியின் கால் தூக்கி ஒருமுறை அடித்தது.

ஆமாம் என்று அர்த்தம்.

சிங்குக்கு வியர்வை துளிர்த்தது. அவரது ஒரு கையை பலராம் பற்றிக்கொண்டார்.

சிங் அயரிக்கை ஆனார்.

—நீ எத்தனை நாளாய் இருக்கிறாய், ஒரு வருஷமா?

—இல்லை (இரண்டு தட்டு)

—இரண்டு வருஷமா?

—ஆமாம்.

—இந்த மியூசியம் எல்லைக்குள் இறந்து போனாயா?

—ஆமாம்!

—நீ கொலை செய்யப்பட்டாயா?

—ஆமாம்!

—உன்னைக் கத்தியால் குத்தினார்களா?

—இல்லை.

—விஷம் கொடுத்தார்களா?

—இல்லை.

—உன் கழுத்தை நெரித்தார்களா?

ஆவி எந்தக் குறியும் கொடுக்கவில்லை.

—உன் பெயர் என்ன பானுமதியா?

—இல்லை.

—காவேரியா?

—இல்லை.

—மங்கலாவா?

—இல்லை.

சிங் திடுக்கிட்டார். இது யாருடைய ஆவியாக இருக்கும்? குறிப்பிட்ட பெண்களைத் தவிர வேறு பெண்கள் இங்கே கொலை செய்யப்பட்டார்களா?

—உன் பெயர் என்ன? முதல் எழுத்து 'ஏ'யில் ஆரம்பிக்குமா?

—இல்லை.

—'பி'யில்?

—இல்லை.

மற்ற எழுத்துக்களைச் சொல்லிக் கொண்டே போக ஆர் என்ற எழுத்துக்கு ஆமாம் வந்தது.

—உன் வயது? பதினொலா?

—இல்லை.

—பதினைந்தா?

—இல்லை.

பதினறுக்கு ஆமாம் என்றது.

—உன்னைக் கொன்றது யார்? கூரேசனு?

—இல்லை.

—ராகவலுவா?

—இல்லை.

—சந்திரகுமாரா?

பதில் இல்லை.

—சரி நீ போகலாம்.

இதற்கே அரைமணி நேரம் ஓடிவிட்டது.

அதன் பிறகு மற்ருெரு ஆவி பேசவந்தது. பெயர் காவேரி தானே எனக் கேட்டதும் ஆமாம் என்றது. சொன்ன விவரங்கள்.

நான் கொலை செய்யப்பட்டேன். செய்தவர்?(பதில் இல்லை) செய்த வழி? (பதில் இல்லை). நான் கெடுக்கப் பட்டேன்.

அடுத்த ஆவி பானுமதியின் காதலன் என்றது. அப்படிச் சொல்ல வைப்பதற்குள் பலராமுக்குப் போதும் போதும் என்ருகி விட்டது.

சொன்ன விவரங்கள்.

கொலையுண்டேன். கொலை செய்த வழி (பதில் இல்லை). கொலை செய்தவர் பெயர் தெரியாது. மியூசியத்தில்தான் வேலை செய்கிருர்.

காதலன் போன பிறகு பானுமதியை அழைத்தார் பலராம்.

ஆவி எதுவும் வரவில்லை.

ஆச்சரியமாக இருந்தது.

பிறகு மங்கலாவை அழைத்தார்.

அதற்கும் எந்த ஆவியும் வரவில்லை. பலராமுக்கு திகைப்பாக இருந்தது.

யோசனையில் இருந்துவிட்டு, பானுமதியின் காதலனை மீளவும் கூப்பிட்டார்.

ஆவி வந்தது.

—பானுமதியும், மங்கலாவும் இங்கே இருக்கிறார்களா?

—ஆமாம்

—அவர்கள் வர விருப்பம் இல்லையா?

—ஆமாம்!

சோகத்தில் இருக்கிறார்களா?

—ஆமாம்!

—அவர்கள் இருவரும் கொல்லப்பட்டார்களா?

—ஆமாம்!

—கொன்றவர் யார்?

நாற்காலி படபட என்று அடித்தது. முறையான பெயர் எதுவும் தெரியவில்லை.

கடைசிக் கேள்வி முடியுமுன் பொழுது புலர்ந்து விட்டது.

சிங்கும் பலராமும் எழுந்தார்கள். தடுமாற்றத்துடன் வெளியே வந்தார்கள்.

ஆவலுடன் வெளியில் சுரேசன் காத்திருந்தார்.

—என்ன ஸார்? என்ன செய்தி வந்தது? என்று பரபரப்புடன் கேட்டார்.

சிங் ஒரு கணம் மௌனமாக இருந்தார். பிறகு, —ஒன்றும் பிரயோசனமில்லை என்று கூறி உதட்டைப் பிதுக்கினார்.

—ஏன், ஸார்? ஆவி வரவில்லையா? எஸ்ஸூர் சுரேசன் மீண்டும்.

—வரவேயில்லை, ஸார்! ஏதோ சத்தம் கேட்டது. அது வெறும் எலிச் சத்தந்தான்! ஆவியாவது உலகமாவது! என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார் சிங்.

தூரத்திலிருந்து அப்போது கியூரேட்டர் சந்திரகுமார் கையில் டூத் பிரஷ்ஷை வைத்துக் கொண்டு கவனித்துப் பார்ப்பது நன்ருகத் தெரிந்தது.

29

அன்று முழுவதும் அலுவலகத்தில் சிங்குக்கு அதே சிந்தனை இருந்தது.

ஆவி சொன்ன விஷயங்கள் உண்மையா? அல்லது ஆவியே உண்மையா?

படலத்தின் போது நாற்காலியை அவரே பிடித்திருந் தார். பலராம் எதுவும் செய்யவில்லை என்று நிச்சயமாகத் தெரியும்.

நாற்காலி என்னமாக அடித்தது? அதற்கு எப்படி இத்தகைய சக்தி வந்தது?

வாட்ச்மேன் பாலுசாமி சொன்ன விஷயங்கள் நடந்திருக் கின்றன. அதைத் தவிர மற்ருெரு பெண்ணின் கொலையும் நடந்திருப்பது தெரியவருகிறது.

ஒரு வேளை பலராம் வேண்டும் என்றே ஏமாற்று வேலை ஏதாவது பண்ணிஞலும், (அப்படிப்பட்ட மனிதர் அல்ல அவர்) அவருக்கு இவ்வளவு விஷயங்கள் தெரிந்து அதற்கேற்ப நாற்காலியைத் தட்டுகிருர் என்று சொல்லவே முடியாது. அவருக்கு முன் கூட்டியே பல விஷயங்கள் தெரியாது. ஒரு

நாள் முழுவதும் அவகாசம் எடுத்துவிட்டு மறுநாள் காலை எட்டுமணிக்கே மியூசியம் போய்விட்டார் சிங்.

காம்பவுண்டுக்குள் போனதும் நேராக குவார்ட்டர்ஸ் பக்கம் திரும்பி கியூரேட்டர் தங்கும் பகுதிக்குப் போய் சேர்ந்தார்.

உள்ளே உட்கார்ந்திருந்த சந்திரகுமார் சிங்கைக் கண்டதும் திடுக்கிட்டார்.

அதை, மனத்தில் டிக் பண்ணிக் கொண்டார் சிங்.

—உங்கள் இருப்பிடத்தைப் பார்க்க வந்தேன் என்றார் சிங்.

சந்திரகுமார் ஏதோ சொல்ல முயன்றார். வார்த்தைகள் உருவாகவில்லை. எண்ணம் கூட உருவாகவில்லை.

உள்ளே சிங் நுழைந்தார்,

—மிஸ்டர் சந்திரகுமார்! நான் வந்தது ஆச்சரியமாயிருக்கா? ஒண்ணும் கலவரப்படாதீங்க! இது என்னுடைய மாமூல் தொழில்—கேஸ் முடியாதவரைக்கும் ஒவ்வொரு இடத்திற்கும் போய் விசாரித்துக் கொண்டே இருப்பேன் என்றார் சிங்.

—ஆமாம் ஸார்! உங்க தொழில்.........என்றார் சந்திரகுமார் அசட்டுத்தனமாய் குழைந்து கொண்டே.

—நான் உங்கள் வீட்டைச் சுற்றிப் பார்க்கலாமா? என்றார் சிங்.

—ஓ, தாராளமாக! என்றார் சந்திரகுமார்.

சிங் உள்ளே சென்று ஒவ்வொரு இடத்தையும் ஊற்றுப் பார்த்தார்.

அவர் ஆர்வம் எல்லாம் எங்கேயாவது தரை பெயர்ந்திருக்கிறதா என்பதைப் பார்ப்பதில் இருந்தது.

மறைந்து போன நான்கு பெண்களின் கொலையில் ஏதாவது ஒன்றில் சந்திரகுமார் ஈடுபட்டிருந்தால், அந்த உடலை அவர் எங்கே புதைத்திருக்க முடியும்?

ஒரு உடல் குட்டையில் கண்டுபிடிக்கப்பட்டது.

மீதி மூன்று உடல்கள்?

பொதுவாகக் கொலை செய்கிறவர்கள் உடலை தமது அக்கம் பக்கத்திலேயே தோண்டிப் புதைத்து விடுவார்கள்.

சிலர் தமது வீட்டுக்குள்ளேயே புதைத்து விடுவார்கள்.

இந்த வீட்டில் அப்படி ஏதாவது இடம் தென்படுகிறதா?

இங்கே ஒரு கல், அங்கே ஒரு கல் என்று புரட்டிப் பார்த்தார்.

சில இடங்களில் தட்டிப் பார்த்தார்.

பிறகு பின்புறத்தில் சற்று தூரம்வரை தரையை ஆங்காங்கே கிளறிப் பார்த்தார்.

பின்னர் வீட்டுக்குள் திரும்பினார்.

உள்ளே வந்து சந்திரகுமாரைப் பார்த்தபோது, அவருக்கு நிறைய வியர்த்து விட்டிருந்தது! ஏன் இப்படி வியர்வை?

—சந்திரகுமார்! என்றார் சிங்.

கியூரேட்டர் உடம்பு உணர்ச்சி வசமாய் ஆடுவது தெரிந்தது.

—நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா? என்றார் சிங்.

—எதுவுமில்லை—நீங்கள் அனாவசியமாய் என் வீட்டை சோதனைபோட்டு என் கௌரவத்தைப் பாழடிக்கிறீர்கள் என்று சற்று உரத்துக் கூறினார் அவர்.

—நான் சோதனை போடவில்லை, நம்பர் ஒன்று! உங்கள் வீட்டைப் பார்த்தது போலவே இங்கே டைரக்டர் வீடு

முதல் அட்டெண்டர் வீடு வரை பார்க்கப் போகிறேன், நம்பர் இரண்டு! தெரிந்ததா!

—நீங்கள் அனுவசியமாய் ஆவியின் பேச்சைக் கேட்டு...

—நான் கேட்டேனு?

—கேட்டீர்கள்!

—கேட்டேன். அது சொல்லவில்லை.

—அது என்னவோ எங்களுக்குத் தெரியாது. எங்களுக்கு அநாவசியமாய்க் கவலை கொடுக்கிறீர்கள்!

—உங்களுக்குக் கவலை எதற்கு? நீங்கள் கொலை செய்தீர்களா?

—இன்ஸ்பெக்டர்! என்னிடம் நல்ல கேள்வி கேட்டீர்கள்! என்னுடைய க்வாலிஃபிகேஷன் உங்களுக்குத் தெரியுமா?

—முழ நீளத்திற்கு இருக்கும்! எனக்குத் தெரிய வேண்டியது உங்கள் குணம்!

—அது கேட்க வேண்டிய இடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். நான் உங்களிடம் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை.

—மிஸ்டர் சந்திரகுமார்! வீணுக வார்த்தையை செலவழிக்காதீர்! நான் எந்த விதத்திலும் உங்கள் மீது குற்றம் சாட்டவரவில்லை. அதற்குள் உங்களுக்கு ஏன் இந்தப் பதட்டம்?

—பதட்டம் இல்லை. எதுவாக இருந்தாலும் நீங்கள் டைரக்டரிடம் போய் கேட்டுத் தெரிந்து கொள்வதுதான் முறை. எங்களைப் போன்றவர்களிடம் மிரட்டினுல்...நாங்கள் போலீஸ் என்றுலே பயப்படுகிறவர்கள்.

சந்திரகுமார் சமாளித்தார்.

சிங் எல்லாவற்றையும் மனதில் குறித்துக் கொண்டார்.

இந்த ஆளிடம் என்னவோ இருக்கிறது என்று மனம் சொல்லியது. ஆனால் அவர் மீது குற்றம் சாட்டுவதானால் காரணம் ஏதாவது வேண்டுமே!

ஆவி சொல்லியது என்று சொன்னால் போதுமா?

சிங் அங்கு குவார்ட்டர்ஸில் உள்ள எல்லா வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் ஒருமுறை போய்ப் பார்த்துவிட்டு வந்தார்.

சுரேசன் வீட்டிற்குப் போனபோது அவர் சிரித்துக் கொண்டே எல்லா இடங்களையும் காண்பித்தார்.

எந்த வீட்டிலும் அவர் காண விரும்பியது தென்படவே இல்லை.

பத்து மணிக்குச் சோதனைகளை முடித்துவிட்டு மியூசியத்தை நோக்கிப் போகும்போது டாக்ஸிடெர்மிஸ்ட் ராகவலு கையில் எதையோ தூக்கிக்கொண்டு போய்க் கொண்டிருந்தார்.

(ஜந்துக்கள், பிற உயிரினங்கள் இவற்றின் மாடல்களை உருவாக்கும் கலைஞருக்கு டாக்ஸிடெர்மிஸ்ட் என்று பெயர்)

அவர் அருகில் போனதும் கையில் உள்ளது ஒரு கீரிப் பிள்ளை என்று தெரிந்தது.

—ஓ, இதென்ன என்று கேட்டார் சிங்.

—கீரிப்பிள்ளை.

—இறந்துவிட்டதா?

—ஆமாம்! குளோரபாரம் கொடுத்து கொன்று விட்டோம்!

—எதற்கு?

—உள்ளே பழைய மாடல் ரொம்ப மோசமாகி விட்டது. அதற்காக புதுக் கீரிப்பிள்ளை மாடலை வைக்க நினைத்தோம்.

—இதை இப்படியே கொண்டுபோய் வைத்து விடுவீர்களா?

—நோ நோ நோ! முதலில் இதன் தோலை அப்படியே மேலிருந்து கீழாக உரித்து விடுவோம். தோலில் அர்ஸெனிகல் கலவை இருமுறை தடவி அதில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஊன் பகுதிகளைச் சுரண்டி எடுத்து விடுவோம். பிறகு இந்த பிராணி போலே அதன் உடம்பு அளவுக்கு ஒரு பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் மாடல் செய்து கொள்ளுவோம். அந்த மாடலில் பின்னர் தோலைப் பொறுத்தி விடுவோம். கண்களுக்கு பதிலாகச் செயற்கை கண்கள் பொருத்தி விடுவோம். பிறகு நீங்கள் பார்த்தால் அசல் கீரிப்பிள்ளையை பார்ப்பது போலிருக்கும்.

—ஓ! இந்த வேலைகளை எல்லாம் இங்கேயே செய்கிறீர்களா?

—ஆமாம்! இங்கே அதற்கு பெரிய லாபரடரி இருக்கிறதே தெரியாதா?

—நான் பார்க்கவில்லையே, என்றார் சிங்.

சிங்கை அழைத்துக்கொண்டு ராகவலு லாபரடரிக்குப் போனார்.

அங்கே வெவ்வேறு பிராணிகளின் உடல்கள் கிழிக்கப் பட்டுக் கிடந்தன. உள்ளே ஊனும் ரசாயனமும் கலந்த நெடி!

பிராணிகள் சிலவற்றின் தோல் உரிக்கப்பட்டிருந்தது.

சில எலும்புக் கூடுகளை அமிலங்களுக்குள் அமுக்கி வைத்திருந்தார்கள்.

சில பறவைகளின் உடல்கள் குடல்கள் வெட்டப் பட்டிருந்தன.

ராகவலு எல்லாவற்றையும் விளக்கினார்.

—இதை எல்லாம் இங்கே செய்வீர்கள் என்று எனக்குத் தெரியாது.

—இந்தப் பொருட்காட்சியில் உள்ள எல்லா ஸ்பெஸிமன்களும் நாங்கள் செய்தவை தான். ஒரு திமிங்கிலத்தைப்

பார்த்திருப்பீர்களே! அதன் தோலை உரித்துப் பாடம் செய்ய இரண்டு மாதம் ஆகியது! அதன் எலும்புக் கூட்டைத் தனியாக வைத்திருக்கிறோம் பார்த்தீர்களா? ஒரு சிறு எலும்பைக் கூட உடைய விடாமல் நாங்கள் கவனமாக வேலை செய்தோம். இவ்வளவுக்கும் ஒரு திமிங்கிலத்தை அமிழ்த்தி வைப்பதற்கான நீளத்தில் பெரிய டாங்குகள் கூட கிடையாது...

அந்த லாபரடரியைப் பார்த்துவிட்டு வெளியே வந்த பிறகுதான் பளிச்சென்று ஒரு யோசனை சிங்குக்குத் தோன்றியது.

என்ன பைத்தியக்காரத்தனம்! ஒரு மியூசியத்தில் வந்துவிட்டு செத்த உடல்களை வெளியில் தேடுகிறோமே! இங்கேதான் உடம்பின் எல்லாப் பகுதிகளையும் தனித்தனியாக எடுத்துப் பாடம் செய்வதற்கான எக்ஸ்பெர்ட்கள் இருக்கிறார்களே!

இவர்கள் மனது வைத்தால் ஒரு மனித உடம்பையே கூறுகூறுக்கி அதை அப்படியே மறைத்துவிட முடியுமே!

முடியுந்தான்! ஆனால் அப்படிச் செய்வார்களா?

பொதுவாகச் செய்ய மாட்டார்கள்! ஆனால் ஒரு தனிமையான இடத்தில் சில நபர்களே அடங்கிய ஒரு குழு வெகு வருடங்களாகவே தங்கி விட்டால் அவர்களுக்குள் ஏற்படுகிற ஒருவிதப் பிணைப்பில் எந்தவித அட்டூழியங்கள் வேண்டுமானாலும் நடக்கும்!

அப்படியானால்......?

சிங்கின் மூளை கிளை பிரிந்து பறந்தது.

மறைந்த பெண்களின் உடல்களை இந்தவிதமாகவே கூறுபடுத்தி எலும்புக்கூடுகளை எடுத்து காட்சி சாலையில் மாட்டிவிட்டால்.........

யாருக்கு என்ன தெரியப் போகிறது?

அப்படிச் செய்வார்களா?

மீண்டும் சிங்குக்கு அதே வாதந்தான் தோன்றியது.

ஒரு தனிமையான இடத்தில், நாலைந்து படித்தவர்கள், வருடக் கணக்கில் தங்கி, ஒரு ஊக்கம் தராத, சுறுசுறுப்புத் தராத, எந்தவிதத்திலும் 'டல்' லாக இருக்கும் ஒரு வேலையைச் செய்துகொண்டு நிரந்தரமாகத் தங்கிவிடும் நேரத்தில், அவர்கள் ஒருவரின் மனத்தில் எழும் ஒரு வக்கிரமான குற்ற நினைவு, வெகுசீக்கிரம் அந்தக்குழுவின் வக்கிரமான குற்ற நினைவாகவே மாறிவிட வாய்ப்புண்டு.

அதே போல் இங்கு நடந்திருந்தால்.........

உடனே பரபரப்பு அடைந்த சிங் அதை வெளியே காட்டிக்கொள்ள விரும்பவில்லை.

யோசித்துக் கொண்டே நகரத்திற்குத் திரும்பி வந்து விட்டார்.

இரவு முழுவதும் சிந்தித்ததில் ஒரே ஒருவழி தோன்றியது.

ஆந்த்ரோபாலஜி அறையில் இருக்கும் எலும்புக் கூடுகளையும் ஒருமுறை விவரமாகப் பரிசோதிக்க வேண்டும்.

அந்த சோதனையை டைரக்டர், கியூரேட்டர்களின் கவனம் இல்லாமலேயே செய்துவிட வேண்டும்.

இதற்கு யாராவது கிடைப்பார்களா?

ஆந்த்ரோபாலஜி படித்த எக்ஸ்பெர்ட் யாராவது வேண்டும்.

அவர் வந்து பார்த்தாரானால்,இங்கேதொங்குவது ஆதிச்ச நல்லூரர் எலும்புக்கூடா, பானுமதி, மங்கலாக்களின் எலும்புக் கூடா என்று கண்டுபிடித்து விடுவார்.

எலும்புகளின் தோற்றம், மண்டை ஓடுகளின் வடிவம், அவற்றின் பழமை இவைகளைக் கொண்டு,அவை தற்காலமா, முற்காலமா என்று கண்டுபிடித்துவிட முடியும்.

அதற்கு ஒரு அனுபவஸ்தர்தான் தேவை!

பகல் முழுவதும் ஒரு எக்ஸ்பர்ட்டைத் தேடுவதில் நேரம் செலவழிந்தது.

மாலைக்குள் அவருக்கு ஆந்த்ரோபாலஜி புரபஸர் ஒருவர் கிடைத்து விட்டார்.

கர்நாடகத்தில் வேலை பார்த்து ரிடையர் ஆனவர் அவர்.

சம்புராஜ் என்று பெயர்.

அவரிடம் அறிமுகமானதும், விஷயங்களை எல்லாம் சிங் சொன்னபோது அவர் திடுக்கிட்டார். இந்த மாதிரி வேலைகளில் இறங்குவதற்கே தயங்கினார்.

ஆனால் சிங், அதனால் ஏற்படும் நியாய அநியாயங்களை விளக்கிக் கூறியபிறகு சம்புராஜ் ஒத்துக் கொண்டார்.

30

ஆந்த்ரோபாலஜி துறையில்புரொபசராக இருந்து ரிடையர் ஆன சாம்புராஜ் அடுத்த நாள் ஒரு டூரிஸ்ட்போல், க்ரேவ்லி மியூசியத்திற்குள் நுழைந்தார்.

சாதாரணமாக அதிகம் படிக்காதவர் போல் ஒவ்வொரு அறைக்கும் சென்றார்.

நாலாவது அறைதான் ஆந்த்ரோபாலஜி அறை.

உள்ளே நுழைந்ததும் அவருக்கே மகிழ்ச்சியாக இருந்தது.

அது ஒரு பெரிய ஹால். அந்த ஹாலில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் பொருட்களைப்போல் வேறு எந்த மியூசியத்திலும் அவர் பார்த்ததில்லை.

ஆகவே, அவரது விஷய ஞானம் சற்று அவர்மீது படிய, அவரே ஆர்வம் எடுத்துக்கொண்டு அங்குள்ள பொருட்களைப் பார்க்கத் தொடங்கினார்.

ஆதிச்சநல்லூர் தலை ஓடுகளும், எலும்புக் கூடுகளும், கலசக்காடு எலும்புக் கூடுகளும் இருந்தன.

அவற்றைப் பார்த்துக்கொண்டு வரும்போது,

இவை என்ன?

இடைஇடையே ஆதிச்சநல்லூர் என்று லேபிள் போட்டு, ஒவ்வொரு மண்டை ஓடு இருந்தது.

ஆனால் உற்றுப்பார்த்தால் அவை அந்தப் பழைமையான ஓடுகள் அல்ல என்று தெரிந்தது.

அந்தப் பூர்வீகக்குடி மண்டை ஓட்டுக்கும், தற்கால மனிதரின் மண்டை ஓட்டுக்கும் எவ்வளவு வித்தியாசங்கள்!

அந்த வித்தியாசங்களைப் பார்த்த உடனேயே எல்லோரும் கண்டுபிடித்துவிட முடியாது.

பழகினவர்களுக்குத்தான் எடுத்த எடுப்பிலேயே அவை பழைய காலத்தவை அல்ல! தற்காலத்தியவை என்று தெரிந்துவிடும்.

அடுத்தாற்போல் எலும்புக் கூடுகளைப் பார்த்தார்.

இடையிடையே வெவ்வேறு பழங்கால இனத்தவரின் பெயரை வேண்டுமென்றே கொடுத்து சில எலும்புக் கூடுகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

ஆனால் அவைகளைப் பார்த்த உடனேயே தற்காலத்து எலும்புக் கூடுகள் என்று சொல்லிவிடமுடியும்.

மொத்தம் நான்கு மண்டை ஓடுகளும் எலும்புக்கூடுகளும் தற்காலத்தியவை என சம்புராஜ் கண்டுபிடித்தார்.

இதில் ஒரு எலும்புக்கூடு ஆணுடையது என்றும் மீதியாவும் பெண்ணுடையது என்றும் கண்டுபிடித்தார்.

அவருக்கு ஒரே பரபரப்பு ஏற்பட்டது. அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் மேலும் மியூசியத்தைச் சுற்றிப் பார்ப்பதுபோல் பார்த்துவிட்டு வெளியே வந்தார்.

தொலைவில் இன்ஸ்பெக்டர் சிங் அவருக்காக ஆவலோடு காத்திருந்தார்.

—மிஸ்டர் சிங் நீங்கள் நினைத்தது சரி என்று கைகுலுக்கினார் சம்புராஜ்.

—என்ன சொல்கிறீர்கள்? என்றார் சிங்.

—உள்ளே நான்கு எலும்புக் கூடுகள் புதியவை........... என்று ஆரம்பித்து, பார்த்தவைகளின் விவரங்களை முழுதும் கூறினார் சம்புராஜ்.

சிங்கின் கண்கள் ஆர்வத்தில் விரிந்தன.

31

அசிஸ்டெண்ட் கமிஷனருக்கு முதலில் செய்தி போன போது அதிர்ச்சி அடைந்தார்.

—மிஸ்டர் சிங்! ஒரு போலீஸ் படையைக் கொண்டு போய், மியூசியத்தையே சூழ்ந்து கொண்டுவிடுங்க! என்றார்.

—நோ, ஸார்! இன்னும் கொஞ்சம் அவகாசம் வேணும். இதிலே யார் யார், யாரைக் கொலை பண்ணினாங்க? யார் யார் உடந்தை? யார் யாரைக் கற்பழிச்சாங்க? எல்லா விஷயமும் தெரிஞ்சுக்கணும். அதனாலே இன்னும் இரண்டு நாள் அவகாசம் கொடுங்க! அப்புறம் ஆக்ஷன் எடுக்கலாம் என்றார் சிங்.

—ஓ எஸ், அப்படியே செய்யுங்க! நீங்க சொல்றதைப் பார்த்தா மங்கலா உயிரோட இல்லேனு தோணுது.

—எஸ் ஸார்! இருந்தாலும் கன்ஃபர்மேஷனுக்கு கொஞ்சம் பொறுங்க!

— ஓ கே.

சிங் யோசித்தார்.

சரி, மேலே விவரங்களை எப்படி அறிவது?

சூரேசனை விசாரிக்கலாமா?

ரொம்ப ஏமாற்றுன ஆசாமி! சிரித்துக் கொண்டே பேசுகிருர். எதைப் பேசவேண்டும், எதை மறைக்க வேண்டும் என்கிறது நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஆகவே அவரிடம் விசாரணை செய்யக் கூடாது.

இந்த கியூரேட்டர் சந்திரகுமார்! ஆள்தான் திடகாத்திரமாக இருக்கிருர். மனத்தில் ரொம்ப பலவீனம். மிரட்டினுல் எல்லாவற்றையும் ஒப்பித்துவிடுவார். ஆனுல் சரியான முறையில் மிரட்டவேண்டும்.

டாக்ஸிடெர்மிஸ்ட் ராகவலு?

விசாரணைக்கு மசிகிறவர் போலத்தான் இருந்தது. அவர் இந்தக் கேஸிலே எவ்வளவு பங்கு பெற்றிருக்கிருரோ?

காலை எட்டு மணிக்கு மஃப்டியில் ஒரு கான்ஸ்டபிள் வர முன்னேற்பாடோடு கியூரேட்டர் வீட்டுக்குள் நுழைந்தார் சிங்.

சந்திரகுமார் டிரஸ் செய்து கொண்டிருந்தார். தலையை வகிடு எடுத்தவர் சிங்கைக் கண்டதும் திடுக்கிட்டு நின்ருர்.

வாருங்கள் என்று கூடச் சொல்லவில்லை.

சிங் உள்ளே நுழைந்தார்.

மிக சுவாதீனமாக ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

அவரது சுவாதீனம் சந்திரகுமாருக்கு பிடிக்கவில்லை.

—இன்ஸ்பெக்டர்! நீங்கள் என் ப்ரைவஸியைக் கெடுக்கிறீர்கள் என்று சற்று கடுமையாகச் சொன்னுர் சந்திரகுமார்.

—ஓ அப்படியா! இது என் கடமை! அதனுல்தான் வருகிறேன், என்ருர் சிங்.

சந்திரகுமார் ஸ்டைலாக நாற்காலியில் உட்கார்ந்தார்.

நேற்றைவிட இன்றைக்குத் தன்னம்பிக்கை அவரிடம் வந்திருந்தது.

—இன்னும் எத்தனை நாள் இப்படி வருவீர்கள் என்று கடுமையாகக் கேட்டார் சந்திரகுமார்.

—விஷயம் தெரியவேண்டி வந்தால் தினமும் வரவேண்டியதுதான்! என்றார் சிங்.

—இனிமே விஷயம் எதுவும் கிடையாது. நான் எதுவும் சொல்லத் தயாராயில்லை நீங்கள் போகலாம்.

—ஏன் போகணும்? என்று கேட்டு அந்தக் கேள்வியை அப்படியே அந்தரத்தில் விட்டார் சிங்.

மனோதத்துவம் அவர் நன்றாக அறிந்தவர். ஒரு விஷயத்தில் இவ்வளவு பிடிகை போட்டால், ஆள் உள்ளூரக் கலங்கி விடுவான். மேலே போகப் போக எதிர்க்கும் சக்தி அவனுக்குக் குறைந்து விடும் என்று அறிந்திருந்தார்.

ஆகவே, இனி மெள்ள மெள்ள விஷயத்தில் இறங்கலாம் என்று நினைத்தார் சிங்.

—ஏன் போகணும், மிஸ்டர்! என்று மிகவும் நாசூக்காகக் கேட்டார்.

சந்திரகுமாருக்கு கோபம் தலைக்கேறிக் கொண்டிருந்தது மூச்சு விறுவிறு என்று விட்டுக் கொண்டிருந்தார்.

—ஏன் போகணும் மிஸ்டர்! என்று இரைந்து கேட்டு மேஜை மீது கையைக் குத்தி விழிகளை உருட்டினார் சிங்.

சந்திரகுமார் அசந்து விட்டார்.

மூச்சு முன்னைவிட இப்போது வேகமாக வந்தது. பேசத் துடித்தார். என்ன பேசுவது என்று தெரியவில்லை.

—எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. நீங்கள் ஒரு கிரிமினல் காரியம் செய்திருக்கிறீர்கள் என்று.

—என்ன காரியம்?

—ஒரு பெண்ணைக் கொன்றிருக்கிறீர்கள்!

ஒரு கணம் அந்தத் திகைப்பை சிங் கவனித்துக் கொண்டார்.

—பொய்!

—பொய்யில்லை, நிஜம்.

—நிரூபியுங்கள்!

—நிரூபிக்கத்தான் போகிறேன். ஆனால் நிரூபிக்க முடியாதபடி நீங்கள் அவளது உடலை கண்காணாமல் செய்து விட்டீர்கள்.

—அதுவும் பொய்!

—அவள் உடலைக் கிழித்து எலும்பை எடுத்து மியூசியத்தில் மாட்டிவிட்டீர்கள்!

—பொய்.

—இந்தப் பொய் என்ற சொல்லில் இப்போது உக்கிரம் குறைந்திருப்பதை சிங் கண்டுகொண்டார்.

—அந்தப் பெண்ணின் பெயரைச் சொல்லட்டுமா?

—சொல்லுங்கள்!

—அவளது பெயர் 'ஆர்' என்ற எழுத்தில் ஆரம்பிக்கிறது.

ஆவியிடம் கேட்ட செய்திகளை வைத்தே சிங் மிரட்டி விட்டார். இப்போது 'ஆர்' என்ற எழுத்து என்று ஆவி சொன்னதை வைத்தே சொல்லிவிட்டார். அது உண்மையாக இருக்குமா?

அவருக்கே இப்படி ஒரு கேள்வி கேட்கிறோமே என்று தோன்றியது. இது பலித்தாலும் பலிக்கலாம்! பலிக்கா விட்டால்......

சிறிதும் சளைத்துவிடாமல் சந்திரகுமாரின் முகத்தையே உற்றுக் கவனித்தார் சிங்.

இப்போதுதான் உக்கிரத்தைத்தளர்த்தி விடாமல் நிறுத்த வேண்டும். எதிராளி அசந்துவிடுவான்.

இந்த மனோதத்துவந்தான் அவரை ஒரேயடியாகத் தூண்டியது.

நீ நகர முடியாது என்பது போல ஒரு உக்கிரமான பார்வை பார்த்தார். அவரால் அப்படிச் செய்ய முடியும்.

சந்திரகுமார் பேசவில்லை.

அவருக்குள்ளே ஏதோ ஒரு வேகம் எழுந்து கொண்டிருந்தது.

—சொல்லுங்கள், சந்திரகுமார்! அந்தப் பெண்ணின் முதல் எழுத்து 'ஆர்'. உண்மையா, இல்லையா? மீண்டும் அதட்டினர்.

திடீரென்று ஒரு உணர்ச்சி சந்திரகுமாரைத் தாக்கியது.

கண்கள் பளபளப்பாய் மாறின. முகத்தை அங்கும் இங்கும் திருப்பினர்.

—இன்ஸ்பெக்டர் என்ருர் மெதுவாக.

சிங் அவரை விடாமல் பார்த்தார்.

—இன்ஸ்பெக்டர்! உங்களுக்கு இதை யார் சொன்னுர்கள்?

—நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை என்ருர் சிங்.

சந்திரகுமார் தொடர்ந்தார்.

—கூரேசன் தான் சொல்லியிருப்பார். அவர் ஒரு அயோக்கியர்.

சிங் பேசவே இல்லை. உதட்டை இறுக மடித்துக் கொண்டிருந்தார்.

—அவர் செய்ததை எல்லாம் அம்பலப்படுத்தி விடுகிறேன். இன்ஸ்பெக்டர், கொஞ்சம் பொறுங்கள். அவர் செய்தது துரோகம்! அவர் செய்தது துரோகம்!

சந்திரகுமார் சட்டென்று எழுந்தார். பக்கத்திலிருந்த அலமாரியில் கையை வைத்தார்.

சிங் உடனே துள்ளிக் குதித்தார். சந்திரகுமாரின் கையை ஓங்கி ஒரு தட்டுத் தட்டினுர்.

—அவர் கையிலிருந்த ஒரு சின்ன பாட்டில் கீழே விழுந்து உருண்டது.

—எனக்குத் தெரியும். நீங்கள் பொட்டாஷியம் சயனைடை அலமாரியில் வைத்திருக்கிறீர்கள். அதை நேற்றே கவனித்துவிட்டேன். உங்கள் லாபரடரியில் பிராணிகளைக் கொல்வதற்காகப் பயன்படுவதை நீங்கள் உங்களுக்கே உபயோகிக்கலாமா?

நடுங்கிக் கொண்டே சந்திரகுமார் திரும்பினார்.

அவர் முகம் கண்ணீரில் நனைந்திருந்தது.

—சந்திரகுமார்! கமான், க்விக்! இங்கே நடந்ததை எல்லாம் ஒன்று விடாமல் ஒப்பித்து விடுங்கள்! நான் உங்களுக்கு உதவி செய்யப் பார்க்கிறேன். நீங்கள் இளவயதானவர், இன்னும் எவ்வளவோ அனுபவிக்க வேண்டியவர்! சொல்லி விடுங்கள்! மியூசியத்தில் நான்கு எலும்புக் கூடுகளை மாட்டியிருக்கிறீர்கள். எல்லாவற்றின் கதையும் வந்தாகவேண்டும்.

சந்திரகுமார் சிறிது நேரம் விசித்துக் கொண்டே இருந்தார்.

குழந்தை போல் அவர் விம்மியது ஆச்சரியமாக இருந்தது.

அவர் மனம் தெளியட்டும் என்று சிறிது அவகாசம் கொடுத்தார் சிங்.

சந்திரகுமார் ஆசுவாசப் படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

32

இருபத்தாறு வயதில் இந்த மியூசியத்தில் வேலை பார்க்க வந்தவர் கியூரேட்டர் சந்திரகுமார்.

அதிலிருந்து தொடர்ந்து பத்து ஆண்டுகளாய் இந்த மியூசியத்தில்தான் இருந்து வருகிறார்.

பதவியில் எந்தவித மாறுதலும் இல்லை.

அவரது வாழ்க்கையில் மாறுதல் இல்லையென்றால் மியூசியத்தின் வாழ்க்கையிலும் மாறுதல் இல்லை. அந்த நாளைய பிரிட்டிஷ்காரர்கள், சென்ற நூற்றாண்டின் மத்தியில் ஏற்படுத்திய மியூசியம் அது! இன்னும் மாறுதல் இல்லாமல் அப்படியே இருந்து வருகிறது. உள்ளே இருக்கும் காட்சிப் பொருள்கூட முக்கால்வாசியும் பிரிட்டிஷார் காலத்தில் வைக்கப்பட்டவைதான்! காட்சிப் பொருள் மட்டுமல்ல: உள்ளே இருந்த பல நாற்காலிகளும், ஸ்டாண்டுகளும், மேஜைகளும் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி விட்டன.

உள்ளே காலம் அப்படி இறுகிப்போய் இருந்தது! அதனாலே! ஒருபழமை! எதிலும் பழமை! சுவாசிக்கும் காற்றிலே பழமை. நினைக்கிற நினைப்பிலே பழமை! எங்கே பார்த்தாலும் பழமை! பழமை!

குமார் வந்த இரண்டாவது வருஷத்தில் அப்படியே அழுதுவிட்டார்.

சரித்திரமும், தொல்பொருள் ஆராய்ச்சியும் ஏன் படித்தோம் என்று நினைத்தார். வேலையை விட்டு எங்காவது ஓடிப்போய் விடலாமா என்று நினைத்தார்.

சந்திரகுமாரின் குடும்பம் அனாதியான குடும்பம். இரண்டு அண்ணன்கள் அவர்கள் வடக்கே இருந்தார்கள். அவரது தாயாரும் வடக்கேயே தங்கிவிட்டாள். சந்திரகுமார் தனியான நபர். இவ்விதம் குடும்ப வாழ்க்கையிலும் அவர் தனியான வாழ்க்கையே நடத்தி வந்தார்.

மியூசியத்தில் வேலை செய்யும் உயர் அதிகாரிகள் அங்குள்ள குவார்ட்டர்ஸிலேயே இருக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம்.

இதனால் வேண்டாவெறுப்போடு சந்திரகுமார் அங்குள்ள குவார்ட்டர்ஸிலேயே தங்க வேண்டி வந்தது.

ஒரு வருஷம் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து விட்டார். ஆனால் அதற்குமேல் அவருக்குப் பொறுக்கவில்லை. யாருக்கும் தெரியாமல் நகரில் ஒரு ஃபிளாட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டார்.

சனி இரவுகளிலும், ஞாயிறு முழு நேரமும் எப்படியாவது அங்கு தங்கிவிடுவார்.

இந்த ஃப்ளாட்டை அவர் வாடகைக்கு எடுத்துக் கொண்ட நோக்கமே எப்போதாவது அவருக்கு, ஏதாவது 'பறவை'கள் சிக்கிவிடும். அதை மற்றவர் கண்படாமல்தானே அனுபவிக்க வேண்டும் என்ற நினைவுதான்!

ஃபிளாட்டை வாடகைக்கு எடுத்த மூன்றாவது மாதத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

மியூசியம் பார்ப்பதற்கு சில மாணவிகளோடு ஒரு புரொபசர் வந்து சேர்ந்தார்.

சில விளக்கங்களுக்கு அவரை அணுகியதால், சந்திர குமார் அந்தக் குழுவை உள்ளே தாமே அழைத்துச் செல்ல வேண்டி வந்தது.

உள்ளே 'நாணயங்கள்' வைத்திருந்த பகுதிகளில் விளக்கியபோது, பெரிய கண்ணாடி கேஸ்களில் உள்ளே இருக்கும் நாணயங்களைச் சுட்டிக் காட்டும் நிலையில், மாணவிகள் ஒருவரை ஒருவர் நெருக்கி அடித்துக் கொண்டு அவர் மீது தொட்டுக் கொண்டு நின்றார்கள்.

அந்த மெல்லிதான உராய்வுகள்தான் அவருக்கு வாழ்க்கையில் முதல் தீ. அப்போது அவருக்கு வயது இருபத்தெட்டு இருக்கும், கோ-எஜுகேஷன் இல்லாத கல்லூரிகளில் படித்தவர். வாழ்க்கையில் அதற்குமுன் எந்த ஒரு காரியத்திற்கும் அந்நியப் பெண்களிடம் பேசியோ பழகியோ அறியாதவர்.

ஆகவே, அந்த மெல்லிய உடல் உறுத்தல் நடக்கும் போதெல்லாம் மனத்தில் விருட்டென்று உணர்வுகள் பாய்ந்து ஆயிரம் சிதறல்களை வீசிவிட்டது.

மனோதத்துவ ரீதியாய் அவருக்கு ஒரு விளக்கமும் தோன்றியது.

பெண்களும் அவரைப் போலவே உணர்ச்சி மிக்கவர்களாய் இருக்க வேண்டும். ஆனால் அவர்களைக் கட்டுப்படுத்தியிருந்த சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கும்போது, இது போன்ற ரகசிய 'மீறல்'கள் அவர்கள் மனங்களுக்கு ஒத்துப் போவதாக இருந்தன.

இந்த 'மீறல்'களையே மெது மெதுவாக அதிகமாக்கி, ஒரு கிளைமாக்ஸ் 'மீறல்' வரை கொண்டு வந்துவிட்டால், அவர்கள் கட்டுப்பாடுகளை உடைத்துக்கொண்டு ஓடி வந்து விடுவார்கள்.

இந்த இனிமையான நினைவுகளில் மூழ்கிய சந்திரகுமார் காட்சிசாலையின் ஒவ்வொரு பகுதியையும் வேண்டுமென்றே விரிவாக விளக்கிக்கொண்டு போனார்.

இப்படிச் செய்யும்போது இடையே அவர் ஒரு விஷயத்தைக் கவனிக்கவும் தவறவில்லை.

அநேக சமயங்களில் அந்த புரொபசர் பெண்மணியே அவர் மீது உரசிக் கொண்டு நின்றாள்.

இடநெருக்கத்தால் அப்படிச் செய்கிறாளா, அல்லது வேண்டுமென்றே அப்படிச் செய்கிறாளா, என்பது அவருக்கு யோசனையாக இருந்தது.

அந்தப் பெண்மணிக்கு நாற்பது வயதிருக்கும். ஆனால் குறைவாகவே அவளை மதிப்பிடலாம். முகத்தில் பிரமாத அழகு என்று சொல்வதற்கு இல்லை. ஆனால் உடம்பின் அமைப்புகள் ஒரே கவர்ச்சியாய் இருந்தன. வந்திருந்த மாணவிப் பெண்களின் உடலமைப்புகள் இளமையின் கிளர்வுகள் என்றால் இவளிடம் எல்லாமே முழுமைகளாகத் தெரிந்

தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் பூரணமாக இழுத்தன.

மதியம் வரை விளக்கங்கள் கூறி முடிந்தபிறகு, சந்திர குமார் குவார்ட்டர்ஸுக்குப் போனார். மாணவிகளின் குழு உண்பதற்காக புளியமரத்தடிக்குச் சென்றது.

குவார்ட்டர்ஸ் போய் கதவைச் சாத்தியிருக்க மாட்டார், அது தட்டப்பட்டது.

திறந்தபோது அந்த புரொபசர் பெண்மணி நின்று கொண்டிருந்தாள்.

—இல்லை, உங்களிடம் பர்சனலா விடைபெற்றுக்கொள் ளலாம் என்று வந்தேன் என்றாள்.

—ஓ! தட்ஸ் நைஸ், உட்காருங்க உட்காருங்க! என்றார் அவர்.

உட்காரும்போதே அவளது முழுமைகளில் ஒன்று ஸாரி யிலிருந்து விலகி கண்ணைப் பறித்தது.

பசுமையாய் ஒரு முழு கோஸ் போல இருக்கும் என்று அவர் கற்பனை செய்தார்.

—உங்களுக்குத் தொந்திரவு கொடுத்துவிட்டோம். இவ் வளவு அழகாக யாரும் இதுவரை விளக்கம் கொடுத்தது இல்லை, என்றாள்.

—ஓ! தேங்க் யூ. எனக்கும் இதில் பெரிய சந்தோஷம் இருந்தது என்றார், அவர்.

அதை நான் நன்றாகப் புரிந்து கொண்டேன். உங்க ளுக்கும் எங்கள் கம்பெனி ரொம்பப் பிடித்திருந்தது என்று சொல்லி விஷமமாகப் பார்த்தாள் பெண்மணி.

சந்திரகுமாருக்குத் திகைப்பாக இருந்தது.

—எங்கள் மாணவிகள் உங்கள் மீது இரண்டுபேர் வேண்டு மென்றே பட்டார்கள், அதுவும் தெரியும், என்றாள்.

—அப்படியா? என்றார் அவர் ஆச்சரியத்துடன்.

—ஆமாம்! அவர்களைக் கவனித்திருக்கிறேன். யார் மீதாவது பட்டு, அந்த ஆண்பிள்ளையின் ரியாக்ஷனை பார்ப்பதில் அவர்களுக்கு ஒரே குஷி!

—ஓ, அப்படியா? என்றார்.

சந்திரகுமார் மீண்டும் தொடர்ந்தார்.

—அந்தப் புரொபசர் கிட்டத்தட்ட ஒருமணி நேரம் பேசிக் கொண்டிருந்தாள். அந்தப் பேச்சிலேயே எனக்கு சில குறிப்புகளை அவள் கொடுத்துக் கொண்டிருந்தாள். நானும் அந்தக் குறிப்புகளைப் பயன்படுத்தத் தயங்கவில்லை. அவைகளுக்கு ஏற்றாற்போல் சில சங்கேத வார்த்தைகளை நானும் அவளிடம் நாசூக்காகத் தெரியவைத்தேன். இரண்டுபேர் நோக்கமும் ஒன்றுபட்டதென்று இருவருக்கும் தெரிந்து விட்டது. அடுத்த சிறிது நேரத்தில் நாங்கள் படுக்கையில் இருந்தோம். பார்த்தால் சாதுவாக இருந்தாள். என்ன முரட்டுத்தனம்! நான்தான் அவள் கையில் பூமாலை ஆகிவிட்டேன். அது எனக்கு ஒருவிதத்தில் வசதியாக இருந்தது. ஏனெனில் அந்த உலகத்திற்கு நான் புதிது. எனவே அவள் கையில் பொம்மையாக இருப்பதில் ஒரே ஆர்வமாக இருந்தது. அந்தக் கணங்களை எவ்வளவு ரசித்தேன் நான்! என் வாழ்க்கையின் முதல் தீயை அணைத்து வைத்தாள் அவள்!

ஆனால் அணைத்தால் அணைகிற தீயா அது! அவ்வப்போது திடீர் திடீர் என்று பற்றிக்கொண்டது.

அந்த புரொபசரை பின்னர் பலமுறை சந்தித்தேன், இந்தத் தடவை எங்கள் சந்திப்புகளை எனது ஃபிளாட்டில் வைத்துக்கொண்டோம்.

—அந்தப் பெண்மணியின் பெயர் என்ன? என்று கேட்டார் சிங்.

—மனோகரி என்றார் சந்திரகுமார்.

ஓ—! என்று ஆச்சரியமுடன் ஒரு ஒப்புதலைத் தெரிவித்தார் சிங்.

—பல சந்திப்புகளுக்குப் பிறகு எனக்கு அவள் அலுத்து விட்டாள். அவளும் அதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும், ரூபா என்ற பெண்ணை அறிமுகப்படுத்தினாள்; மாணவி என்று சொன்னாள் உண்மையா என்று தெரியாது. சந்திப்புகளுக்கு அந்தப்பெண் பணம் வாங்கிக் கொண்டாள். இந்த மனோகரி இதை ஒரு பிஸினஸாக நடத்துகிறாளோ என்று நினைத்தேன். இதன் பிறகு என் வாழ்க்கையில் மாறுதல் ஏற்பட்டது. நானே பணம் கொடுத்து இன்பங்களைத் தேடிச் சென்றேன், அது எனக்கு ஒரு வழக்கமாகிவிட்டது.

—சரி. விஷயத்திற்கு வாருங்கள், ஆர். என்கிற பெண் யார்? என்றார் சிங்!

—அவள் பெயர் ரமா! திருப்பதி வரை ஸ்கூட்டரில் போயிருந்தேன். பதினாறு வயசுப் பெண் ஒருத்தி என்னை வழி மறைத்து—உங்ககூட வந்துடறேன். உங்க கூடவே இருக்கிறேன்னு சொன்னது. எனக்கு ஒரே குஷி. வண்டியிலே ஏற்றிக்கொண்டு புறப்பட்டு வந்தேன். இரண்டுநாள் யாருக்கும் தெரியாமல் என் குவார்ட்டர்ஸில் கொண்டு வைத்துக் கொண்டேன். என் வாழ்க்கையில் அது சுவர்க்கமான நாட்கள். கரும்பு போன்ற ஒரு இனிமையை அடியிலிருந்து நுனி வரை ருசித்துக் கொண்டிருந்தேன். ஆனால் அதுவே என்னை தீராப்பழிக்குக் கொண்டு போகும் என்று எனக்குத் தெரியாது.

—என்ன ஆயிற்று?

—கொஞ்சம் குடிப்பழக்கம் ஆரம்பித்திருந்தேன். ஒரு நாள் ராத்திரி விஸ்கி கொண்டு வந்திருந்தேன். அவளையும் குடிக்கவைத்து இருவரும் சேர்ந்து இன்பத்தின் எல்லைக்குப் போகவேண்டும் என்று நினைத்தேன். அவளுக்கு விஸ்கியை கொடுத்தேன். சாப்பிடமாட்டேன் என்றாள். வற்புறுத்தினேன். இணங்கவில்லை. பிடிக்காது என்றாள். அவளை எப்படியும் குடிக்க வைக்க வேண்டும் என்று ஆசை! அவள் மறுக்க; நான் வற்புறுத்த, கடைசியில் அவளைப் பிடித்து மடியில் குழந்தைபோல் அழுத்தி வாயைப் பலவந்தமாகத்

திறந்து விஸ்கியை மளமள என்று ஊற்றினேன். அவள் வாயி லிருந்து ஏதோ மாதிரி சத்தம் வந்தது! நான் விடவில்லை. ஊற்றிக்கொண்டே இருந்தேன்.

கடைசியில் நான் ஊற்றியது வழிந்தது. அந்தப் பெண் கட்டைபோல் இருந்தாள். விளையாடுகிறாள் என்று நினைத்தேன்.

விளையாட்டு ரொம்ப நாழிகையாக இருந்தது. ஆச்சரியப்பட்டேன்.—ஏய்! என்று சொல்லி மெதுவாக எழுப்பினேன். எழுந்திருக்கவில்லை. அசைத்தேன். எழுந் திருக்கவில்லை. பலமாக உலுக்கினேன். எழுந்திருக்கவில்லை.

பயம் வந்தது. மூச்சைத் தொட்டுப் பார்த்தேன். நாடி யைப் பிடித்துப் பார்த்தேன்.

பகீர் என்றது. அந்தப் பெண் ரமா புரையேறி செத்து கிடந்தாள். நான் பதைத்துப் போனேன்.

வெகு நாழிகை யோசித்தேன். சரியான கொலை வழக் கில் அகப்பட்ட மாதிரி இருந்தது. பயம் ஒரேயடியாய்ச் சூழ்ந்தது. தத்தளித்தேன். இந்த விஷயத்தை எப்படி மறைப்பது என்று யோசித்தேன்.

மறுநாள் பகல்வரை யோசித்தேன். உடம்பை புதைத்து விடவேண்டும், எரித்துவிடவேண்டும், கிணற்றில் தள்ளிவிட வேண்டும் என்று பல யோசனைகள்.

ஒவ்வொன்றிலும் ஆபத்துக்கள் இருந்தன. இதனால் பயந்துபோன நான் எங்கள் டைரக்டர் சுரேசனிடம் எல்லா வற்றையும் சொல்லி யோசனை கேட்க நினைத்தேன். அவர் நிச்சயம் உதவி செய்வார் என்ற நம்பிக்கை. அவரிடம் சொல் வதைத் தவிர எனக்கு வேறு வழியே இல்லை.

நேராக அவரிடம் போய் அழுதேன்! அவர் எல்லாவற் றையும் கேட்டார். பிறகு பயப்படாதே என்று சொல்லி எழுந்தார். என்னோடு வந்து பெண்ணைப் பார்த்தார்.

அவர் முகத்தில் ஒரே பரவசம். பெண்ணின் அந்த அலங் கோலத்திலும் அவளது உடலின் வாளிப்பும் அழகும் அவரைக் கவர்ந்தது.

ஏதோ பூவை எடுப்பதுபோல்உடம்பை எடுத்து,—ஆகா! நல்ல பொருளாயிற்றே! என்னிடம் சொல்லாமலிருந்து விட் டாயே! எனக்குப் பங்கு கொடுத்திருக்கக் கூடாதா? என்று கேட்டார்.

அவருக்கு இப்படிப்பட்ட புத்தியா? எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

அப்பா! செத்த உடலை அவர் அணைத்து தூக்கிய விதம்! அதை அவர் ரசித்த விதம்!

பிறகு உடலைக் கீழே மெதுவாகப் படுக்கவிட்டார்.

—எனக்கு ஒரு யோசனை என்றார்.

—என்ன, என்றேன்.

—இந்த உடம்பை எப்படி அப்புறப்படுத்தினாலும் வெளியிலே தெரிந்துவிடும். போலீசுக்கு விஷயம் லேசாகப் போச்சென்றால்கூட பூமியைக் குடைந்து கண்டுபிடித்துவிடு வார்கள், என்றார்.

—அப்படியானால் என்ன செய்வோம், என்றேன்.

—இந்த உடம்பை வேறுவிதமா டிஸ்போஸ் செய்வோம். நம்ப டாக்ஸிடெர்மிஸ்ட் ராகவலு இருக்கிறார். அவரை அழைக்கிறேன். அவர் நம்ப ஆள்தான். ராத்திரி இதை நம்ப லாபரடாரிக்குக் கொண்டுபோய் உரித்து, நிணங்களை அப் புறப்படுத்திவிட்டு எலும்புக்கூட்டை நமது ஆந்த்ரோபாலஜி அறையிலே தொங்கப்போட்டு விடுவோம் என்றார்.

இன்ஸ்பெக்டர் சிங் முகத்தைச் சுளித்தார்.

—இப்போது ஆந்த்ரோபாலஜி அறையிலே பதினெட் டாவது ஸ்பெஸிமனாகத் தொங்குகிறதே அது ரமாவின் எலும் புக்கூடு.

அவளுடைய தலைமயிரை அப்படியே டோப்பா ஆக்கி, அந்த நீலகிரி தோடவப் பொம்மை இருக்கிறதே, அதன் தலை மேலே வைத்திருக்கிறோம்.

சிங் நிலைத்த பார்வையோடு அப்படியே இருந்தார்.

33

—புரொபசர் மனோகரிக்கும், சுரேசனுக்கும் எப்போது தொடர்பு ஏற்பட்டதோ தெரியாது என்று சந்திரகுமார் தொடங்கினார்.

இந்தத் தொடர்புகள் எந்தவிதங்களில் எல்லாம் நடந்தது என்றும் எனக்குத் தெரியாது.

மனோகரி பொதுவாக ஒரு வாக்குறுதி சுரேசனுக்குக் கொடுத்திருந்தாள்.

சரித்திர ஆராய்ச்சி செய்ய விரும்பும் மாணவிகளை எல்லாம் எப்படியும் அந்த கிரேவ்லி மியூசியத்திற்கு அனுப்புவதாகக் கூறியிருந்தாள்.

நிறைய பெண்கள் வந்து மியூசியத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று சுரேசனுக்கு ஒரு ஆசை!

—ஆசையா? என்றார் சிங்!

—ஆமாம் ஸார்! நானும் முதலில் அவருக்கு ஆசை இருக்காது என்று நினைத்தேன்.

ஆனால் உண்மையில் அவர் அடங்கா ஆசைக்காரர். பெர்வர்ட் என்று சொல்லவேண்டும். ஸாடிஸ்டாகக்கூட இருக்கலாம். போகப் போகத்தான் அவரது கொடூரங்கள் எனக்குத் தெரியவந்தன.

பானுமதி என்ற பெண் வந்து சேர்ந்தாள். அவளுக்கு உருண்டையான மார்பகங்கள்! நீங்கள் அதுபோல் பார்த்திருக்க மாட்டீர்கள். சாதாரணமாகப் பார்க்க முடியாது. சிலை வடிவுப் போல இருக்கும். பச்சையான உடம்பு. இடுப்பு வளைந்து கீழே இறங்குகிற பிடிப்புகளைப் பார்க்க வேண்டும்? ஆகா! அவள் நடந்தால் செக்ஸ், ஸார்! அதுவும் அவள் சடையும் அந்தப்பின்புறமும் மத்தளம் இட்டுக்கொள்ளும் அழகிருக்கிறதே... யார் பார்த்தாலும் இந்தப் பெண்ணை காமுறுவார்கள். சுரேசன் விடுவாரா?

அவருக்கு ஒரே வெறி!

—இந்த வெறிக்கு அவர் இல்லற வாழ்க்கை ஒரு காரணமாக இருக்குமோ, சந்திரகுமார்! என்று கேட்டார்சிங்.

—நிச்சயம் இருக்கும், ஸார்! அவர் மனைவி பதினைந்து வருஷமாக பராலிடிக்கா படுத்திருக்கிறாள். குழந்தை குட்டி கிடையாது. ஒரு சமையல்காரி தினம் வந்துவிட்டுப் போய் விடுவாங்க! சொல்லும்படியாக உறவினர்களும் கிடையாது. பல வருஷமாக செக்ஸ் பசி இருக்கும். இப்போது சந்தர்ப்பம் கிடைத்த உடனே ...

இந்த பானுமதி மீதிருக்கிற மோகம் அவரை ரொம்ப ஆட்டிப் படைத்திருக்க வேண்டும். அதனாலே அவள் தன்னுடைய சிநேகிதன் ஒருத்தனை அழைத்துக் கொண்டு மியூசியத்திற்கு வந்தபோது அவருக்குப் பிடிக்கவே இல்லை. அவர்கள் இருவரும் என்னவிதத்தில் எல்லாம் லீலைகளில் ஈடுபடுவார்கள் என்று கற்பனை நிறைய அவர் செய்திருப்பார்!

(—அதெல்லாம் என் ஊகந்தான், இன்ஸ்பெக்டர் ஸார்!)

அப்படி அவர் நினைக்க நினைக்க மனசிலேயே ஒரு தீ கொழுந்து விட்டு எரிந்திருக்கவேண்டும்.

ஒரு நாள் அந்த பானுமதியும், அவள் காதலனும் ரிஸர்ச் ஹாலிலே உட்கார்ந்தபடியே இன்பம் துய்ப்பதைப் பார்த்து விட்டார்.

அந்த பாஸ்சரை அவர் நினைத்து நினைத்து மனம் விண்டிருப்பார். தனக்கு வாழ்நாளில் கிடைக்காததெல்லாம் இந்தப் பையனுக்கு கிடைக்கிறதே என்று ஏங்கி இருப்பார்.

நேரே என்னிடம் வந்தார்.

அவரது முகத்தைப் பார்த்து பயந்தே விட்டேன். ஒரே கடுகடுப்பு, கண்கள் ரத்தச் சிவப்பேறி பழுத்திருந்தன.

—குமார்! நீ அந்தப் பெண்ணை அந்தப் பையன்கிட்டே இருந்து பிரிக்கணும். உனக்கு பர்சனாலிடி இருக்கு. இளமையான வயசே இருக்கு. நீ இதை எனக்காகச் செய்யவேண்டும் என்று வாதாடினார்.

—அதெல்லாம் கஷ்டம் என்றும், ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண்மீது மனம் போய்விட்டது என்றால் அதை வேறு பக்கம் திருப்புவது கடினம் என்றும் கூறினேன்.

அவர் ஏமாற்றத்தோடு போனார்.

அப்புறம் அவர் மனத்தில் என்ன நிகழ்ந்ததோ தெரியாது.

என் அனுமானங்களை மட்டும் சொல்கிறேன்.

பானுமதியிடம் எப்படிப் பேசினாரோ, தெரியாது. அவளும் அவளது காதலனும் ரிஸர்ச் ஹாலில் ஒரு இரவு தங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்.

முன்னால் பானுமதி வருவதாகவும், பின்னர் அவள் காதலன் வருவதாகவும் ஏற்பாடாகி இருக்கவேண்டும்.

அவள் ஐந்தரை மணிக்கு வந்திருக்கவேண்டும். ரிஸர்ச் ஹாலுக்கு லாபரடரி வழியாகத்தான் தனிவழி.

உள்ளே போவது வருவது யாருக்கும் தெரியாது.

முதலில் பானுமதி வந்திருப்பாள். சுரேசன் அவளுக்காக உள்ளே காத்துக் கொண்டிருந்திருப்பார்.

அவள் வந்ததும் எப்படி அந்தக் காரியத்தைச் செய்தாரோ தெரியாது. பெதடின், ஸோடியம் பெண்டதால் அம்ஃபேடமீன் அல்லது லிஸர்ஜைட் (எல். எஸ். டி.) இதில் ஏதாவது ஒன்றை அவர் உபயோகித்திருக்க வேண்டும்.

இந்த ட்ரக்கை உள்ளே செலுத்தி, அவளை ஒரு மித மிஞ்சிய உல்லாசத்தில் மிதக்கவிட்டிருக்க வேண்டும். லிஸர் ஜைட் டோஸ் அதிகமாகி விட்டால் வருகிற பிரமைகளைச் சொல்லியே முடியாது. அமானுஷ்ய சக்தி வரும். அம்ஃபேட மீன் எடுத்துக் கொண்டால் ஸெக்ஸ் ஆர்ப்பரித்து வரும் இணங்காத மனங்கள்கூட செக்ஸுக்கு ஆசைப்படும்.

ஏதோ ஒரு பரவசத்தில் ஆழ்த்திவிட்டுத்தான் அவளைக் கெடுத்திருப்பார் என்று தெரிகிறது. அதை எப்படிச் செய் தார் என்று எனக்குத் தெரியாது.

இன்ஸ்பெக்டர் சிங் இடைமறித்தார்.

—சரி. மேலே சொல்லுங்கள்.

—இந்த மருந்துகள் ஏதோ கொடுத்து அவளைப் பரவச மாக்கியோ, நினைவு போக வைத்தோ அவர் கெடுத்திருக்க வேண்டும். பிறகு அவளைக் கொன்றிருக்க வேண்டும்.

—ஓ, ஸாடிஸ்ட்! என்றார் சிங்!

—ஸாடிஸ்ட் உணர்வால் செய்தாரா அல்லது நினைவு மீண்டும் வந்தால் அவள் அவர் காரியத்தைக் கண்டு பிடித்து விடுவாளே என்ற பயத்தால் அதைச் செய்தாரா என்று சொல்ல முடியாது. பானுமதி இறந்தாள்.

—பிறகு?

அவள் காதலன் பின்னர் வந்திருக்கவேண்டும். அவ னையும் கொன்றிருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் புலன் இல்லாமல் மறைக்க முடியும்!

—எப்படிக் கொன்றார்?

—தெரியாது. மருந்துகளால் கொன்றாரா, பலத்தை உபயோகித்தாரா, தெரியாது. காதலர்களைக் கொன்று விட்டு இரவு என்னைத் தேடிவந்தார்.— குமார்! உனக்கு நான் உதவினேன். எனக்கு நீ உதவு! என்றார். விஷயத்தைச் சொன்னார்.

நான் பயந்து போய் விட்டேன். சுரேசன் வெறும் பிசாசா, அல்லது பேய் அவரைப் பிடித்து விட்டதா என்று நினைத்தேன். அப்படி கோரமாக இருந்தார்.

—உதவினீர்களா?

எனக்கு வேறு வழியில்லை. டாக்ஸிடெர்மிஸ்ட் ராக வலுவை அழைத்துக் கொண்டேன். ரிஸர்ச் அறைக்குப் போனேன். சடலங்களை அப்புறப் படுத்தினேன். அந்த ரமாவுக்குச் செய்த சடங்குகளை எல்லாம் இந்த காதல்ஜோடிக் கும் செய்து வைத்தோம். மாடல் நம்பர் பத்து, பதினொன் ருக இப்போது அவர்கள் எங்கள் மியூசியத்தில் தொங்கிக் கொண்டிருக்கிருர்கள்.

சிங் பெருமுச்செறிந்தார்.

சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

பிறகு அந்த வேலைக்காரப் பெண் கேஸ் என்ன ஆயிற்று? என்று மீண்டும் தொடங்கினுர்.

34

—வேலைக்காரப் பெண் காவேரியை என்ன செய்தார், தெரியாது! ஆனுல் சுரேசன்தான் ஏதாவது செய்திருக்க வேண்டும். லாபரடரியிலிருந்து மியூசியத்திற்குள் போக ஒரு கதவும் வழியும் இருக்கிறது. சுரேசன் அது வழியாகப்போய் காவேரிக்காகக் காத்திருந்திருக்க வேண்டும். அவள் வந்ததும் அவளுக்கு என்ன ஊசி போட்டிருப்பாரோ, தெரியாது. அவளை என்ன செய்தார் என்றும் தெரியாது. அன்றிலிருந்து அந்தப் பெண்ணுக்குச் சித்தப் பிரமைதான்! சொந்த நினைவேயில்லை.

சிங் இடை மறித்தார்.

—அந்தப் பெண் உள்ளே பெருக்கப் போனதாகவும், உள்ளே எதையோ பார்த்து மிரண்டு போனதாகவும் சொன் ஞர்களே!

—அப்படி ஒன்றும் இல்லை. உள்ளே கத்தினுள் என்று இவரே கதைகட்டி விட்டார். யாரோ அட்டெண்டர் உள்ளே போய்ப் பார்த்தால் பெண் மூர்ச்சையானது போல்

கீழே கிடக்கிறுள். அவன் எல்லோரிடமும் வந்து சொன்ஞன். நாங்கள் உள்ளே போய் தண்ணீர் தெளித்தோம். சிகிச்சை செய்தோம் ! மத்தியானந்தான் நினைவு வந்தது.

—டாக்டரிடம் காண்பிக்கவில்லையா ?

—இல்லை.

—நினைவும் முழுநினைவு இல்லை. மனநோய்போல் ஏதோ ஒரு பிரமை. இரண்டு நாள் பாடிக்கொண்டும் ஒரேயடியாகச் சிரித்துக்கொண்டும் அலைந்துகொண்டுமிருந்தாள். மூன்ரும் நாள் குட்டையில் செத்துக் கிடந்தாள்.

—காரணம் என்ன என்கிறீர்கள் ?

—கூரேசன் ஏதோ செய்திருக்கிறுர். அவளது மரணத்திற்கும் அவர் காரணமாக இருந்திருக்கவேண்டும். ஆஞல் நிச்சயமாகச் சொல்ல முடியாது. இந்த விஷயத்திலே அவர் என்கிட்டே கலந்துகொள்ளவே இல்லை.

—நீங்கள் மேலே பேசுங்கள். மங்கலா கேஸ் என்ன ? என்ருர் சிங்.

சந்திரகுமார் கண்களில் இப்போது நீர் வந்திருந்தது. துடைத்துக்கொண்டார்.

—ஸார் ! மங்கலான்னு சொன்ஞல் எனக்குக் கண்ணீர் வந்துவிடும் ! அவள் என் இதயத்தின் சுருதி ! என் உள்ளத்தின் ராகம் !

—ஓ, என்று சொல்லி தலைநிமிர்ந்தார் சிங்.

—நான் அவளைக் காதலித்தேன். மனமாரக் காதலித்தேன்.

—இஸிட் ?

—ஆமாம் ஸார் !

—இந்த மியூசியத்திற்கு அவள் ஆராய்ச்சி செய்ய வந்தாள். சில பெண்களைப் பார்த்தால் என் மனம் உள்ளே விசில் அடிக்கும். இவளைப் பார்த்தவுடனே மனம் உள்ளே கீதம் பாடியது.

அவள் அழகு ஒரு காமத்தை தரவில்லை ; ஒரு கலையைக் காட்டியது. அவள் பேச்சு என் உணர்வுகளை கிளர்க்கவைக்க வில்லை. என் உயிரை மிதக்க வைத்தது.

அவ்வளவு தெய்வீக அழகு ஸார் அவள் ! மிருதுவாக புன்னகை புரிவாள் ஸார். ரோஸ் நிறத்திலே அப்படியே மனம் தளிர்விடும் ஸார்.

—இந்தப் பெண்ணை மனோகரிதான் அனுப்பி வைத்தாளா ? என்றார் சிங்.

—ஆமாம், அவள்தான் அனுப்பி வைத்தாள். அவள் அனுப்பிய நல்ல பெண்களில் இவள் ஒருத்தி ! முதல் நாள் அறிமுகம் ஆகும்போது விழியாலே என்னைப் பார்த்துச் சிரித் தாள். அவள் உடம்பும், நிறமும், இளமையும், போதை தரா மல் இன்ப எழுச்சிகளை மிருதுவாகத் தரும் அவளது மார்புக் கச்சிதங்களும், வடிந்த தொடை அழகுகளும், மெல்லியதாய் இறங்கிய அவள் இடைப் பிரதேசங்களும்...அப்பப்பா வர்ணிக்க எனக்கு சக்தியில்லை ஸார்.

—மேலே போங்க, குமார் என்றார் சிங்.

—நான் அவளைக் காதலித்தேன். அதே எண்ணத்தோடு அவளிடம் பழகினேன். சீக்கிரம் நாங்கள் காதலர்கள் ஆகி விட்டோம்.

—சுரேசன் கவனித்தாரா ?

—அதுதானே எனக்கு பயம் ! இந்தப் பெண்ணைப் பார்த்ததிலிருந்து அவர் பானுமதி கேஸைவிட அதிகம் பித்து ஆகிவிட்டார்.

அது உங்களுக்குத் தெரிந்துவிட்டதா ? என்றார் சிங்.

—ஆமாம். நன்றாகத் தெரிந்துவிட்டது. மங்கலாவை எச்சரிக்கை செய்து ஆங்கே வருவதை நிறுத்திவிடவேண்டும் என்று நினைத்தேன். நாங்கள் காதலர்களாகிப் பேச ஆரம் பித்த பிறகு உடனே எச்சரிக்கை செய்து அவள் வருவதை நிறுத்திவிட்டேன் அவள் ஆராய்ச்சிக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன்.

—பிறகு எங்கே சந்தித்தீர்கள் ?

—அவளே வருவாள் ! பஸ்ஸிலே வருவாள். மியூசியம் ஸ்டாப்புக்கு முந்தின ஸ்டாப்பிலே இறங்கிவிடுவாள். அங்கி ருந்து தோப்பு வழியாக எங்கள் குவார்ட்டர்ஸுக்கு வரலாம் அந்த வழியை அவள் பயன்படுத்தினாள்.

—சரி ! சுரேசன் என்ன செய்தார் ?

—அவருக்கு அந்தப் பெண் மேலே பெரியகண். அவளை நினைத்து ஆபீஸ் அறையிலேயே, 'மங்கலா சுப மங்கலா' என்று பாடுவார். நொடிக்கு ஒருதரம் இந்த அடியைப் பாடிக்கிட்டே இருப்பார். இது எல்லோருக்கும் தெரியும். அந்தப் பெண்ணை மீண்டும் எப்படியாவது அங்கே வரும்படி, முயற்சி எல்லாம் பண்ணினுர்.

மனோகரிக்கு போன் பண்ணி அவள் உதவியைக் கேட்டார். எதுவும் பலிக்கவில்லை. பத்து மாதங்கள் இந்த நிலையில் ஓடியிருக்கும். ஒருநாள் துரதிர்ஷ்டம் எங்களை பிடித்தது. மங்கலாவும் நானும் இங்கே செம்பருத்தித் தோப்பிலே கட்டி உருண்டுவிட்டு குவார்ட்டர்ஸுக்கு வந்துகொண்டிருந்தோம். அப்போது சுரேசன் பார்த்துவிட்டார்.

(இன்ஸ்பெக்டர் சிங் இங்கு மகரந்தப் பொடிகளை நினைவு கூர்ந்தார்.)

அவ்வளவுதான்! மங்கலா போனபிறகு என்னிடம் நேரில் வந்து சாடினுர். நான் அவரிடம் என் காதலைப்பற்றி மெள்ளத் தெரிவித்தேன். வந்ததே கோபம் அவருக்கு. ஓகோ! இந்த மியூசியத்தில் இருந்துகொண்டு காதலை வளர்த்தாயா? என்று கேட்டார். என்னைக் கண்டபடி திட்டினுர். எனக்கு அவள் காதலியாக இருக்கக் கூடாது என்றுர். அவளை மீண்டும் ஒருநாள் அங்கே வரவழைக்க வேண்டும் என்று கட்டளை இட்டார்.

நான் இணங்கவில்லை.

அவர் பிடிவாதம் பிடித்தார்.

இரண்டு பேருக்கும் வாக்குவாதம் நடந்தது.

கடைசியில் அவர்,—குமார்! நீ இணங்கவில்லை என்றுல் நீ ரமாவைக் கொலை செய்ததை போலீசுக்குத் தெரிவித்து விடுவேன் என்றுர்.

அசந்துவிட்டேன். பயந்துபோனேன்.

என்னைக் காட்டிக்கொடுப்பதன்மூலம் அவரும் ஒருகேஸில் மாட்டிக்கொள்வார் என்பது எனக்குத் தெரியும்.

ஆனுலும் அவர் எப்படியாவது தப்பித்துவிடுவார். நான் தான் அகப்பட்டுக்கொள்வேன் என்று ஒரு அசட்டு பயம் என்னைச் சூழ்ந்தது.

அவர் எனக்கு உறுதிமொழி கொடுத்தார். அதாவது அவர் மங்கலாவை நேரில் பார்க்கவோ, பேசவோ மாட்டார், வேறு எதுவும் செய்யமாட்டார்.

ஆனால் நானும் மங்கலாவும் காதல் லீலைகள் புரிவதை மற்றொரு அறையிலிருந்து பார்த்துக் கொண்டிருப்பார். அவ்வளவுதான்! இந்த ஒரு சுக அனுபவத்தை எனக்குக் கொடு என்று கெஞ்சிக் கேட்டார்.

இவர் ஒரு கொடுமைக்காரர்! இவர் மனம் வக்கிர நினைவுகளால் துருப்பிடித்துவிட்டது. என்று நினைத்தேன். வேறு வழி இல்லை. சம்மதித்தேன்.

மங்கலா என்னைப் பார்க்க வரவேண்டும் என்று அவளுக்குச் செய்தி அனுப்பினேன்.

அந்தச் செய்திக்காகவே மங்கலா காத்திருந்தாள். ஏனெனில் நாங்கள் எங்கள் அடுத்த சந்திப்பில் ஏதாவது கோவிலில் சென்று மாலை மாற்றித் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று உறுதி பூண்டிருந்தோம்.

அதற்கான நல்ல நாளைப் பார்த்துச் சொல்வதாக அவளுக்கு வாக்குறுதி அளித்திருந்தேன்.

எனவே, நான் மங்கலாவை வரும்படி செய்தி அனுப்பிய போது, அவள் எங்களுக்குள் திருமணம் நடக்கப்போவதாக நிச்சயமாக நம்பிவிட்டாள். அதற்காக வீட்டில் ஒரு கடிதாசியையும் எழுதி வைத்துவிட்டு வந்துவிட்டாள். பாவம்! அது அவளது கடைசிக் கடிதம்.

—என்ன நடந்தது என்றார் சிங்.

—நான் அவளுக்காக என் குவார்ட்டர்சில் காத்திருந்தேன். ஆனால் சுரேசன் வேறு உபாயம் செய்துவிட்டார். அவள் தோப்பு வழியாக வரும் பாதையில் டாக்ஸிடெர்மிஸ்ட் ராகவலுவை நிறுத்திவைத்து—மிஸ்டர் சந்திரகுமார் ரிஸர்ச் ஹாலில் உங்களுக்காகக் காத்திருக்கிறார் என்று சொல்ல வைத்துவிட்டார். பிறகு ராகவலுவே அவளை அழைத்துக் கொண்டு அந்த ஹாலுக்குப் போனார். உள்ளே சுரேசன் காத்திருந்தார் மங்கலாவை ராகவலு உள்ளே அனுப்பி விட்டுப் போய்விட்டார்.

நான் இருட்டும்வரை காத்திருந்தேன்.

மங்கலா வரவே இல்லை.

எனக்கு பயம் அதிகரித்தது.

ஏதாவது நடந்துவிட்டதா?

வீட்டுக்கு வெளியே வந்தேன். வெளியே பார்த்தால் சுரேசன் என்னை நோக்கி வந்துகொண்டிருந்தார். அதே பிசாசுப் பார்வை! தோற்றம்!

—வா ! என்று என்னை அழைத்தார்.

—எங்கே ? என்றேன்.

—ரிஸர்ச் ஹாலுக்கு என்ருர்.

பதட்டத்தோடு போனேன்.

ஹாலுக்குள் போனதும்.........

என் ரத்தம் உறைந்துவிட்டது. மங்கலா இறந்து கிடந்தாள்.

—பாவி என்று கூவினேன் சுரேசனைப் பார்த்து.

சுரேசன் சிரித்தார்.

—பாவி என்று சொல்லாதே ! நீயும் பாவிதான். நீயும் கொலை செய்தாய். நானும் செய்தேன். நாம் எல்லோரும் ஒரே உலகம் என்று சொல்லி பிசாசுபோல் சிரித்தார்.

என்னுல் தாங்க முடியவில்லை. தரையில் உட்கார்ந்து கொண்டு அழுதேன்.

சந்திரகுமார் இந்த இடத்தில் அழுதுவிட்டார்.

பிறகு தேம்பிக்கொண்டே, —ஸார் ! மற்ற பெண்களைச் செய்ததுபோலவே இவளையும் செய்தோம் ஸார் ! அவள் உடம்பைக் கூருக்கி.........

அவர், தம் முகத்தை மூடிக்கொண்டு விசித்தார்.

கடைசி விம்மலுடன்—அவளும் இப்போது மியூசியத்தில் தொங்குகிருள் ஸார் !

குமார் எல்லாம் கூறி முடித்த பிறகு சிங் அப்படியே உறைந்துபோய் உட்கார்ந்திருந்தார். ஆகா ! மியூசியத்தில் ஒரு ஸாடிஸ்ட் என்னவெல்லாம் வேலை செய்துவிட்டார் என்று நினைத்தார். அவருக்கே மனம் கலங்கியது.

வெகு நேரம் இருந்தபிறகு அவர் எழுந்தார். மேலே காரியங்களை உடனடியாகக் கவனிக்கவேண்டும்! நேராக சுரேசன் வீடு சென்று அவரை விசாரிக்க நினைத்தார். அவரையும் குமார், ராகவலு ஆகியவர்களையும் அரெஸ்ட் செய்ய நினைத்தார்.

சுரேசன் வீட்டுக்கு விரைவாகச் சென்ருர். உள்ளே போனபோது சுரேசன் படுக்கையில் படுத்து இருந்தார். எழுப்பியும் எழுந்திருக்கவில்லை. அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்தார். சுரேசனிடம் மூச்சில்லை. பேச்சில்லை. சட்டென்று சிங்குக்கு விஷயம் புரிந்தது. சுரேசன் மாத்திரைகளை விழுங்கி இறந்துவிட்டார். சந்திரகுமார் வீட்டில், சிங்

வெகு நேரம் விசாரணை நடத்துகிறார் என்று தெரிந்ததும் சுரேசன் இந்த முடிவுக்குத் தயாராயிருந்திருக்கவேண்டும்.

அடுத்த அறையில் சுரேசனின் மனைவி கட்டிலில் வழக்கம் போல் கண்ணைமூடிக்கொண்டு கிடந்தாள்.

அவள் அருகில் சென்று அவளைப் பார்த்தபோது அவளுக்கும் மூச்சு அடங்கிவிட்டது தெரிய வந்தது.

சுரேசன் அவளுக்கும் மாத்திரைகளைக் கொடுத்து மீளாத் தூக்கத்தில் ஆழ்த்தி இருக்கவேண்டும்.

சிங் திகைத்துப்போய் நின்றார்.

35

இந்த கேஸை முதன்முதலில் கமிஷனர் முதலானவர்களுக்கு சிங் அறிவித்தபோது போலீஸ் இலாகாவே பரபரப்பு அடைந்தது.

பிறகு செய்திகள் பத்திரிகைகள் மூலம் வெளிவந்தபோது நாடே பரபரத்தது.

எங்கும் அதே பேச்சாக இருந்தது.

வழக்கு நடந்தபோது நீதிபதிகள் இன்ஸ்பெக்டர் சிங்கைப் பெரிதும் பாராட்டினார்கள்.

அவரது பொறுமையான ஆய்வினால்தான் கேஸ் புலனாகியது என்றும் கூறினார்கள்.

சந்திரகுமாரும், ராகவனும் ஐந்து ஆண்டு கடுங்காவலில் சிறைக்குள்ளே வாடுகிறார்கள்.

இன்ஸ்பெக்டர் சிங்குக்கு ஒரு புதுப் பெருமை!

போலீஸ் துறையில் நூதனமாக ஒரு ஆவியிடம் 'கன்சல்ட்' செய்தே ஒரு பெரிய கொலைக் கேஸைக் கண்டுபிடித்துவிட்டார்!

அவர் அப்படிச் செய்ததை மற்றவர்களிடம் சொன்னால் அவர்கள் நம்புவார்களோ, நம்பமாட்டார்களோ!

ஆனால் அவர் மட்டும் நம்பினார்.

கைரேகை, ரத்தச் சோதனை இவைகள் மூலம் துப்பு துலக்குவதுபோல், ஆவிமூலம் துப்புத் துலக்குவது அவரது புதுக் கண்டுபிடிப்பு என்று நினைத்தார்.

அப்படி நினைத்துப் பெருமைப்பட அவருக்குமுழு உரிமையும் உண்டு.

மின்நூல் கூடம்

DIGITAL LIBRARY

Do you enjoy reading but can't get to your local library?

Then let us bring the library to **YOU**!

மின்நூல் ஆக்கம் : தமிழ் நேசன்